

கல்கி
இந்த இதழில்:
காற்றினிலே வரும் கீதம்
KALKI
4.9.1966
35 காசு
இலங்கையில் 35 சதம்
தபால் செலவு தனி

ஃபாஷனில் கண்ணுள்ளவர்கள்



விரும்புவது டாட்டா டெக்ஸ்டைல்ஸ் வாயில் புடவைகள். வழிவழி வந்த எழில் வகைகளோடு, தற்கால தினுசுகளிலும் கிடைக்கும் எண்ணற்ற பிரிண்ட் வகைகளில் ஒன்றுதான், வெள்ளைப் பின்னணி கொண்ட இந்த ஃபாஷன் டிசைன். கண்ணைக் கவரும் வண்ண வண்ண ரகங்களில் வருகின்றன டாட்டா டெக்ஸ்டைல்ஸ் வாயில் புடவைகள்— அவற்றின் புதுமைப் பொலிவு நாள் முழுவதும் நீங்காது நிலைத்து நிற்கும்.

எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும்

TATA *Textiles*



போக்குவரத்துத் துறையில் எண்ணெயின் உயரிய சேவை


போக்குவரத்திற்கு இன்றியமையாதது எண்ணை. போக்குவரத்துச் சாதனம் எதுவாயினும் அதை இயக்கி ஓட்ட உதவுவது எண்ணை தான். மெதுவாகச் செல்லும் சைக்கிளிலிருந்து வாயு வேகத்தில் பறக்கும் ஜெட் விமானம் வரை எல்லா வாகனங்களுக்கும் தேவையான விசைச் சக்தியளிக்கவோ, எண்ணைப் பசையிடவோ எண்ணை மிகவும் அவசியமாகிறது.

இண்டியனுயில், பலவிதமான உயர்தர எண்ணை வகைகளைத் தயாரித்தளிப்பதன் மூலம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் தொழில் ஆகிய துறைகளில், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவைகளைத் திறம்படப் பூர்த்தி செய்து சேவை செய்து வருகிறது.

INDIANOIL

—[illegible]

இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்



கல்கி

பொருளடக்கம்

பராபவ ஆவணி 19 ★ செப். 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

நினைவுத் திரையில்...

மீரா சித்தூரை விட்டுப் போனதிலிருந்து மூடிக் கிடந்த கண்ணன் கோயிலுக்குப் போகுன் மேவார் ராணா. கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். இருளடைந்திருந்த கோயில் திடீரென்று எண்ணற்ற தீபங்களுடன் ஜகஜ்ஜோதியாய் விளங்கியது. அதே சமயத்தில் மீராவின் குரல் கேட்டது. அதனுடன் ஆயிரமாயிரம் குரல்கள் சேர்ந்து,

"மீரா இதயம் கோயில் கொண்டான்
மீரா அடிமை கொண்டான்
மாறிமாறி வரும் பிறவிகள் தனிலும்
மாறும் பிரேமை தந்தான்!"


என்று ஒலித்துக் கோயில் மண்டபத்தில் எதிரொலி செய்தன....

மீரா எண்ணற்ற மக்களின் இதயக் கோயிலில் இன்றைக்கும் குடிகொண்டு வாழ்ந்து வருகிறாள்.

- மீரா திரைப்படக் கதைச் சுருக்கம்.

- கல்கி அக்டோபர் 28, 1945




இந்தக் குண்டுகள் சில சமயங்களில் நம் கையிலேயே வெடித்து விடுவதுதான் ஆபத்தாக இருக்கிறது.
பெர்மிட் லைசென்ஸ் முறை
ஸி.சுப்பிரமணியம் விவகாரம்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ■ இதழ் 5

முன்னேற்றம்: தரித்திரத்திலிருந்து திவாலா நிலைமைக்கு!

அந்நிய அரசாங்கங்கள் இந்திய சர்க்காருக்கு ஏராளமாகக் கடனுதவி தருவதாலேயே காங்கிரஸின் தோல்விகளும், தவறுகளும் மக்கள் கண்களிலிருந்து மறைக்கப்பட்டு அவர்கள் அக்கட்சியின் ஆட்சியை நீடித்து வருகிறார்கள் என்று தலைவர் ராஜாஜி கடந்த சில காலமாகக் கூறுவதை வாசகர்கள் அறிவர். அவர் இப்படி நமக்கு உதவும் நாடுகளைப் பற்றிச் சொல்லலாமா என்று சிலர் கேட்பதுண்டு. ராஜாஜியுமே தாம் மிகுந்த மனக் கசப்பின் பேரில்தான் இப்படிச் சொல்லிவிட்டோமோ என்று யோசித்ததுண்டு. லண்டன் பொருளியல் கலாசாலையின் புகழ்பெற்ற பேராசிரியராகிய பி. டி. பார் (P. T. Bauer) அவர்கள் சென்ற ஆண்டு நிகழ்த்திய உரை ஒன்றைப் படித்தபின் ராஜாஜிக்குத் தமது கருத்தில் நிச்சயமான உறுதி ஏற்பட்டது என்று அவரே கூறுகிறார். பேராசிரியர் பார் அவர்களின் ஆழ்ந்து பரந்த கருத்துக்களின் சாரத்தையே இவ்விதழில் தலையங்கமாகச் சுருக்கித் தருகிறோம்.

முன்பு காலனி ஆதிக்கத்திலிருந்த நாடுகள், பின்தங்கிய நாடுகள் இவற்றின் பொருளாதாரப் பிரச்னைகளில் தேர்ந்த அறிவுள்ளவர் பேராசிரியர் பார் என்பது குறிப்பிடத் தக்கது.

உலக யுத்தத்துக்குப் பின் அமெரிக்காவின் மார்ஷல் உதவியால் ஐரோப்பிய நாடுகள் முன்னேறியதை முன்னோடியாகக் கொண்டு, இப்போது பின்தங்கிய நாடுகளுக்குக் கடன் தருவது பொருந்தாது என்று பார் எடுத்துக் காட்டுகிறார். ஐரோப்பாவில் இவ்வுதவியைத் தக்கபடி கிரகித்துப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அமைப்பு முன்னமேயே இருந்தது; அதனால்தான் நாலே ஆண்டுகளில் மார்ஷல் உதவியை நிறுத்தி, அவை சுயமாகப் பொருளாதார பலம் பெற முடிந்தது. சிதைந்த பொருளாதாரத்தை மீண்டும் சீர்செய்யும் பணி அந்நாடுகளில் நடைபெற்றது. ஆனால் பொருளாதாரத்தில் என்றுமே பின்தங்கிய நாடுகள் தங்களுக்கு ஏராளமாகப் பொருளுதவி கிடைக்குமாயின் அதனை விவேகமாகப் பயன்படுத்திக் கொள்ள இயலாது என்பதை பார் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்.

அவர் மேலும் அறிவுறுத்தும் உண்மைகள் வருமாறு:

மிகவும் பிரபலப்படுத்தப்பட்டிருக்கும் அந்நியக் கடனுதவிகளால் எந்தப் பின்தங்கிய நாட்டின் வாழ்க்கைத்தரத்திலும் குறிப்பிடத் தக்க அபிவிருத்தி ஏற்படவில்லை. மாறாக, பெருத்த கடனுதவி பெறுபவர்களின் இயற்கையான அபிவிருத்தி வாய்ப்பும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சமீப காலத்தில் சிறப்பான பொருளாதார முன்னேற்றம் கண்டுள்ள ஹாங்காங், ஜப்பான், மலேயா இவை அந்நியக் கடனுதவி பெறவில்லை. ஒரு சர்க்காருக்கு இன்னொரு நாட்டுச் சர்க்கார் உதவி தருவதால்தான் பொருளாதாரம் முன்னேறும் என்று எண்ண அவசியமில்லை என்பதற்கு இது நல்ல சான்று.

பொருளாதார வளர்ச்சியை அந்நிய உதவி தூண்டவில்லை என்பதற்கு இந்தியா ஒரு சான்று. (இது பேராசிரியர் பார் சொல்வது.) மேல் நாடுகளிடமிருந்து பதின்மூன்றாண்டு காலம் உதவி பெற்ற பின், ஐந்தாண்டுத் திட்டங்கள் பல அமுலாக்கிய பின், 1964—65ல் இந்தியாவின் நிலை என்ன? உணவு, அந்நியச் செலாவணி இரண்டிலுமே ஆண்டுதோறும் முன்னை நெருக்கடி இப்போது தீவிரமாயிற்று. 'இன்னும் அந்நிய உதவி மருந்தில் ஓர் ஊசி போட்டுவிட்டால் போதும்; அதற்கு மேல் வேண்டாம்;

அதன்பின் எங்கள் பொருளாதாரத்தை நாங்கள் நிலைப்படுத்திக் கொள்ளும் தன்னிறைவைப் பெறுவோம்' என்று அந்நிய உதவியின் ஆதரவாளர்கள் நீண்ட காலமாகப் பேசி வருகிறார்கள். இருந்தபோதிலும் ''தன்னிறைவு'' என்பது வெறும் ஜாலகர்ஷண மந்திரமாகவே இருக்கிறது. பெரிய அளவில் பொருள் உதவியும், உணவு உதவியும் பெற்றுவரும் இந்தியா இப்போது அந்நிய நாடுகளைச் சார்ந்து நிற்பதைச் சகஜ நிலை போலவே நினைக்கத் தொடங்கிவிட்டது.

முடிவில்லாமல் அந்நியக் கடன் பெறுவதில் தெளிவாகத் தெரியும் ஓர் ஆபத்து உண்டு. கடன் பெறுபவன் நாளுக்கு நாள் கடனை அடைக்க முடியாத திவாலா நிலைக்கு வந்துகொண்டே யிருப்பான். தன் முயற்சியின்றிப் பிற உதவியைச் சார்ந்தே வாழ நினைப்பதுதான் திவாலா நிலைமை. அந்நியக் கடன் அதிகமாக ஆக, அதைத் தீர்க்க முடியாமல் செலாவணிச் சிக்கல் ஏற்படும். கடனைத் திருப்பித் தர முடியாது என்ற நிலை உண்டாகிவிட்டால், கடன் பெற்றவர்களுக்கு அதன் பின் அந்தஸ்தும், கௌரவமும் கோர இடமேது? முன்னேற்றத்துக்கு அவசியமான தன்னம்பிக்கையும் இவற்றோடு போய்விடும். தரித்திர நிலையிலிருந்து திவாலா நிலைக்குச் செல்வதே அந்நிய உதவியின் விளைவாக முடியும். இந்தியாவின் சமீப காலப் பொருளாதார சரித்திரம் இதைத்தான் நிரூபிக்கிறது.

அந்நிய சர்க்காரின் உதவியை இன்னொரு சர்க்கார்தான் பெறுகிறதேயன்றி, மக்கள் பெறவில்லை. இதனால் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அதன் சர்க்காருக்கு அதிக சக்தி ஏற்படுகிறது. ஏராளமான நிதியத்தைக் கையாள்வதால், அரசாங்க அதிகாரத்தை ஓரிடத்தில் குவிக்க வேண்டும் என்பதும் இதன் விளைவாக உண்டாகிறது. கடன் பெறும் நாடு மனமார இப்படி எண்ணாவிடினும் கூட, இது தவிர்க்க முடியாத ஒரு விளைவாகும். சர்க்காரிடம் அதிகக் கடன் நிதியம் இருப்பதால் அது எந்தத் தொழில் துறையிலும் தன் பங்கை விஸ்தரித்துக் கொண்டு அதற்கு அநுகூலமாகத் தனியாரைக் கட்டுப்படுத்த முடிகிறது. சுருங்கச் சொன்னால் பொருளாதாரம் முழுவதையும் சர்க்காரின் இஷ்டப்படி நடத்த முடிகிறது. 'நீங்கள் அபிவிருத்தி காட்டினால்தான் உதவியை நீடிப்போம்; உள்நாட்டுச் சேமிப்பை நீங்கள் அதிகரித்தால்தான் தொடர்ந்து கடன் வழங்குவோம்' என்று உதவி தரும் நாடுகள் சொல்லுவதும் இந்த விளைவையே வலுப்படுத்துகின்றன. ஏனெனில் அபிவிருத்தி காட்ட வேண்டும் என்பதற்காக இயற்கைக்கும் தேவைக்கும் மாறாக, சில பெரிய திட்டங்களைப் போட வேண்டியிருக்கிறது. தொழில் துறையில் ஏராளமாகச் செலவிடவேண்டியிருப்பதால் சேமிப்பை அதிகமாக்குவதற்காக விவசாய முன்னேற்றத்தைக் கைவிட நேருகிறது. 'வெளி நாடுகளையே சிரமப்படுத்தாமல், உள் நாட்டிலும் முடிந்த அளவு நிதி திரட்டுகிறோம்' என்று நிரூபிப்பதற்காக வரிகளை உயர்த்த நேருகிறது.

ஐரோப்பாவில் இன்று நல்ல நிலைமையில் உள்ள எந்த நாட்டிலுமே ஆரம்ப காலத்தில் 'அபிவிருத்தித் திட்டங்கள்' என்ற பெயரில் பெரும் திட்டங்கள் போடப்படவில்லை. இதைக் கண்ட பின்னும், இவ்வாறு தவறாக நடக்கிறது. கடன் கொடுக்கும் நாடுகளின் திருப்திக்காகப் பெரிய திட்டங்களைப் போடத் தோன்றுகிறது. இதற்கு உள்நாட்டு வரிகள் மட்டும் போதாததால் பணவீக்கமும் உண்டாகிறது. அதாவது நாணய மதிப்புக் குறைகிறது. உடனே அந்நியச் செலாவணிச் சிக்கல் முற்றிவிடுகிறது. இதைக் காரணம் காட்டியே, எந்தப் பொருளை எவ்வளவு ஏற்றுமதி - இறக்குமதி செய்வது என்று நிர்மாணிக்கிறார்கள். அதாவது பண்டங்களின் உற்பத்தியை அரசாங்கத்தின் விருப்பப்படி கட்டுப்படுத்துகிறார்கள். இவ்வாறு கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பொருளாதாரத்துக்குச் சம்பந்தமற்ற வேறு விதங்களிலும் பிரயோகிக்க முடிவதால், இதனால் லாபமடைபவர்கள் திட்டங்களையும், அந்நிய உதவியையும் ஆதரித்தே வருகிறார்கள்.

அந்நிய உதவிக்கும், செலாவணிச் சிக்கலுக்குமுள்ள தொடர்பை உணர்ந்தால், கடன் பெறும் நாட்டைத் திவாலாக்குவதற்கு அந்நிய உதவி எவ்வளவுக்குக் காரணம் என்பது புரியும். பெருத்த வரிச்சுமை, சர்க்காரின் லாபமற்ற தொழில் துறை விஸ்தரிப்பு, ஒரு சில இனங்களில் சர்க்காரின் ஏகபோக்கியம், லைசென்ஸ் முறை இவை யாவற்றுக்கும் அந்நியக் கடன் உரமூட்டுகிறது. லைசென்ஸ் முறை மட்டுமின்றிப் பல விதங்களில் சர்க்கார் சலுகைகள் காட்டுவதற்கு இது உதவுகிறது. பொருளாதாரத்தில் மக்களின் வாழ்வைப் பாதிக்கக் கூடிய விதத்தில் சர்க்காரின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் அமைந்த பின் பொருளாதாரச் சக்தி அரசியல் வசமாகி விடுவதும், அதன் துஷ்பிரயோகத்தைக் குறித்து நாடு கவலைப்படுவதும் இயற்கை.

ஆக, விஸ்தாரமான பொருளாதாரத் திட்டம் என்கிற பெயரில் அந்நிய உதவி கொண்டு செய்யப்படும் காரியங்கள் ஒரு நாட்டின் வளத்தை அதிகரிக்கப் பயன்படவில்லை; அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து வைக்கவே அவை பயனாகின்றன. பொருளாதாரத்தை உயர்த்துவதோடு மனித மாண்பை வளர்க்கவும், சமுதாய மனப்பான்மையைத் திருத்தவும், முன்னேற்றத்துக்கு இசைவான சமூக அமைப்புக்களை ஏற்படுத்தவும் அந்நியக் கடன்கள் உதவி புரியவில்லை. மாறாக, இவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கவும் கூடும். வரிகளாலும், கட்டுப்பாடுகளாலும் சர்க்கார் அதிகத் தொழில் பிரவேசம் செய்தால் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவ

இல்லை; மக்களின் வாழ்க்கைத் தரம் குறைவதொன்றே இதன் விளைவு. அது எதிர்காலத்தில் உயரும் என்ற நம்பிக்கைக்கும் உறுதி கிடைக்கவில்லை. பயிர்த்தொழில் செய்து, விளைபொருளை விற்று, அதைக் கொண்டு வாழ்பவர்களின் உற்சாகத்தைச் சர்க்காரின் வரி முறைகளும், கட்டுப்பாடுகளும் மிகவும் பாதித்திருக்கின்றன. 'முதலீடு செய்யவேண்டும்' என்ற அரிப்பில் லாப நஷ்டங்களைப் பாராமல், பிரம்மாண்டமான 'கண்காட்சி' அம்சங்களுக்கு ஏராளமாகச் செலவிடுகிறார்கள்.

ஒரு சர்க்காருக்கு இன்னொரு சர்க்கார் உதவி செய்வதால், பொருளாதார விதிகளின்படி இயற்கையாக நிலவும் மார்க்கெட் நிலவரத்தைக் கவனிக்காமல், காரியம் செய்ய முடிகிறது. இதனாலும் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது.

திட்டம், கடன், முதலீடு இவற்றிலேயே சர்க்காரின் கவனமெல்லாம் இருப்பதால் நிருவாகம் என்ற முக்கியமான விஷயத்தை அது அடியோடு புறக்கணித்து விடுகிறது. திட்டம் போடுவதில்தான் சர்க்காரின் கவனம் உள்ளதே தவிர, ஆட்சி புரிய அதற்குத் திறமை இல்லை என்று தோன்றுகிறது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பது, நிதிகளைத் தக்கபடி நிர்வகிப்பது, போக்குவரவு, கல்வி அபிவிருத்தி இவற்றைக்கூடச் சர்க்கார் புறக்கணிக்கத் தொடங்குகிறது.

அரசியல் ஆதிக்கம் ஓங்கியுள்ள கோஷ்டிகள், தங்களுக்குப் பிடிக்காத போக்குகளைக் கருணையின்றி அழிப்பதற்கும் இடம் ஏற்படுகிறது.

அரசாங்கத்தின் கொள்கைகளால் விளைந்துள்ள இவ்வளவு நிலைமைகளையும் மக்களிடமிருந்து மறைப்பதற்கு, அந்நிய நாட்டிலிருந்து பொழிகிற கடனுதவி வழி செய்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சர்க்கார் நன்கொடைகளைத் தாராளமாகப் பெறும்போது நாட்டு மக்களின் நெறியே பாதிக்கப்படவும் இடமுண்டு.

பேராசிரியர் பார் அவர்களின் கருத்துக்களைப் பார்க்கும்போது ராஜாஜியின் அறிவு காட்டும் பாதைக்கு இணையவே அவை செல்வதைக் காண்கிறோம். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. சுயநலமின்றி ஒரு பிரச்னையை மனத்தெளிவுடன் ஆராயத் தொடங்கி விட்டால், உண்மை என்பது உலகம் முழுவதற்கும் ஒரேபோலத்தானே தெரியும்?

ஒரிஸ்ஸா காங்கிரஸ்

காங்கிரஸ் அக்ராசனர் காமராஜர் ஒரிஸ்ஸா காங்கிரஸ் கட்சித் தேர்தலை நடத்தும் பொறுப்பை ஸ்ரீ பட்நாயக்கிடம் ஒப்படைத்திருக்கிறார்! ஸ்ரீ பட்நாயக் எத்தகைய அவப் பெயருடன் முதன்மந்திரி பதவியை விட்டு விலக நேர்ந்தது என்பதை யாரும் மறக்கவில்லை. அவரைக் காப்பாற்ற நேருஜி தமது சொந்தச் செல்வாக்கை எவ்வளவோ பயன்படுத்திப் பார்த்தார். பலிக்கவில்லை. அவர்மீது இருந்த குற்றச்சாட்டுகள் அத்தன்மையனவாக இருந்தன.

இதிலிருந்தே ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் காங்கிரஸ் எவ்வளவு பலவீனமான நிலையிலுள்ளது என்பதை உணரலாம். நேர்மைக்குப் புறம்பான வழிவகைகளையும், கெடுபிடிகளையும் கடைப்பிடிக்கும் ஒருவர் தலைமை தாங்கினால்தான் தேர்தலில் வெற்றி காண முடியும் என்று காங்கிரஸ் தீர்மானித்து விட்டது! ஒருவரை அறிந்துகொள்ள அவரது நண்பர்கள் யார் என்று தெரிந்து கொண்டால் போதும் என்பார்கள். வருகிற தேர்தலை நடத்த இன்று காங்கிரஸ் எத்தகைய ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறது என்பதைப் பார்த்தே காங்கிரஸின் தர்மநிலையைப் புரிந்துகொள்ளலாம். பொது வாழ்வில் சத்தியத்துக்காகப் பாடுபட்ட காந்தி மகான் வளர்த்த காங்கிரஸை எவ்வளவு பெரிய பள்ளத்தில் தள்ள முற்பட்டு விட்டார்கள் இன்றைய காங்கிரஸார்! இதைப் பார்த்துக் கொண்டிருந்தும், ''காந்தி வளர்த்த காங்கிரஸ்'' என்று கருதி ஆதரவு தருவது போன்ற பாபச் செயல் வேறில்லை!

பொதுவுடைமை நாட்டில் தனியுடைமை!

பொதுவுடைமை நாட்டில் தனியுடைமைப் பிரசாரம் பலமாக நடைபெற்று வருகிறது. ருஷ்யாவில் ரேடியோ, இஸ்திரிப் பெட்டி, குளிர்பதனப் பெட்டி முதலியவற்றை வாங்கிச் சொந்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை மக்களுக்குத் தலை தூக்கியுள்ளது. கூடவே பொதுவுடைமை நாட்டில் தனியுடைமையாகப் பொருள்களை வைத்துக் கொள்வதை அரசாங்கம் குற்றமாகக் கருதித் தண்டிக்குமோ என்று ஐயுறுகின்றனர். இந்த ஐயத்தைப் போக்கும் வகையில் ''இஸ்வெஸ்தியா'' என்ற அரசாங்கப் பத்திரிகையில் மேற்கண்ட பொருள்களையும் வீடு வாசல்களையும் வாங்கித் தனியுடைமையாகக் கொள்ள வேண்டும் என்று நினைப்பதில் தவறு இல்லை என்று மக்களை ஊக்கப்படுத்தும் வகையில் கட்டுரை வெளியாகியிருக்கிறது. அப்படி விரும்புவது 'நியாயம்; இயல்பான உணர்ச்சி' என்றெல்லாம் உற்சாகமூட்டும் வகையில் எழுதியுள்ளது. நமது நவீன சோஷலிஸ்டுகள் இதைச் சற்று கவனிக்க வேண்டும்.



ராஜாஜியின் கருத்துக்கள்

இன்றிருப்பதைவிடத் தேர்தல் செலவு களைக் குறைத்தாலொழிய இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற முடியாது. தேர்தல் செலவுக்கு அரசாங்கத்தில் ஏதோ ஓர் உச்சவரம்பு வைத்திருப்பினும், இது உண்மையான நடைமுறையை எடுத்துச் சொல்லவில்லை. அபேட்சகரோ, அரசியல் கட்சியோ இந்த வரம்பைவிட மிக அதிக மாகச் செலவழிக்க வேண்டியுள்ளது. அதிகப் பொருள் வசதியற்றவரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்குச் செய்ய வேண்டிய தென்ன என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். மோட்டார் வண்டிகளில் அதி காரிகள் வீடு வீடாகச் சென்று வோட்டுச் சேகரிக்க வேண்டும் என்றும், வாக்காளர் களுக்கு அடையாளச் சீட்டு தருவது அர சாங்கத்தின் பொறுப்பாக வேண்டும் என்றும் நான் கூறி வந்திருக்கிறேன். இப் போது இவ்வேலைகள் 'தனியார் துறை'யில் இருக்கின்றன. நான் சொல்லும் மாற்று யோசனை திருப்திகரமாக இல்லாவிடில் வேறு உபாயம் கண்டாக வேண்டும். எவ்வாறு யினும், தேர்தல் செலவுகளைக் குறைக்க வேண்டியது அத்தியாவசியத் தேவை.

★

உருக்குக் கம்பெனிக்குச் சலுகை காட்டின தாகப் பார்லிமெண்டில் அடிபட்ட விவாதம் ஒருவாறு முடிந்து விட்டது. இதிலிருந்து பெற வேண்டிய பாடம் உண்டு. ஆனால் தனி மனிதர்களைக் குறித்துக் கிளப்பப்பட்ட உணர்ச்சிகளில் இந்தப் பாடம் இருட்டடிப் பாகி விட்டது.

கொள்கைகளை விவாதிப்பதைவிட, மந் திரிகள், உயர் அதிகாரிகள் ஆகியோரை ஆதரிப்பதிலும், தாக்குவதிலுமே சர்க்கார் கட்சி, எதிர்க்கட்சி இரண்டும் ஈடுபட்டுள் ளன. இதில் உண்டாக்கிய உணர்ச்சிக் கிளர்ச்சியையே ஓர் ஆறுதலாக நினைப்பது பரிதாபம். அரசியல் என்பது இதுதான் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. பத்திரிகைகளில் இவ்விஷயமே பத்தி பத்தி யாக இடத்தை நிரப்பி வருகிறது.

தொழில் துறையில் உள்ளவர்கள் யாவ ரும் சிறைக் கைதிகள் போலாகி விட்டனர். குற்றவாளிக்கும், ஆஸ்பத்திரியில் படுத் திருக்கும் நோயாளிக்கும் நடமாடுவதற்கு வெகு சிறிய சுதந்திரமே தந்திருப்பதுபோல் தொழில்துறையினரும் நடத்தப்படுகிறார்கள். சுதந்திர வாழ்வு வாழ்வதாகச் சொல்லப் படும் மக்களை இப்படி நடத்துவது சீயுக்த மான கொள்கையா? அரசாங்கத் தொடர் பைப் பெர்மிட் — லைசென்ஸ் கொள்கை விஷமாக்கி விட்டது. அதோடு பொருளா தாரத்தையும் பாதித்துவிட்டது. இது ஜன நாயகத்தைப் பிடித்த ஒரு வியாதி.

★


அந்நிய சர்க்கார்களிடம் இந்தியா பட் டுள்ள இமாலயக் கடன் சுமைகளிலிருந்து நாட்டை நாம் எப்படி விடுவிக்கப் போகி றோம்? — இந்தக் கேள்வி நம் மனச்சாட்சியின் மீது ஒரு கனத்த சுமையாகப் பதிந்திருக்க வேண்டும். தந்தை ஒருவர் பூர்வீகச் சொத்தை யெல்லாம் அழித்து விட்டு, தமது பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் பெரிய கடன்களை வைத்துவிட்டுப் போனால் எப்படியோ அப்படியே தேசத்தின் விஷயத் தில் செய்யப்படுகிறது. இந்தத் நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதால் தான், இதனை மனச்சாட்சிக்குரிய பிரச்னை என்று சொல்கிறேன். இப்போது நாடு பட்டுள்ள கடன்களிலிருந்து அதை மீட்க வேண்டுமெனில் வீண் செலவாளிகளை மக்கள் பதவியிலிருந்து நீக்க வேண்டும். புதிய ஆட்சியொன்று புதிய வாழ்வைத் தொடங்க வழி செய்ய வேண்டும்.

★

'மார்ச் அப் தி நேஷன்' பின்வருமாறு எழுதுகிறது :


> பம்பாய் என்ற ஒரே நகரத்தில் ஒரே தினத்தில் காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் நிதிக்காக 55 லட்சம் ரூபாய் திரட்டியிருக்கிறது. இந்தப் பணம் வேறு எந்தக் காரியத்துக்கும் போய் விடாமல் பார்த்துக் கொள்வதற்காக மந்திரிகள் மனுபாய் ஷா, சதோபா படேல் ஆகியோ ரோடு காங்கிரஸ் பொருளாளர் அதுல்ய கோஷும் உடன் சென்றார்.
>
> பணம் பற்றுவதற்குக் கைக்கொள் ளும் உபாயம் விசித்திரமானது; அரு வருப்பூட்டுவது. ஒரு பிரபல பாங்கின் அலுவலகத்தில் இந்த அதிகாரபூர்வமற்ற "வரி வசூல் அதிகாரிகள்" உட்காரு கிறார்கள். பாங்கில் கடன்பட்டுள்ளவர்கள் யாவரும் அழைத்து வரப்படுகிறார்கள். ஒவ்வோர் ஆடாகப் பலிக்கு வருகிறது; ஒவ்வொன்றின் கழுத்தும் வெட்டப்படு கிறது.
>
> பல லட்சம் ரூபாய்க்கு ஓவர்—டிராப்ட் வாங்கியுள்ள ஒருவர், பாங்கின் தலைவர் முக்கியமான டைரக்டர்கள் ஆகியோரின் முன்பு இந்தத் தில்லி ஜமீந்தார்களுக்குப் பணம் தர மறுப்பது இயலாத காரியம்.
>
> இதேபோல் மந்திரி மனுபாய் ஷா அகமதாபாத்துக்கு விஜயம் செய்து, ஒரே நாளில் பத்து லட்சம் ரூபாய் நிதி திரட்டினார்.





மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் கிளைமடம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் சிறந்த கந்தசுவாமி க்ஷேத்திரமாகிய நல்லூரில் ஸ்தாபனம் செய்ய விருக்கிறார்கள். ஸ்ரீ சி. சிவசுப்பிரமணிய அய்யர் ஆடிக் கிருத்திகையன்று மதுரை ஆதீன கர்த்தர் அவர்களிடம் மந்திர காஷாயம் பெற்று, ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் என்று தீக்ஷா நாமம் பெற்று, அக்கிளை மடத்தின் அதிபராகிறார்.

'குருவாயூரப்பன்' திரைப் படத்தை ஜனாதிபதி கண்டு களித்து, அதன் டைரக்டர் திரு எஸ். ராமநாதனைப் பாராட்டுகிறார்.




'மனம் ஒரு குரங்கு' நாடகத்தை நூறாவது தடவை வெற்றிகரமாக நடத்திய கலைஞர் 'சோ'வுக்கு ஸ்ரீ டி. கே. சண்முகம் கதராடை போர்த்திக் கௌரவிக்கிறார்.



பரங்கிமலைக்கு அருகில் உள்ள பத்து ஏக்கர் நிலத்தில் முத்துரங்க மண்டபம், - தியாகிகள் நினைவுச் சின்னத்துக்கு ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் அடிக்கல் நாட்டுகிறார்.

கலைமகள் காரியாலயத்தினர் தயாரித்துள்ள 'காந்திஜியின் நினைவுகள்' புத்தகத்தைச் சென்னை சபாநாயகர் திரு செல்லபாண்டியன் சமீபத்தில் வெளியிட்டார். திரு ம. பொ. சி. பாராட்டுரை வழங்குகிறார்.





காற்றினிலே வரும் கீதம்

சித்தப் பரிபக்குவத்தில் ஆயிரம் சந்நியாசிகளுக்குச் சமமான மீராபாயின் கிருஷ்ண பக்திச் சரித்திரத்தைப் படித்து மக்கள் அனைவரும் வாழ்க்கைப் பயனைப் பெறுவார்களாக.

— ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்

காஞ்சி காமகோடி பீடம்

ரா. கணபதி

கோபுர வாயிலில் :


ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு அவனது இசையில் தழைத்த கொடியான மீராவின் அமிருதக் கதையைத் தொடங்குகிறோம். கண்ணனையும் அவனது கண்மணியான மீராவையும் நமஸ்கரித்து, இந்த இசைக் கோயிலில் பிரவேசிக்கிறோம்.

பேராசிரியர் 'கல்கி' அவர்களும், ஸ்ரீ சதாசிவம் அவர்களும் சேர்ந்து மீராபாயின் சரித்திரத்தைத் திரைக்கதையாக அமைத்தபின், மீண்டும் இதே விஷயத்தை மையமாக வைத்து இப்போது ஒரு தொடர் எழுதுவதற்குச் சமாதானம் சொல்ல வேண்டியது கடமை.

திரைப்படம் என்பது சுமார் இரண்டு மணிகளுக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்பது 'கல்கி', ஸ்ரீ சதாசிவம் ஆகிய இருவரின் உறுதியான கருத்து. எனவே, உணர்ச்சிமிக்க சம்பவங்கள் பல மலிந்த மீராவின் மகத்தான சரித்திரத்திலிருந்து ஒரு சில உன்னத கட்டங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு அழகிய திரைக்கதையாக உருவாக்கினார்கள். 'கல்கி' அவர்களே இதை ஒரு கதைப் புத்தகமாகவோ, தொடராகவோ எழுதியிருப்பாராயின் பெரிய அளவில் விஸ்தரித்திருப்பார் என்று நம்ப இடமுண்டு. எனவே, இப்போது கல்கிப் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டின்போது, அவர் தமது மந்திர சக்தி வாய்ந்த எழுதுகோலால் தீண்டிய மீராவின் சரித்திரத்தை மேலும் விரிவாக்கி எழுதுவதற்கு அவரது ஆசி கிட்டும் என்பதில் ஐயமில்லை.

திரைப்படத்தில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் மீராவாகப் பாகம் ஏற்றாலும் திரைக் கதைக்கு ஒரு தனித் தன்மை தர வேண்டியிருந்ததை இங்கு குறிப்பிட வேண்டும். மீராவுடைய பக்தியை வைராக்கிய பக்தி என்று மட்டும் கூறிவிட முடியாது. இவ்வுலகைப் பொறுத்தமட்டில் அவள் விராகினியே ஆயினும், கண்ணனை நினைக்கும்தோறும் ஆடலும் பாடலும் கூடலும் ஊடலும் ஆனந்தமும் ஆராத்துயரமும் கொந்தளிக்கும் சிருங்கார நாயகியாகவே இருந்தாள். கண்ணனை நாயகனாகக் கொண்டு மீரா கூடியும் ஊடியும் விளையாடியதைப் பக்குவமான புனித உள்ளத்தோடு





மானசிகமாகவே அநுபவிக்க வேண்டும். ஓரளவுக்கு எழுத்தில் வடித்தும் படித்தும் இன்புறலாம். ஆயின் இந்த சிருங்கார பக்தியை ஸ்தூலமாகத் திரையில் காட்டினால் பக்தியும் போய், சிருங் காரம் என்ற ரஸமும் போய், வெறும் பௌதிகமான விரஸம்தான் மனத்தில் நிற்கும். இதனைக் கருத்தில் கொண் டும், மீராவின் பாகத்தை ஏற்ற ஸ்ரீமதி எம். எஸ்ஸின் மனோபாவத்தை அநு சரித்தும், திரைக்கதையில் மீராவின் வைராக்கிய பக்தியையே பிரதான மாக அமைக்க வேண்டியிருந்தது. வெள்ளித் திரையில் மானுடர்கள் தோன்றி நடிப்பதைவிட ஓரளவு சூட்சுமமாகக் கருதக் கூடிய எழுத் துலகில் கண்ணன் — மீராவின் நாயக நாயிகா பாவங்களை விவரிப்பதில் தோஷமில்லை எனலாம். அக்காரணம் கொண்டும் இத்தொடரை மன்னித்து விடலாம்.

ராஜஸ்தான் மொழியிலும், விரஜ பாஷையிலும், குஜராத்தியிலும் மீரா இசைத்துள்ள அமுத கீதங்களை மூலத்தி லேயே படித்துப் புரிந்துகொள்ளும் தகுதி எனக்கில்லை என்பதை இங்கு சொல்லிவிட வேண்டும். ஆங்கில மொழிபெயர்ப்புக்களை வைத்துக் கொண்டு, மூலத்தைப் புரிந்துகொள்ள முயல்கிறேன். நண்பர் ஸ்ரீ ரா. வீழி நாதன் அவர்களும் மொழிகாட்டி வழி காட்டுவார். இந்த அஞ்ஞானத்திலும் கூட எனக்கு திருப்தி. 'இதுதான் மீரா' என்று அவளைப் பாஷையால் கட்டுப் படுத்திவிடாமல், நாம் கிரகிப்பதற்கு அப்பாற்பட்டவள் என்ற உணர்வு எப் போதும் உடனிருக்குமன்றோ?

மீராவின் காலத்தைக் குறித்துக் கடந்த சில ஆண்டுகளில் ஆராய்ச்சிகள் அதிகம் நடைபெற்றுள்ளன. பதினைந் தாம் நூற்றாண்டில் கும்பாஜிராணாவின் காலத்தில் மீரா இருந்திருப்பின் அக்பர் அவளைச்சந்தித்திருப்பதற்கில்லை; மேலும் அவள் ரயிதாஸிடம் உபதேசம் பெற்ற வள் என்பதற்கு ஆதாரம் இருப்பதால் கும்பாஜியின் காலத்துக்குப் பிற்பட்ட வளே என்கிறார்கள். எனினும், உதய சிங், பிரதாப சிங் ஆகிய ராணாக்கள் மேவாரைக் காக்க முழுமூச்சுடன் முயன்று வீர சகாப்தம் சமைத்த அக்ப ரின் ஆட்சிக் காலத்தில் மீரா பக்தி வெள்ளம் பரப்பியிருக்க முடியுமா என்பது புரியவில்லை. கும்பராணாதான் சிருங்கார பக்தியின் கருவூலமான கீத கோவிந்தத்துக்கு 'ரஸிகப்பிரியா' என்ற உரை எழுதியவன் என்பதை எண்ணுமிடத்து மீராவை அவனது ராணியாகக் கொள்வதிலேயே ரஸிக உள்ளங்களுக்கு நிறைவு ஏற்படும். முடிவாகச் சொல்லப் போனால், இடமோ காலமோ மீராவைப்போன்ற காவிய ஜீவனத்தைக் கட்டுப்படுத் தாதவை. கற்பனை, நடைமுறை இரண்டையும் பிரித்துச் சொல்ல முடி யாத ஓர் உலகத்தில் வளரும் கற்பகக் கொடி மீரா. எனவே, இத்தொடரில் எழுத்தாளனின் சுதந்திரத்தை (Poetic Licence) ஓரளவுக்கு மிகையாகவே எடுத்துக் கொண்டு, காலத்தைவிட கானம்தான் முக்கியம்; இடத்தைவிட இசைதான் முக்கியம் என்கிற கருத் தில் 'அனக்ரனிஸம்' என்ற தவற்றைத் தெரிந்தே செய்திருக்கிறேன். கீதம் இசைக்கும் போது ஒரேயடியாக சாஸ் திரத்துக்குக் கட்டுப்பட்டு விடாமல் அழகுணர்ச்சிக்குரிய தருமத்தின் மீது சுதந்திரம் எடுத்துக் கொள்வதுண்டு. 'காற்றினிலே வரும் கீத'த்துக்கும் வாசகர்கள் அந்தச் சுதந்திரத்தை அளிக்க வேண்டுகிறேன்.

அத்தியாயம் 1

சுருதி சேர்ந்தது!

மைத் தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய்காண்!
எத்தனை யேலும் பிரி(வு) ஆற்றகில்லாயால்
தத்துவம் அன்று தகவு) ஏலோர் எம்பாவாய்!

விஷ்ணு சித்தராகிய பெரியாழ்வாரின் கம் பீரமான குரல் அவரது அருமைக் குமாரி கோதையின் திருப்பாவையை ஓதிற்று. சந்திர காந்தக் கல் உருகிக் கொண்டிருப்பது போல் கம்பீரத்திலும் கனிவு நிறைந்து, கோலோகத் தில் ஆழ்வாரின் ஆழ்ந்த குரல் நிரம்பியது.

ஆகா, கோலோகம்!

அதன் பெருமையை யார் சொல்ல முடியும்? சைவர்களுக்குக் கைலாயம் எப்படியோ, வைஷ்ணவர்களுக்கு வைகுண்டம் எப்படியோ, முருகனடியார்களுக்கு கந்தவெற்பு எப் படியோ அப்படியே மதுர மோகனக் கண்ண னின் மதுர மோகன கீதத்தில் கரைந்த பக்தர்களுக்குப் பரமபதமாக விளங்குவது கோலோகம்.

'புலன்கள் யாவும் பசுக்கள்; அவற்றைக் கண்டபடி திரியாமல் அடக்கினால் பாலாகிய அமுத அநுபவத்தைப் பொழியும்' என்று சித்தர் பாடினார். நமக்குள்ளேயே இந்தப்

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




…னையில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை நீக்கிவிடுகிறது.

…ல்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத அருமையில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

…ல்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, …குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

…சுத்தத்திற்கும், வாயில் நறுமணம்கமழவும், வெண்மையான …களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.




…உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டென்டல் …ரீமையே வாங்குகிறார்கள்.



பசுக்களின் கோலோகம் இருக்கிறது. அவை பொழியும் பாலாகிய பாலகனும் இருக்கிறான். அந்தப் பாலும் கூட இன்னொரு பாலைப் பொழிகிறது — குழலின் வழியாகக் கோபாலன் பொழியும் கானப் பால் அது. ரஸமாகிய பால் அவன் எனில் அந்த ரஸத்துக்கும் ரஸமான கானாமுதமே ராதை.

ராதையுடன் கண்ணன் கூடியிருக்கும் அந்தப்புரத்தின் வெளியே அடியார்கள் குழுமியிருக்கின்றனர். 'ராதையுடன் கண்ணன் கூடியிருக்கிறானென்றால் அழகுடன் அன்பு கூடியிருக்கிறது என்று பொருள்; இசையுடன் லயம் கூடியிருக்கிறது என்று பொருள்; சொல்லோடு பொருள் கூடியிருக்கிறது என்று பொருள்; பரமாத்மாவுடன் ஜீவாத்மா கூடியிருக்கிறதென்று பொருள்' — இப்படியெல்லாம் பகுத்துச் சொல்பவர்கள் உண்டு. ஆனால் கோலோகத்தில் ராதா—கிருஷ்ணனின் அந்தப்புரத்துக்கு வெளியே காத்து நின்ற கிருஷ்ண பக்த சிகாமணிகள் இந்தத் தத்துவங்களையெல்லாம் தேடி நிற்கவில்லை. அனந்த கல்யாண குணங்களும் கூடிய சர்வாங்க சுந்தரனையும், பகவத் பிரேமையில் நனைந்த பரம கல்யாணியையும் கண்களாரக் காணத்தான் அவர்கள் காத்திருந்தார்கள்.

வைகறை வேளையில் மூவுலகத் தம்பதியைத் துயில் எழுப்பு முகமாகவே பெரியாழ்வார் பாசுரம் ஓதினார்.



உள்ளே புன்னை மரத்தடியில் ஆதிசேஷ வடிவான மஞ்சத்தில் கண்ணனும் ராதையும் கண்வளர்ந்திருந்தனர். அவன் நீலக் கடலலை; அவள் அதன் வெண் நுரை, அவன் நீல ஆகாசம்; அவள் அதில் நிலவும் நிலவு. பச்சைப் பத்திரத்தினிடையே அல்லி மலர் பரிசுத்தமாக ஓங்கி எழுந்திருப்பது போல் கண்ணனின் திருமார்பில் கையை ஊன்றி எழுந்திருந்தாள் ராதை.

ராதையைப் பற்றி எழுதி முடியுமா? வாக்குக்கு வராத அன்பின் உருவம் அவள் என்பதால் சாட்சாத் சுகப்பிரம்மமே பாகவதத்தில் அவளைப் பற்றிப் பாடாது விட்டுவிட்டபோது நாம் அவளை வருணிப்பது எப்படி?

விஷ்ணுசித்தரின் கனத்த குரல், கனிந்த குரல் கனக மயமான கதவைத் தாண்டி வந்து ராதையின் காதுகளில் புகுந்தது. பரமாத்மாவுக்குள் சொக்கிச் சொருகிக் கிடந்த புனித ஜீவாத்மாவின் ஐக்கிய நிலை கலைந்து, அது எழுந்தது.

மைத் தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனைபோதும் துயில் எழ ஒட்டாய் காண்!
எத்தனை யேலும் பிரி(வு) ஆற்ற கில்லாயால்
தத்துவம் அன்று தக(வு) ஏலோர் எம்பாவாய்!

ராதா தேவிக்கே ஆச்சரியமாக இருந்தது. "ஆண்டாளாகப் பிறந்து தானே பாடிய பாட்டுத்தான் அது! அதுவே இன்று தன் நெஞ்சை அள்ளுகிறது! அள்ளுவது மட்டும் தானா? அறுப்பதுபோலக்கூட இருக்கிறதே!"

"கண்ணா, கண்ணா" என்று நாயகனைத் தட்டி எழுப்பினாள் ராதிகா. சிவமாகக் கிடக்கிற வஸ்துவைச் சக்திதான் தட்டி எழுப்பி உலகின்புறம் திருப்பி வைப்பது வழக்கம்!

ராதையின் திருநாமத்தை ஸ்மரித்தவாறே விழித்தான் வாசுதேவன்.

"கண்ணா, அடியார்கள் யாவரும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நல்வரவு சொல்லி வரவேற்பாய்; அதே சமயத்தில் எனக்கு விடைகொடுத்தும் அனுப்பிவிடு" என்றாள் ராதை. அவளுடைய தொண்டையை அடைத்தது.

வெள்ளைச் சங்கத்தின் உட்புறங்களில் செம்மை படர்ந்திருப்பது போல் அவளது முகத்தில் சிவப்பு பரவலாயிற்று. கண்ணனுக்கு மறுபுறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.


ஆனால் அவன் எங்கெங்கும் பரந்த முகமுடையவன் அல்லவா? இவள் முகத்தைத் திருப்பிக் கொண்ட திசையிலும் அவனது வதனமே தெரிந்தது.

கதிரவனைக் காணவிட்டால் கமலம் வாடிவிடும் என்பதை மட்டும்தான் கவிகள் பாடியிருக்கிறார்கள். கமலங்கள் இல்லாவிடில் கதிரவனும் வாடிவிடுவான் என்பதை யாரும் பாடவில்லை. ஆயினும் ராதை கண்ணனுக்காகத் துடித்ததற்கு இம்மியும் குறைவில்லாமல் அவன் அவளுக்காகத் துடித்ததை ஜயதேவரும், சண்டிதாசரும் பாடியிருக்கிறார்களே! ராதை தன்னைவிட்டுப் போகிறாள் என்பதைக் கண்ணனால் தாங்க முடியுமா?

"ஸ்ரீமதி, என்ன பேச்சுப் பேசினாய்! உனக்காவது, விடைதரவாவது! என் மீது உனக்கு என்ன கோபம்?" என்றான் கண்ணன்.

"கோபம்தான் கோபாலா! இத்தனை அடியார்கள் இருக்க நீ என்னை மட்டும் அதிகமாக விரும்புகிறாய் என்பதில் எனக்குக் கோபம்தான். 'எனக்கு அனைவரும் சமம்' என்று தனஞ்சயனிடம் நீ கூறியதற்கு மாறாக என்னிடம் அதிக பட்சத்துடன் இருக்கிறாய். உன் சமத்துவத்தைக் குலைப்பவளாக நான் ஏன் இருக்க வேண்டும் என்பது என் குறை. அதோடு இன்னொன்று; நீ என்னிடம் அதிக அன்பு காட்டுவதாலேயே நான் உன்னை அன்பு செய்ய முடியாதபடியும் செய்து விட்டாய்!" என்றாள் ராதை.

"ஸ்ரீமதி, நீ இப்படியெல்லாம் பேசினால் இந்த ஆயப்பிள்ளைக்குப் புரியுமா?" என்றான் கண்ணன். இது வெறும் மாயப் பேச்சு அல்ல! பரம தத்துவங்களைக் கூறிய கீதா




சாரியனுயினும், கண்ணன் எளிமையில் மனம் வைத்து விட்டானுயின், பச்சைக் குழந்தையாகவே மாறி விடுவான்.

''கோவிந்தா, நீ என்னிடம் அதிக அன்பு காட்டுவதால் எனக்கும் எல்லையற்ற அன்பு பொங்குகிறது. அதன் விளைவாக நான் உன்னோடு ஐக்கியமாகி விடுகிறேன். ஐக்கிய நிலையில் நானே அன்பாகி விடுகிறேனே அன்றி, உன்னிடம் அன்பு என்ற ஒன்றைச் செய்து, அதை மூன்றும் மனுஷியாக நின்று பார்த்து மகிழ முடியவில்லை. உன்னிடமிருந்து இம்மியேனும் பிரிந்திருந்தால்தானே உன் அன்பையும் அழகையும் நான் ரஸிக்க முடியும்? உன்னோடு ஐக்கியம் அடைவதால் நான் அடைகிற நஷ்டம் எனக்குத்தான் தெரியும். ஆனால் இதோ பெரியாழ்வாரோ நான் உன்னைச் சிறிதும் பிரிந்திராமல் இருப்பது நியாயமல்ல என்று என்னைக் கோபித்துப் பாடுகிறார்'' என்றாள் ராதை.

கண்ணன் 'கல கல' வென்று சிரித்தான்.

''நானுகவே நீயும் ஆகிவிடுகிற அத்வைத நிலையைக் கூட அழகுணர்ச்சிக்காகத் தியாகம் செய்ய ஆசைப்படுகிறாய். பெரியாழ்வாரும் இதைத்தான் உன் வார்த்தையிலேயே 'தத்துவமன்று' எனப் பாடிவிட்டார். தத் என்பது நான்; த்வம் — நீ; என்னோடு ஐக்கியமாகி விடுவதற்காக வந்தவளல்ல நீ; ஓர் இழை விலகியிருந்தே, ஒதுங்கியிருந்தே என்னை ரசிக்கப் பிறந்தவள். நீ என்னிடம் ஒடுங்கி விட்டால் உலகமே இல்லை; ஒதுங்கினால்தான் உலகம். உலக லீலை வாழ வேண்டுமென்றே நீ இப்போது ஒதுங்க ஆசைப்படுகிறாய். கோலோகத்தை விட்டுப் பூலோகத்துக்குச் செல்ல ஆசைப்படுகிறாய். என்னை இவ்வளவு காலம் நீயொருத்தியே கவிகரித்துக் கொண்டது தவறு என்று நினைத்து அதற்குத் தண்டனையாக என்னைப் பிரிந்து எத்தனை தாபப்பட முடியுமோ, அவ்வளவும்பட ஆசைப்படுகிறாய். அப்படித்தானே?'' என்றான் முரளீதரன்.



''ஆம், மாதவா! பிரிவுத் துயர் மட்டுமின்றி உலகில் இன்னும் என்னென்ன துயரம் உண்டோ அவ்வளவையும் பட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. உலகத்து மக்களின் கவலையே நினைவில்லாமல் உன் சங்கீத லீலையில் விழுந்திருந்ததற்குப் பிரதியாக அவர்களின் துன்பங்களையெல்லாம் அநுபவிக்க ஆசைப்படுகிறேன்.....''

வாசுதேவன் இடைமறித்தான்: ''ஸ்ரீமதி, அதுதான் உன் பெருமை. துயரங்கள் தீர்ந்து நித்திய ஆனந்தம் பெறுவதற்காக மற்றவர்கள் தவமிருந்து என்னைப் பிரார்த்திப்பார்கள். ஆனாலும் நீயோ என்னிடமிருந்து பிரிந்து நித்தியானந்தைத் துறந்து துயரப்படுவதையே பிரார்த்திக்கிறாய். சீதையாகப் பிறந்து துன்பத்தின் எல்லையை அநுபவித்தபின் கடைசியில் முடிசூடிக் கொண்டாயே! அப்போதும்கூட உனக்குத் துக்கம் அநுபவித்ததில் திருப்தி ஏற்படவில்லை. 'வனத்துக்கு மீண்டும் போக வேண்டும் என்பதே எனக்கு மசக்கை' என்றாய். அதற்கு அநுசரணையாகவே யாரும் கூறத் துணியாத அபவாதத்தை உன் மீது சுமத்தி உன்னைக் காட்டுக்கு ஓட்டினேன். அந்த இன்னல்களையெல்லாம் அநுபவிக்க மீண்டும் ஆசை வந்து விட்டதா? என்னை இவ்வளவு கொடியவனுக்கிப் பார்ப்பதில் உனக்கு என்ன திருப்தி?''

ராதிகா விடைபேசவில்லை. கோவிந்தனுக்கே அது தெரிந்தது. அவள் துயரம் அநுபவிக்கிறாள் என்றால் உலகத்தின் துயரம் அனைத்தையும் தாங்கிக் கொள்கிறாள் என்றே பொருள். எனவே, அவள் ஒருத்தியின் துயரத்தை அவன் கடைசியில் தீர்க்கும் போது உலகம் முழுவதன் துயரத்தையும் தீர்ப்பதாகவே பொருள். தான் லோகத்தின் சோகத்தைக் களைய வேண்டுமென்பதற்காக அவள் அளிக்கும் வரமே இது. தன்னைக் கொடியவனுக்கிப் பார்க்கும் கொடுமையல்ல என்று அவனுக்கே தெரிந்தது.

''வரதா, வரம் தந்தாயல்லவா?'' என்றாள் ஸ்ரீமதி.

''தருவதாவது? நீயே எடுத்துக் கொண்டு விட்டாயே!'' என்றான் வேணுகோபாலன்.

பலபல வென்று ராதையின் முகம் மலர்ந்தது. ஜணஜண வென்று அந்தப்புரக் கதவும் திறந்தது.

கம்மென்று துளசியின் மணம் எங்கும் பரவியது.

'ம்ஹா' என்று பசுக்களின் கம்பீர கோஷம் கோலோகத்தைப் பூரணமாக்கியது.

''ராதே ஸ்யாம்! ராதே ஸ்யாம்!'' என்று ஜபித்தபடி அடியார்கள் அந்தப்புரத்துக்குள் பிரவேசித்தனர்.

வசுதேவரும் தேவகியும், நந்தகோபனும் யசோதையும், குந்தியும் முன்வந்து ராதா கிருஷ்ணனை வாழ்த்தினர். வியாசரும், சுகரும், உத்தவரும், அக்ரூரரும், குசேலரும், கர்க்காசாரியரும் அவனோடு உள்ளத்தில் இழைந்து, வாழ்த்துவதற்கு வாக்குமற்ற நிலையில் நின்றனர்.

சகாதேவனும், அர்ஜுனனும், பாஞ்சாலியும், ஆழ்வாராதிகளும், மத்வாசாரியரும், சைதன்ய மஹாப்பிரபுவும், நாமதேவரும், ஆதி சங்கரரின் அன்னை ஆரியாம்பிகையும், சக்குபாயும், நரஸிமேதாவும், போதனாவும், வித்யாபதியும், வில்லிப்புத்தூராரும் இன்னும் எண்ணற்ற அடியார்களும் ராதாகிருஷ்ண தரிசனத்தில் புளகித்து நின்றனர். விதுரரோ இவ்வளவிலும், 'வருகலாமோ?' என்ற பாவத்தில் கதவத்தின் வெளியிலேயே ஒடுக்கமாக நின்றார்.

ஜயதேவர் அஷ்டபதிகளைப் பாடினார்; அவரது பிரியபத்தினி பதுமாவதி அபிநயம் பிடித்து ஆடினாள்.

லீலாசுகர் கிருஷ்ணகர்ணாமிருதம் பாடினார்; ஆதியில் அவருக்கு ஆசைநாயகியாக இருந்து, பின்னர் ஞான குருவாகிய சிந்தாமணி நேத்ராமிருதமாக ஆடினாள்.

சண்மததாசர் ராதாகிருஷ்ண லீலைகளைப் பாடினார். அவரது துணிகளை வெளுத்ததோடு மனத்தையும் வெளுக்கச் செய்த சலவைக்காரி ராமி ஆடினாள்.

கண்ணனே தன் கனியதரத்தில் குழலைப் பொருத்திக் கொண்டான். கீதை தந்த வாயிலிருந்து கீதம் வழிந்தது. ராதாதேவி ஆடினாள். ஆகாயவெளியில் பிரபஞ்ச கோளங்கள் யாவும் ஆடுகிற பிரம்மாண்ட நாட்டியம் அது. அணுவுக்குள் பரமாணுக்கள் ஆடுகிற அதிசூட்சுமமான ஆட்டம் அது.

கண்ணனின் கருங்குழலில் அணிந்த மயிற்பீலியிலிருந்து ஏழு வண்ணங்களும் மின்னுவது போலவே அவனது வாயில் பொருத்திய வேள்குழலிலிருந்து ஏழு இசைகளும் யமுனைகளியாணியாக உதிர்ந்தன. ராதையின் காற்சிலம்புகளில் உதித்த லயத்தில் அக்குழலின் இசை கலந்தது. குலுங்குகின்ற அவனது நூபுரங்களிலிருந்து பளீர் பளீரென்று வீசிய ஒளித் துகள்களிலேயே சங்கீதமும் தாளமும் கரைந்தன. அதிலேயே ராதிகாவும் கரைந்துவிட்டாள்.

ஃ ஃ ஃ

''மஹராஜ், தேவியுடன் நானும் செல்ல வேணுமே!'' என்று கோலோக நாயகனிடம் முறையிட்டுக் கொண்டாள் ராதையின் பிரிய சகியான லலிதை.

''ஆம், நான்தான் ராதையைப் பிரிந்திருக்கவேண்டுமெனில் உனக்கும் ஏன் அந்தத் துர்ப்பாக்கியம்? சென்று வா, செல்வி!'' என்று அவளை ஆசீர்வதித்தான் அச்சுதன்.

ஃ ஃ ஃ


தீனமான கண்களுடன் காமதேனு தன் முகத்தைத் தூக்கி கோபாலனைப் பார்த்தது.

''நீயுமா என்னை விட்டுப் பிரிவதற்குப் பிரியப்படுகிறாய். வேண்டாம் கண்ணே!'' என்றான் ஈமுவுலகத்துக்கும் துணை நிற்பவன். அன்பின் துணையைத் தேடி நிற்கிறானல்லவா?



காமதேனு தன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டது. கண்ணனின் கானரஸம் கனத்து அதன் தலையில் நிரம்பும்போது அது இப்படித்தான் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கும்; அப்போது அதன் மடி நிறைந்து பால் பொழியும். ஆனால் இப்போதோ அதன் கண்களே நிறைந்து நீரைப் பொழிந்தன.

காமதேனுவின் இரு கொம்புகளுக்கிடையே கோவிந்தன் தன் பட்டு விரல்களை வைத்துத் தடவிக் கொடுத்தான். அவன் அணியும் மயிற்பீலியால் வருடிவிடுவதைவிட மிருதுவாக இருக்கும் அந்த ஸ்பரிசம். அந்த ஸ்பரிச ஆனந்தத்தில் காமதேனு குதித்துத் தாண்டவமாடுவது வழக்கம். ஆனால் இன்று அது தாண்டவமாடவில்லை. ஆடாமல் அசையாமல் ராதிகா தேவியை நினைத்து நின்றது.



''காமதேனு! ஆடமாட்டாய்? சரி சரி, நீயும் ஒரு நாள் தாண்டவமாடத்தான் போகிறாய்!'' என்றான் கண்ணன், வருங்காலத்தில் என்றோ ஒரு நாள் நடக்கவிருக்கும் சம்பவத்தை நினைத்தவனாக.

நீலோத்பலத்துக்குள்ளிருந்து கிரணங்கள் வெளிப்படுவது போல் அவனது நீலத் திருமுகத்தில் கோலத் திருநகை அரும்பியது.

ஃ ஃ ஃ

'ஆகா, அதோ வான மண்டலத்தில் என்ன அற்புதமான ஒளித் துகள்கள்!' என்று வியந்தார் பிருந்தாவனத்தில் யமுனாதீரத்தில் காலை அநுஷ்டானங்கள் செய்து கொண்டிருந்த ரூப கோஸ்வாமி. (ஜீவகோஸ்வாமி என்றும் சிலர் சொல்வார்கள். பெயர் எதுவானும் என்ன? கோஸ்வாமிகள் எல்லாரும் ஒன்றுதான்.)

'ஒளித்துகள்களா? அல்லது ஒளித்துகள்கள்தாமா?' என்றுகூடப் புரியாத ஓர் அதிசய அநுபவம் அவருக்குக் கிட்டியது. 'மயில் குயிலாச்சுதடி' என்று தமிழகத்துத் தவயோகி பாடிய அதிசயம் அது!

துகள்கள் யாவும் ஒன்று திரண்டு தாரகை வடிவாயின. வானுலகப் பூப்போன்ற அந்த நட்சத்திரம் சரசர வென்று பூவுலகை நோக்கி வந்தபோது, நீலவானாக நிற்கும் நாயகன் கழுத்தில் ஒரு சரத்தை அணிவித்தாற் போலவே தோன்றியது. நில உலகுக்கு அருகே வந்ததும் தாரகை மறைந்தது. 'பரம உத்தமமான ஒரு ஜீவன் எங்கோ ஜனித்திருக்கிறது' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார் ரூபகோஸ்வாமி.

தாரகை மறைந்த திசை நோக்கித் தண்டனிட்டார்.

அந்தத் திசையில் ராஜஸ்தானத்தைச்சேர்ந்த மேர்தா என்னும் நகரத்தில் அதே சமயத்தில் இளைய ராணி சந்திரமுகி தேவி சந்திரப் பிஞ்சு போன்ற பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தபோது —

பொழுதும் நன்கு புலர்ந்தது!

இங்கே யமுனாதீரத்தில் பட்சிகள் உதயராகம் இசைத்தன. மந்தமாருதம் வீசிற்று.

கோஸ்வாமி முகுந்த நாமத்தை மனத்தில் வைத்துத் தம்பூராவை மீட்டினார். அதன் தந்திகளில் கரைந்திருந்த ராதையின் பிரிய சகி லலிதை, நாத கர்ப்பம் அடர்ந்த ஜங்காரத்தை எழுப்பினாள்.

சுருதி சேர்ந்தது!

(தொடரும்)



குமரனைப் பாடும் கவிக்குயில்

சமயம் கிடைத்தபோதெல்லாம் சமயச் சொற்பொழிவுகளும் இலக்கிய உரைகளுமாகப் பொழிந்து தள்ளும் திருமதி சௌந்தரா கைலாசம் படித்ததென்னவோ ஒன்பதாம் வகுப்பு வரையில்தான். அப்படியிருக்க, இப்படிச் சொல்மாரி பொழியும் ஆற்றல் எப்படி வந்தது?

அந்தக் காலத்தில் — அதாவது சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு — திருமதி கைலாசம் சென்னை பச்சையப்பன் கல்லூரி அருகில் வசித்து வந்தார். அவரது சகோதரரும் ஒன்றுவிட்ட சகோதரர்களும் அந்தக் கல்லூரி மாணவர்கள். ''இன்றைக்கு எங்கள் கல்லூரியிலே அண்ணாதுரை (அல்லது ரா.பி. சேதுப்பிள்ளை, அல்லது தெ. பொ. மீனாட்சி சுந்தரம்) பேசப் போகிறார்.... நீயும் வருகிறாயா கேட்க?'' என்று அவர்கள் அழைக்கப் போக, அந்த வாய்ப்பையே பயன்படுத்திக் கொண்டு சொற்பொழிவுகளைக் கேட்கப் போய் விடுவார் இவர். அவர்களது பேச்சின் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு எல்லாவற்றையும் கூர்ந்து கேட்டுக் கேட்டு, குறிப்பாகச் சேதுப்பிள்ளையவர்களின் நடையை ரசித்து, ரசித்து, நாளடைவில் தாமே ஒரு பேச்சாளராக மாறி விட்டார்.

இதுவரை எத்தனை கூட்டங்களில் பேசியிருக்கிறோம் என்பதை மறந்து விட்டாலும் ஒன்றை மட்டும் அவர் மறக்கவேயில்லை. கல்லூரி மாணவர்கள் அத்தனை பேரும் அவரது சொற்பொழிவுகளை வரவேற்று ஊக்கம் அளித்ததை நன்றியுடன் தெரிவிக்கிறார். ''கல்லூரி மாணவர்கள் என்றும் கட்டுக்கு அடங்காதவர்கள் என்ற கருத்து பெரும்பான்மையாக நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறானது'' என்று நற்சான்று வழங்கும் இவர், கல்லூரி மேடைகளில் பேச விரும்புபவர்களுக்குக் கூறும் ஒரே அறிவுரை: ''மாணவர்களுக்கு உபதேசம் செய்ய முற்படாதீர்கள் !''

கணவன் — மனைவி ஒருமித்த இணையாக அமைவது அபூர்வம் என்பார்கள். ஆனால் சௌந்தரா — கைலாசம் தம்பதி இதற்கு விதிவிலக்கு. திருவாளர் கைலாசத்தைப் போலவே திருமதியும் ஒரு நீதிபதிதான். கணவர், சென்னை உயர்நீதிமன்றத்தை அலங்கரித்தால், மனைவி பட்டிமன்றங்களையும் பேச்சு மேடைகளையும் அலங்கரிக்கிறார். அவ்வளவுதான் வித்தியாசம்.

திருமதி கைலாசம் கௌரவ மாகாண மாஜிஸ்டிரேட்டாகவும் பதவி வகித்திருக்கிறார். ஆனால் பதவிக் காலம் முடியுமுன்னரே அந்த வேலையை இவர் ராஜிநாமா செய்ததற்குக் காரணம்: இளங் குற்றவாளிகளுக்கான பள்ளியில் சேர வேண்டுமென்பதற்காகவே தங்கள் குழந்தைகளைச் சிலர் குற்றம் செய்யத் தூண்டிய ஓரிரு வழக்குகளைக் கண்டு மனம் நெகிழ்ந்ததுதான்.

இந்த ஆண்டு இலங்கைவாழ் தமிழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்கள் சிறப்பாகக் கொண்டாடும் 'தமிழர் திருநாள்' விழாவில் கலந்து கொண்டு பேச ஒப்புக் கொண்டார் திருமதி சௌந்தராகைலாசம். ஆனால் எத்தனைக்கெத்தனை மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டாரோ, அத்தனைக்கத்தனை சோகம் வந்து கப்பியது, அவர் சிங்கப்பூருக்குப் புறப்படும் போது. காரணம்: லால்பகதூரின் திடீர் மறைவு. ''சிங்கபுரி மன்னன் தமிழ் மகளை விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பதனால் இந்நாடு எங்களுக்கு மாப்பிள்ளை வீடு போல. எங்கள் வீட்டிலே பேரிடி ஒன்று விழுந்திருந்த போதிலும், மாப்பிள்ளை வீட்டு விழாக் கோலங்களில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருக்கக் கூடாது என்ற பாச உணர்வுடன் பெண் வீட்டாராகிய நாங்கள் வந்து சேர்ந்திருக்கிறோம்'' என்று இவர் தமது உரையைத் தொடங்கியது எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்து விட்டதாம்.

மலேசியாவாழ் மக்களின் மனத்தை இன்னொரு முறையிலும் கவர்ந்திருக்கிறார் இவர் — மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுக்குப் பொன்னாடை போர்த்தியதன் மூலம். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பைக் கண்டித்துக் குரலெழுப்பிய பெருந்தன்மைக்காகத்தான் இந்தியப் பெண் குலத்தின் சார்பில் துங்குவுக்குப் பொன்னாடை அணிவித்தார் இவர்.

பேச்சோடு நிறுத்திக் கொள்ளாமல் எழுத்திலும் தம் ஆற்றலை அவ்வப்போது வெளிப்படுத்தும் இவர், ''கல்கி'', ''தேவன்'',

''லக்ஷ்மி'', ''அகிலன்'' ஆகியவர்களுடைய தொடர்கதைகளை விழுந்து விழுந்து படித்த ஒரு காலமும் உண்டு. இப்போது விரும்பிப் படிப்பது: திருவாசகம்.


''அண்ணாவின் பேச்சும் பிடிக்கும்; அனந்தராமதீட்சிதரின் பிரவசனத்திலும் ஈடுபாடு உண்டு'' என்று தெரிவிக்கும் இவர், குழந்தைப் பருவத்தில் எவ்வளவு ஆர்வத்துடன் தெருக்கூத்தை விரும்பிப் பார்த்தாரோ அதே ஆர்வத்துடன் தற்காலத் திரைப்படங்களையும் நாடகங்களையும் விரும்பிப் பார்ப்பதுடன் நடிக — நடிகையரிடம் பெருமதிப்பும் கொண்டிருக்கிறார். அவர்களை 'அவன்', 'இவன்' என்று குறிப்பிடாமல் 'அவர்-இவர்' என்றே குறிப்பிட வேண்டுமென்பது தம்முடைய குழந்தைகளுக்கு இவர் பிறப்பித்திருக்கும் அன்புக் கட்டளையாகும்.


முப்பத்தொன்பது வயதினரான திருமதி சௌந்தராகைலாசம் பிராந்தியத் தணிக்கைக் குழு, சென்னை — அண்ணாமலைப் பல்கலைக் கழக 'செனேட்', அகில இந்திய ரேடியோ நிகழ்ச்சி ஆலோசனைக் குழு இவற்றில்தான் உறுப்பினரே தவிர எந்த 'லேடீஸ் கிளப்'பிலும் அல்ல.

கற்கண்டுத் தமிழில் கவிதைகள் புனையும் இந்தக் கவிக்குயில் இன்றும் தவறாமல் விரும்பிப் படிப்பது ''கல்கண்டு'' வார இதழின் கேள்வி — பதில் பகுதியை; பெருமதிப்புக் கொள்வது : காவியணிந்த துறவிகளைக் கண்டால்.

''எல்லாம் முருகன் அருள்'' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறும் திருமதி கைலாசத்துக்குப் பிடிக்காதது: ஆடம்பரம்; பிடித்தது: 'முருகனடி'.

— முகுந்தன்







சாரம் டப்பியில் இருக்கிறது

ஒருமுறை லண்டனுக்குப் போகும்பொழுது கப்பலில் ஒரு வெள்ளைக்காரன் தினந்தோறும் வந்து காந்தியடிகளைத் திட்டிவிட்டுப் போவது வழக்கம். ஒருநாள் அவன் காந்தியடிகளைப் பற்றிச் சில விநோதமான கவிதைகள் எழுதி அவரிடம் எடுத்து வந்தான். அவைகளை அவரிடம் கொடுத்தவுடன், அவர் அவைகளைக் கிழித்துக் குப்பைக் கூடையில் எறிந்துவிட்டார்; ஆனால் அவைகளில் குத்தப்பட்டிருந்த குண்டூசியை மட்டும் ஜாக்கிரதையாக எடுத்துத் தம் டப்பியில் வைத்துக் கொண்டார். அவன் "காந்தி,படித்துப் பார்த்தாயா அதில் ஒன்றும் சாரம் இல்லையா?" என்று கேட்டான். "ஆமாம், இருந்த சாரத்தை எடுத்து டப்பியில் வைத்துவிட்டேனே!" என்று பதிலளித்தார் காந்திஜி. இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர். அவன் வெட்கிப் போனான்.

தகவல் ப. கந்தசாமி

ஒரு போக்குவரத்துச் சாலையில் வைக்கப்பட்டுள்ள போர்டு: "தயவு செய்து உங்கள் மோட்டாரை மெதுவாக ஓட்டிக்கொண்டு போங்கள். நீங்கள் காப்பாற்றும் உயிர் உங்களுடையதாகவே இருக்கலாம்...!"

- எம், எம்.



மனப்போராட்டம்

ஒருமுறை ஆபிரஹாம் லிங்கன் தமது நண்பர்களுடன் உலாவச் சென்றிருந்தார். அப்போது லிங்கன் சேற்றில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த பன்றி ஒன்றைப் பார்த்தார். பன்றியைச் சிறிது பிரயாசையின் பேரில் கரையேற்றினர். கரையேறிய களிப்போ, துயர் நீங்கிய சந்தோஷமோ பன்றி தன் உடலைச் சிலிர்த்தது. அருகில் நின்றிருந்த லிங்கனின் ஆடைகள் கரை படிந்து, பாழடைந்தன. இதைக் கண்ணுற்ற நண்பர் ஒருவர், "தாங்கள் பிரயாசைப்பட்டு இந்த மிருகத்தைத் துயரத்திலிருந்து விடுவித்தீர்கள். ஆனால் நன்றியற்ற அந்த மிருகமோ தங்கள் ஆடைகளைப் பாழடித்துவிட்டது" என்றார். உடனே லிங்கன், "நண்பா, நான் அந்த மிருகத்தின் நன்றியைப் பெறுவதற்காக அதை அதன் துயரிலிருந்து விடுவிக்கவில்லையே. என்னை நானே என் மனப் போராட்டத்திலிருந்து விடுவித்துக்கொள்ளத்தானே முயன்றேன்" என்று பதிலுரைத்தார்.

ஆதாரம்: 'லிங்கன் வரலாறு'

தகவல்: பத்மனுபன்

விஞ்ஞான மேதை தாமஸ் ஆல்வா எடிஸனுக்கு அப்போது பதினாறு வயதுதான். ஆயினும் சிறு வயதிலேயே விஞ்ஞான நுணுக்கங்கள் பல அறிந்தவராய்த் திகழ்ந்தார். இரவு வேளையில் டெலிபோன் ஆபரேட்டராக வேலை செய்து வந்தார். இவர் தூங்காமலிருக்கிறார் என்று நிரூபிக்க "ஆறு" என்ற வார்த்தையை ஒவ்வொரு மணி நேரத்துக்கு ஒரு முறை செய்தியாகத் தலைமையகத்துக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஆனால் எடிஸனோ செய்தியனுப்பும் இயந்திரத்தைக் கடிகாரத்துடன் இணைத்து அது மணிக்கு ஒருமுறை பணியடித்ததும் தானாகவே 'ஆறு' என்ற செய்தியைத் தலைமையகத்துக்கு அனுப்பும்படி செய்து விட்டுத் தூங்கிவிடுவார். இது விஷயம் பல நாட்களுக்குப் பிறகு நிர்வாகிகளுக்குத் தெரிய வந்தது. எடிஸன் வேலையை இழந்தார்.

ஆதாரம்: "ஸயன்ஸ் டுடே"; தகவல்: "ஸீயென்ஸ்கே"

வேலை போச்சு!



ஷாவும் பூவும்!



ஒரு சமயம் பெர்னார்டு ஷாவைப் பார்க்கப் போயிருந்தார் ஒரு பெரிய மனிதர். அந்த நாடக மேதையின் இல்லத்தில் ஓர் இடத்திலும் மலர்கள் அலங்காரமாக வைக்கப்படாதது கண்டு வியப்படைந்த அவர், "உங்களுக்கு மலர்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என் றல்லவா நினைத்திருந்தேன்?" என்றார்.

ஷாவிடமிருந்து உடனே பதில் வந்தது: "நீங்கள் நினைத்தது சரிதான். மலர்கள் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். குழந்தைகள் என்றாலும் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆனால் அவர்கள் தலையைக் கொய்து விடெங் கும் குவளைகளில் செருகி வைப்ப தில்லை நான்!" தகவல்: கந்தசாமி

விசித்திரக் கண்காட்சி


ஹாம்பர்க் நகரில் சிலர் சேர்ந்துகொண்டு ஒரு கண்காட்சி நிகழ்த்தினர்.

இந்தக் கண்காட்சியில் இடம் பெற்ற சில பொருள்கள்: ஒலிப் பதிவு செய்யப்படாத நாடா (டேப்), எழுதப்படாத காகிதங்கள், வெற்றுப் பக்கங்களைக் கொண்ட புத்தகங்கள், படமே இல்லாத வெறும் சட்டங்கள், கூர் இல்லாத பென்சில்கள் முதலியன. கண்காட்சி யின் பெயர்: நத்திங் (ஒன்றுமில்லை) - இ. சி.

இந்தக் காலத்தில் ஜனங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் வேலை பெருங் கஷ்டமா யிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் உங்களைப் பின்பற்றுகிறார்களா, அல்லது துரத்துகிறார்களா என்று உங்களால் நிச்சயிக்க முடிவதில்லை.

ஆதாரம்: வால் ஸ்ட்ரீட் ஜர்னல். - அ. பாண்டியராசன்

தவறு இல்லை!



தம் பத்திரிகை நிருபர்கள் அனுப் பும் செய்தியில் சிறு தவறும் இருக் கக் கூடாதென்று கண்டிப்பான உத் தரவிட்டிருந்தார் ஒரு பத்திரிகை ஆசிரியர்.

ஒரு நாள் நிருபரிடமிருந்து பின் வரும் செய்தி வந்திருந்தது. "திரு வாளர் மோகன் அவர்கள் அக்கூட் டத்தில் பேசும் போது ஐயாயிரம் மக்களின் 9999 கண்கள் அவரையே பார்த்துக்கொண்டிருந்தன."

பத்திரிகை ஆசிரியருக்கு மிகுந்த கோபம் வந்தது. "எத்தனை முறை சொல்லியும் இப்படியே தவறாகச் செய்தி அனுப்பினால் என்ன அர்த் தம்? இரண்டாம் வாய்பாடுகூடத் தெரியாதா?" என்று இரைந்தார்.

நிருபரிடமிருந்து உடனடியாகப் பதில்வந்தது. "நானொன்றும் தவறு செய்யவில்லையே. நான் எழுதியது உண்மைதான். அந்தக் கூட்டத்தில் ஒருவனுக்கு ஒரு கண் பொட்டை.!"

சில யோசனைகள்

☐ புத்தகங்களில் படிந்துள்ள அழுக்கை ஒரு ரொட்டித் துண்டை அதன் மேல் தேய்த்துப் போக்கிவிடலாம்.

☐ மைக்கறையை வாழைப் பழத் தோலால் தேய்த்தால் அது போய்விடும். இம்முறை நமது புறத் தோலில் படியும் மைக் கறையைப் போக்க மட்டுமே பயன்படும்.

☐ உங்களிடம் அழுக்கடைந்து, நிறம் மாறிப் போன பழைய காலணிகள் உள்ளனவா? ஒரு நாள் இரவு படுக்கப் போகுமுன் அந்தக் காலணிகளை புக்சால் அழுத்தித் துடைத்து வையுங்கள். மறுநாள் அவை பளிச்சென்று ஆகிவிடும்.


☐ காலணிகளின் உட்புறங்களைச் சுத்தம் செய்ய, வாழைப் பழத் தோல் ஏற்றது.

☐ சிவப்பு, கறுப்பு மைக் கறைகளைத் தவிர மற்றெல்லாக் கறை களையும் தக்காளிப் பழச் சாறு போக்கவல்லது.

☐ பட்டுத் துணிகளின் கறைகளைப் போக்க யூகலிப்டஸ் தைலம் ஏற்றது.

தகவல்: இ. சிவசுப்பிரமணியன்.

ஆதாரம்: 'உபயோகமான தகவல்கள்' என்ற ஆங்கிலப் புத்தகம் ☐



சினிமா

வழிகாட்டி

எளிய நடையில் எளிய சம்பவங்களைக் கூறுவதன் மூலமே பெரிய, உயர்ந்த கருத்துக்களை இதயத்தில் பதிய வைத்து மன நிறைவை உண்டாக்கும் பேராற்றல் படைத்தவர் ஸ்ரீ ஆர். கே. நாராயணன். 'கைட்' (வழிகாட்டி) என்ற தமது கதையில் தாம் படைத்த கதாநாயகி ரோசி என்ற நாட்டிய மங்கை மூன்றுள் உயரத்துக்கு நிற்கும் பிரும்மாண்டமான தெய்வச் சிலைகளுக்கு எதிரே இருபது முப்பது தோழிகளுடன் சேர்ந்து கொண்டு 'குரூப் டான்ஸ்' ஆடுவாள் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க முடியாது. இதே போல் அசந்தர்ப்பமாக, மனச்சாட்சிப் போராட்டங்கள் போன்ற வேறு பல காட்சிகளும் அலுப்புத் தட்டும் விதத்தில் அதிகமாகப் புகுத்தப்பட்டுள்ளன. நமது திரைப்படங்களில் அடிக்கடி இடம் பெற்றுப் பழகிப் போன, புளித்துப் போன காட்சிகள் இதிலும் இருக்கின்றன. இத்தனைக்கிடையிலும் கதையின் ஜீவன் எப்படியோ பிழைத்துக் கொண்டு விடுகிறதே, அது ஆச்சரியம்தான்! தேவையற்ற ஒட்டுதல்களை நீக்கிவிட்டுப் பார்த்தால் கதையின் மையக் கருத்துப் பிரகாசமாய் ஒளிர்கிறது.

வண்ணப் படம் இது. ஒளிப்பதிவில் அபாரமான முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று நியாயமாகப் பெருமிதம் அடையலாம். காமிராவைக் கையாண்ட ஸ்ரீ பாலிமிஸ்திரி இப்படத்தை ஓர் அற்புத சிருஷ்டியாக்கியிருக்கிறார். குறிப்பாக வெளிப்புறக் காட்சிகளில் அவரது திறமையை அங்குலம் அங்குலமாக ரசிக்க முடிகிறது. ஒரு கண நேரமேனும் காமிரா ஓய்வெடுக்க வேண்டுமே! ஊஹூம்! படம் பிடித்துக் கொண்டே அது கலை உணர்வுடன், கலை அழகுடன் நளினமாக நகர்கிறது.

இத்தனை காட்சி தொடர்கள் அவசியமா என்ற கேள்வியை மறந்துவிட்டுப் பார்த்தால் செட்டுகளில் ஆர்ட் டைரக்டருடைய கலைத் திறமையைக் கண்டு மகிழலாம். நடிப்பு, டைரக்ஷன் எதிலும் யாரும் சோடையில்லை. ஒன்றிரண்டு பாடல்களும் அவற்றின் இன்னிசையும் ஏற்கனவே மிகப் பிரபலமாகியுள்ளன.


பரதநாட்டியத்தில் ஊறிய நமக்கு நடனங்கள் கொஞ்சமும் திருப்தியளிக்கவில்லை.

தேவ் ஆனந்த் 'கைட்' ராஜுவாக வந்து அந்தக் கதாபாத்திரத்துக்கு ஏற்ப அழுது சிரித்துப் படத்துக்குப் பெருமை சேர்க்கிறார். நடனராணி ரோஸியாக வஹிதா ரஹ்மான் தோன்றிக் கலை ஆர்வத்தால் கட்டுண்டு ஆட்டுவிக்கப்படுகிறார். இருவரது நடிப்புமே பல கட்டங்களில் நெஞ்சைத் தொடுகின்றன.

நகைச்சுவை என்ற பெயரில் அர்த்தமற்ற அபத்தக் காட்சிகள் எதையும் புகுத்தாததே பெரிய முன்னேற்றம் எனலாம்.

'கைட்' என்ற இப்படம் வெளிநாட்டு 'மார்க்கெட்'டைப் பிடிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்டதாக அறிகிறோம். ஆங்கிலப் படத்தில் தேவையற்ற காட்சிகள் பலவும் நீக்கப்பட்டு நம் நாட்டுக்குப் பெருமை தேடித் தரும் வகையில் திரையிடப்படும் என்று நம்புவோமாக.





மம்தா

பெண்மைக்குப் பெருமை சேர்ப்பது தாய்மை, அந்தத் தாய்மைக்குப் பெருமை சேர்ப்பது தூய்மை; கற்புடைமை. தாய்மையும் தூய்மையும் பெருமை பெறுவது தியாகத்தின் கால் நிழலிலே. கற்பு நெறியில் நின்று, தியாகமே உருவாக நிற்கும் ஓர் அன்னையின் வாழ்வைச் சித்திரிக்கிறது 'மம்தா.'

நாட்டின் மண் வாசனை மணக்கப் படம் தயாரிப்பதிலே வங்காளம் பெயர் பெற்றது. ஸ்ரீ நிஹார் ரஞ்சன் குப்தரின் 'உத்தர பல்குனி' என்னும் நவீனத்தைத் தழுவிச் சாரு சித்ர நிறுவனம் தயாரித்துள்ள இந்த ஹிந்திப் படம், கதையம்சத்தில் புதுமை காணுவிடினும் அஸித் சென்னின் டைரக்ஷனில் மெருகு பெற்றுப் படவுலகுக்குப் பெருமை சேர்க்கிறது.

தேவயானி என்னும் பெண் மனீஷ் என்பவனுக்கு உள்ளத்தைக் கொடுக்கிறாள். சந்தர்ப்பச் சூழ்நிலை ராகால் என்னும் கயவனைக் கணவனாக்கி வைக்கிறது. பெண்மைக்கு பூஷணமான கற்புக்கே பங்கம் விளைவிக்க அவன் துணியவே, கரம் பற்றிய கணவனையே துறந்து ஓடும்படி யாகிறது. நடன மாதாகவும் வாழ்க்கை நடத்தும்படி யாகிறது.

ஒரு நாள் உறவில் அவன் கொடுத்த குழந்தையைச் சமூகத்தில் சீரும் சிறப்புமாக நடமாட விடுவதற்காக ஒரு தாய் மேற்கொண்ட தாயன்பு மிக்க தியாக வாழ்வு தான் இந்தக் கதையின் சூத்திரம்.

தாயும் - மகளுமாக இரட்டை வேடம் தாங்கி உணர்ச்சியும் உயிரும் கொண்ட பாத்திரமாக வருபவர் சுசித்ரா சென். அவரது நடிப்புக்கு மெருகேற்றும் வகையில் காளிபாத சக்கரவர்த்தி, அசோக் குமார், தர்மேந்தர், மூவரும் நடிக்கின்றனர். ஆபாசமற்ற முறையிலே, மனத்துக்கு இதம் அளிக்கும் வகையிலே திரையோவியத்தை இட்டுச் சென்றிருக்கும் உத்தி பாராட்டுதலுக்குரியது. ஆயினும் ஓரிரு குறைகளைச் சுட்டிக் காட்டவே தோன்றுகிறது.

திரும்பி வந்த காதலன், என்ன தான் உள்ளத்தால் உயர்ந்தவனாயிருந்தாலும், கற்பின் நல்லாளான தன் (மாஜி?) காதலியை அடிக்கடி தொட்டுப் பேசுவது உசிதமாகப் படவில்லை. எல்லாம் படங்களையும் போலக் காதலர்களின் இரட்டைப் பாட்டுகளுக்கு இவ்வளவு இடம் வேண்டாம். அதோடு வில்லனாக வரும் காளிபாத சக்கரவர்த்தியை இப்படிப் பழைய சுவட்டிலேயே நடிக்க விட்டிருக்கக் கூடாது. கத்திரிக்கோல் தன் பணியைச் சிறக்கச் செய்திருக்குமானால், கதையின் நத்தை வேகம் மாறிப் படத்துக்கு இன்னும் பெருமை சேர்ந்திருக்கும்.

மகாகவி காளிதாஸ்

அன்னை பராசக்தியின் திருவருளினால் அனைத்துலகும் போற்றும் வாக்குவன்மையைப் பெற்று, குமார சம்பவம், ரகுவம்சம், சாகுந்தலம், மேகசந்தேசம் முதலிய கவினுறு காவியங்களை இயற்றி இறவாப் புகழ்பெற்றுவிட்ட மகாகவி காளிதாசனைப் பற்றி அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள்.

மகாகவியின் பாகத்தை ஏற்றிருப்பவர் பத்மஸ்ரீ சிவாஜிகணேசன். இடையனாயிருந்த போது அவரிடம் காணப்பட்ட பேதைமையும், அசட்டுத்தனமும்—காளியின் கருணையினால் அவர் கவிஞராகிவிட்ட பிறகு பேரறிவும், பெருந்திறனுமாக மாறி அவர் ஒரு மாமேதையாகத் திகழ்ந்த அதிசயத்தைச் சிவாஜியின் நடிப்பிலும், முக பாவங்களிலும் நன்கு காண முடிகிறது. ஆனால் இடையன் சின்னையாவுக்கு இருந்த வாய்ப்பு கவிகாளிதாசனுக்கு இல்லை. இடையன் பாகத்தை அவ்வளவு வளர்த்திருக்க வேண்டாம். கவிஞர் பெருந்தகை காவியம் இயற்றும் காட்சியில் ஒன்றன் பின் ஒன்றாக ஓலைச் சுவடிகள் குவிகின்றன. பின்னணியில் காட்சிக்கு விளக்கமாக ஒரு பாட்டும் பாடப்படுகிறது. ஆனால் எடுப்பாயில்லை. அதற்குப் பதிலாக, மேற்படி காவியங்களின் சுவைமிகுந்த காட்சிகளை எழிலோவியப் பின்னணியாகக் காட்டியிருந்தால் காவியப் பெருமை உயர்ந்திருக்கும்; அல்லது போஜ மகாராஜனின் அரண்மனையில் வரையப்பட்ட ஓவியக் காட்சியாகக் காட்டியிருக்கலாம்.

பதின்மூன்று பாடல்கள் இருந்தும் வேதனையாயில்லாததற்குக் காரணம், சுவையான கர்நாடக இசையமைப்புத்தான். சௌகார் ஜானகி நடிப்பு நன்றாயிருக்கிறது. வி. கே. ராமசாமி, நாகேஷ் இருவரும் படத்தின் ஹாஸ்யப் பகுதியை இட்டு நிரப்புகின்றனர். எல். விஜயலட்சுமி கவிஞனைக் கவிழ்க்கும் 'வில்லி'யாக வருகிறார்; ஆடிப் பாடுகிறார். ஏனோ எடுபடவில்லை. போஜராஜன் பாகம் முத்துராமனுக்குப் பொருந்தவில்லை.

''மகாகவி காளிதாஸ்'' — கேட்டு மகிழப் பல பாடல்களும், பார்த்து மகிழப் பல்சுவை மிகுந்த காட்சிகளும் கொண்ட படம்.




முள்ளும் மலரும்
உமாசந்திரன்

அத்தியாயம் 5

பவர்ஹவுஸ் சரிவில் மறுபடியும் மேகமூட்டம் வலுத்திருந்தது. பத்தடி தூரத்துக்குக்கூட டிராலித் தண்டவாளம் கண்களுக்குப் புலனாகவில்லை. அந்த மேக மூட்டத்தையே வெறித்து நோக்கியவாறு நின்றிருந்தான் காளி. அவன் மனத்தில் எரிச்சல் குமைந்து கொண்டிருந்தது. மேகமூட்டம் இப்படியே நீடித்திருந்தால் இரவு முள்ளிமலைக்கூத்து நடந்தாற்போலத்தான். முன்னறிவிப்பில்லாமல் இப்படி வந்து தொல்லை கொடுக்கும் இந்த மழை மேகங்களை அப்படியே வாரிச் சுருட்டி எங்காவது வீசி யெறிந்துவிட முடியாதா என்று ஆத்திரம் வந்தது காளியண்ணனுக்கு.

வள்ளி நின்ற இடத்திலேயே இன்னும் நின்று கொண்டிருந்தாள். உடும்புக் கொட்டகையில் அமைதி நிலவியிருந்தது. விஞ்ச் விசையின் 'உங்' என்ற ஒரே



சீரான சத்தம்கூட அந்த அமைதிக்குச் சுருதியாகவே தோன்றியது வள்ளிக்கு. காளியண்ணனின் கோபம் அவளுக்குத் தெரியும். விஞ்ச் விசையின் சுருதிக்கு மாறுபட்ட மிகச் சிறிய சத்தம்கூட அவன் கோபத்தைப் பூகம்பமாக வெடிக்கச் செய்யும் என்று அஞ்சியவாறு அவள் அசைவற்று நின்று கொண்டிருந்தாள்.

டிராலி பவர்ஹவுஸ் தளத்தை அடைந்து விட்டது என்பதைக் குறிக்கும் மணி ஒலித்தது. விசையை நிறுத்திவிட்டு வழக்கம்போல் அத்தி மர மேட்டை நோக்கி நடந்தான் காளியண்ணன். கதவு மறைவிலிருந்து மெதுவாக வெளியே வந்த வள்ளி அண்ணனுடைய முகத் தோற்றம் எப்படியிருக்கிறது என்று கவனித்தாள். காளியண்ணனின் முகம் இன்னும் கடுகடுவென்றுதான் இருந்தது. பீடியைப் பற்ற வைத்துப் புகைக்க ஆரம்பித்திருந்த அவனைப் பார்க்கும் போது எரிமலை புகையைக் கக்குவது போலத்தான் வள்ளியின் கண்களுக்குத் தோன்றியது. அவனை நெருங்கவே அவள் அஞ்சினாள். இருந்தாலும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ஓசைப்படாமல் நடந்து அவன் அருகே சென்றாள்.

காளியண்ணன் தலைநிமிர்ந்து அவளை முறைத்துப் பார்த்தான்.

''என்ன?''

''சாப்பிட்டுடு, அண்ணே!''

''எனக்குச் சாப்பாடு வேண்டாம்!''

''எவ்வளவோ ஆசையோடு கொண்டு வரச் சொன்னியே.''

''எங்கேயாவது கொட்டு, போ!''

''நீ இவ்வளவு கோபிக்கும்படியா என்ன நடந்திடுச்சு?''

''இன்னும் என்ன நடக்கணும்? நாலு வருஷங்களா நானும் இந்த வேலை பார்க்கிறேன். என் மேலே யாரும் தப்பு சொல்லும்படி நடந்தது கிடையாது. இப்போ என்னடான்னா நேத்து வந்து வேலையிலே சேர்ந்தவங்ககிட்டேல்லாம் பேச்சுக் கேட்கும்படி ஆயிடுச்சு'' என்று கூறிய காளியண்ணன் வெறுப்புடன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

வள்ளிக்கு அழுகை வந்துவிடும்போல் இருந்தது.

''எம்மேலே தப்பு இருந்தா ஆத்திரம் தீரத் திட்டு, அடி, என்ன தண்டனை வேணும்னாலும் குடு. ஆனா, பசி நேரத்திலே காயக்காய இருக்காதே, அண்ணே! அத்தை உனக்காக எவ்வளவு பாடு பட்டு ஒண்ணொண்ணும் ஆக்கி அனுப்பிச்சிருக்கு'' என்றாள்.

அவளுடைய குரலிலிருந்த உருக்கம் காளியண்ணனின் கடுமையைச் சற்றுக் குறைத்தது. கையிலிருந்த பீடியை வேண்டாவெறுப்பாக வீசியெறிந்தான்.

''என்னைத் தொந்தரவு செய்யாதே, வள்ளி! எனக்குப் பசியில்லை'' என்று கூறியவாறு எழுந்தான்.

வள்ளி சிரித்து விட்டாள்.

''அண்ணே, பொய் சொல்லறே? இந்த நேரத்திலே உன் பசி எப்படி இருக்கும்னு எனக்கா தெரியாது?'' என்றாள் சிரித்துக் கொண்டே.

காளியண்ணனின் உதட்டிலும் சிரிப்பு அரும்பியது. ''போ வள்ளி, நீ பொல்லாத பொண்ணு. எதையாவது சொல்லி என் மனசை மாத்திடறே'' என்று கூறியவாறு உடும்புக் கொட்டகையை நோக்கி நடந்தான்.

''நடந்ததென்னமோ நடந்து போச்சு. அதுக்காக நீ சாப்பிடாமே இருந்தால் சரியாப் போயிடுமா?'' என்று கூறிய வள்ளி வெற்றிக் குதூகலத்துடன் அவனுக்கு முன்னே ஓடினாள்.

''எல்லாம் அந்த மங்காவாலே வந்த வினை. இன்னொரு தரம் அது என் கையிலே சிக்கட்டும், அந்த இடத்திலேயே கழுத்தை நெரிச்சுப் போட்டுடறேன்!'' என்று பல்லைக் கடித்தான் காளியண்ணன்.

அப்படி ஏதாவது நடந்திருக்குமென்று வள்ளி ஊகித்ததுதான். ஆனால் அதைப் பற்றிய விவரங்களைக் கேட்டு மறுபடியும் அண்ணனின் ஆத்திரத்தைக் கிளப்ப அவள் விரும்பவில்லை. எப்படியாவது அவன் பசி தீரச் சாப்பிட்டால் போதுமென்று இருந்தது அவளுக்கு. இரண்டு வாய்ச் சோறு உள்ளே போனதுமே காளியண்ணன் கலகலவென்று பேச ஆரம்பித்து விட்டான். நடுவே பவர்ஹவுஸ் தளத்திலிருந்து டிராலி புறப்படத் தயாராகி விட்டதற்காக மணி ஒலித்த போதுகூட அவன் பொறுமையிழக்கவில்லை. அலட்சியமாக விசையை அழுத்தி யந்திரத்தை இயக்கி விட்டுவிட்டு, வந்து மறுபடியும் சாப்பாட்டை ரசித்துச் சாப்பிடுவதில் ஈடுபட்டான்.

காளியண்ணனின் பேச்சு பெரும்பாலும் அந்தப் புதிய மனிதரைப் பற்றியே யிருந்தது. அவரைப் பற்றி அகாரணமான வெறுப்பும், ஆத்திரமும் அவன் மனத்தில் குடிகொண்டிருந்தன என்பதை அவன் பேச்சிலிருந்து உணர்ந்து வள்ளி ஆச்சரியப்பட்டாள். அண்ணனுக்கு அவர்மேல் அப்படியென்ன ஆத்திரம்? அவர் பேசிய பேச்சிலும் தப்பு ஒன்றும் காண முடியவில்லையே! அவர் நினைத்

நாளைய வண்ணப்பூச்சை இன்றே வழங்குகிறோம்


டுலக்ஸ் புதிய ஆக்ரிலிக் பிளாஸ்டிக் எமல்ஷன்

சாதாரண பிளாஸ்டிக் எமல்ஷன் பூச்சுக்களைவிட இது பெருமளவில் முன்னேறியுள்ளது.

- நிலைத்து நிற்க வல்லது—கட்டடத்தின் வெளிப்புறத்தில் பூசினாலும் கூட இதிலுள்ள ஆக்ரிலிக் கோபாலிமர் நெடுநாள் நீடிக்கச் செய்கிறது
- சிக்கனம் மிக்கது—அதிகப் பரப்பின் மீது பூச முடிவதோடு அதிக அளவு மென்மையுடனும் ஒரே சீரான வண்ணத்துடனும் இது பொலிகிறது.
- கட்டுக் குலையாதது—மீண்டும் மீண்டும் கழுவிச் சுத்தம் செய்யலாம். இது உரிந்து உதிர்வதில்லை, பிளந்து பிரிவதுமில்லை.

நம் தேசத்தில் ஆராய்ச்சியின் முன்னேற்ற சின்னமான ICI ன் பிரத்தியேக தயாரிப்பு

இந்தியாவிலேயே முதன் முதலாக புதியதொரு முறையில் அமைந்த கோபாலிமர் அலங்காரப் பூச்சு



தயாரிப்பாளர்:
ஆல்கலி & கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்.
ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:
ஐசிஐ (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
கல்கத்தா பம்பாய் டில்லி சென்னை

IGC-573 TM

சமய சஞ்சீவி





வலிதான் எங்கள் பிரச்சினை...

உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக்கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவர்தான். எங்களுடைய பணி வலியைத் தீர்க்க மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பது. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பார்முலாதான் என்பதை நாங்கள் இன்று அறிவோம். அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.
வலி என்பது என்ன? உயிர்ப்பொருள் உடல் வேகத்திற்கும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "மறைமுகமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளின் அழுத்தத்தின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி?
'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டாக வேலை செய்கிறது—வீக்கத்தை நீக்கி—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

இவைகளுக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்:
வலி • நரம்பு வலி • உடல் வலி • பல் வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜல தோஷம் • ஃப்ளு • டெங்கு.

அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள்.
தேவையானால் மீண்டும்
இதே அளவில் உபயோகிக்கவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொற்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது

A. G. 33-66 TAM

திருந்தால் எவ்வளவோ அதிகாரத்துடன் பேசியிருக்க முடியுமே! ஆனால் அவர் எவ்வளவு பக்குவமாக, சாமர்த்தியமாக, ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லிவிட்டுப் போனார்.

அவர் கூறிய ஒரு விஷயம் அப்போதிருந்து வள்ளியின் மனத்தில் உறுத்திக் கொண்டேயிருந்தது. இந்த உலகத்தில் தனக்கு யாருமே கிடையாது என்று அவர் சொன்னாரே, உண்மையாகத் தான் சொன்னாரோ, பரிகாசத்துக்காகச் சொன்னாரோ?

டிராலி நிலைக்கு வருவதற்குமுன்பே காளியண்ணன் சாப்பாட்டை முடித்துவிட்டுப் பெரிதாக ஏப்பம் விட்டுக்கொண்டே ஓடையில் கையைக் கழுவிக்கொண்டான். வெளியே செறிந்திருந்த மேகத்தின் மூட்டம்கூட இப்போது அவனுக்கு ஆத்திரமூட்டுவதாயில்லை. 'மழை பெய்தால் நன்றாகப் பெய்யட்டுமே. அதற்காக முன்னி மலைக்குச் செல்லும் திட்டத்தை அவன் கைவிட்டுவிடப் போகிறானா, என்ன? கூத்து நடக்கா விட்டால் போகிறது. அதை யொட்டிய மற்றதெல்லாம் நடந்து தானே தீரும். உண்மையில் அவன் முன்னிமலைக்குப் போக நினைத்தது கூத்தைவிட அந்த மற்றச் சம்பிரதாயங்களைக் கருதித்தானே?'

டிராலி நிலையை அடைந்து விட்டதைக் குறிக்கும் மணி ஒலித்தது. காளியண்ணன் விசையை நிறுத்தினான்.

டிராலியில் ஏழெட்டுத் தொழிலாளிகள் வேலை முடிந்து திரும்பியிருந்தனர். வெள்ளாத்தாளும் அவர்களுடன் டிராலியிலிருந்து இறங்கி வருவதைப் பார்த்து வள்ளிக்கு வியப்பாயிருந்தது.

வெள்ளாத்தாளும் வள்ளியைப் பார்த்து விட்டாள்.

''வள்ளி, இங்கே வந்து ஒரு கை பிடி கண்ணு. நடக்கக்கூட முடியலே'' என்று குரல் கொடுத்தாள் அவள்.

அவள் நடை தள்ளாடியதைக் கவனித்த வள்ளி சரிவில் ஓடிச் சென்று அவளைத் தாங்கிக் கொண்டாள்.

''வேலை செய்திக்கிட்டிருக்கும்போதே கிறுகிறுன்னு வந்திடுச்சு. மயங்கி விழப் போயிட்டேன். என் நல்ல காலம் அந்த மேஸ்திரி ஐயா பெரிய மனசு பண்ணி எனக்கு அரை நாள் லீவு கொடுத்து வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாரு'' என்று விவரித்துக் கொண்டே வெள்ளாத்தாள் வள்ளியின் உதவியால், அந்தச் சரிவுப் பாதையில் ஏறி வந்தாள்.

காளியண்ணன் வழக்கம்போல் அத்திமர மேட்டில் உட்கார்ந்து பீடியைப் புகைத்துக் கொண்டிருந்தான்.



''படுக்கை அறையிலே காற்றே வரல்லே...''

''வா, சீதா! 'மொட்டை மாடி பை னைட்' பார்க்கலாம்!''

''அண்ணே! மங்காவோட அம்மாவுக்கு உடம்பு முடியலியாம். வீட்டிலே கொண்டு விட்டுட்டு நானும் வீட்டுக்குப் போறேன்'' என்று அண்ணனிடம் தகவல் தெரிவித்தாள் வள்ளி.

காளியண்ணன் ஒன்றும் பேசவில்லை. வெள்ளாத்தாளைப் பார்த்து உறுமுவதுபோல் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''உங்க மங்கா இன்னிக்கு என் கிட்டே எப்படி வம்புகுடுத்தா தெரியுமில்லே?'' என்றான் காளி அலட்சியமாகப் பீடிப் புகையை ஊதியவாறு.

''என்ன செய்தா, தம்பி?''

''நான் ஏன் சொல்லணும்! வீட்டுக்குத்தானே போறே. உன் மகளையே கேளு, போ, போ!'' என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டான் காளியண்ணன்.

''கடவுளே! இப்படி ஒரு பெண்ணோடே நான் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படணுமோ?'' என்று அங்கலாய்த்த வெள்ளாத்தாள் வள்ளியுடன் அங்கிருந்து நடந்தாள்.

அருவிக்கரையை அடுத்த ஒரு மேட்டில் வெள்ளாத்தாளின் குடிசையிருந்தது. ஓரடி உயரத்துக்கு மண் சுவர் எழுப்பி மூங்கில் கழிகளையும், காட்டுப் புற்களையும் கொண்டு கூரை வேய்ந்து காளியண்ணன் அந்தக் குடிசையைக் கட்டிக் கொடுத்திருந்தான். தாயும் பெண்ணும் குடித்தனம் நடத்துவதற்கு அது போதுமானதாயிருந்தது.

''இங்கே திரும்பின இடமெல்லாம் இவ்வளவு புல்லும் தழையும் இருக்கிற துக்கு ஒரு எருமை கட்டிக்கிட்டா எவ் வளவு பாலாறும், நெய்யாறும் ஓடும் தெரியுமா ? அவ்வளவும் வீணாப் போகு தேன்னு இருக்கு எனக்கு'' என்று வெள்ளாத்தாள் சில சமயம் நப் பாசையுடன் கூறுவது உண்டு. மூன்று எருமைகளை வைத்துக் கொண்டு வாழ்ந்தவளல்லவா? நடுவில் எவ்வளவு தான் அலுத்தலைந்தாலும் இப்போது ஓரளவுக்கு நிலையான வாழ்க்கை வசதி ஏற்பட்டவுடன் பழைய நாட்களின் நினைவுகளெல்லாம் தலை தூக்குவது இயற்கைதானே.

''மங்காவும் என்கூட வேலைக்கு வந்தால் எவ்வளவு நல்லா இருக்கும். ஒரு வருசம் அவளும் உழைச்சாப் போதும். ஒரு எருமை வாங்கறதுக்கு வேண்டிய பணம் கையிலே சேர்ந்து போகும். நான் சம்பாதிக்கிறது எங்க ரெண்டு பேர் வவுத்துக்கே பத்தாமத் தானே இருக்கு. அதைச் சொன்னால் அந்தப் பொண்ணு கேட்டாத்தானே!'' என்று நினைத்து வெள்ளாத்தாள் அடிக்கடி ஆத்திரமடைவாள்.

வேலை செய்யாமல் சுற்றினால் சுற்றட்டும். வேண்டாத வம்பையெல் லாம் விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து விடுகிறாளே. எல்லாம் கிடக்கக் காளி யண்ணனிடம் இவள் எதற்காக மல் லுக்கு நிற்க வேண்டும் ?

'அந்தக் கழுதையை இன்னிக்குத் தகுந்தபடி விசாரிக்கத்தான் போறேன்' என்று மனத்துக்குள் கூறிக் கொண்டே வெள்ளாத்தாள் வீட்டை நெருங்கினாள்.

ஆனால் மங்கா வீட்டில் இருந்தால் தானே ! வெள்ளாத்தாள் அவளுக் காகப் பானையில் மூடி வைத்திருந்த பழைய சோறு இன்னும் அப்படியே இருந்தது. காலையில் வெளியே சுற்றப் போனவள் திரும்பி வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்கவேயில்லை என்று தெரிந்தது.

''பார்த்தியா, வள்ளி ! வயசுப் பொண்ணு இப்படிக் கட்டுமட்டு இல்லாமல் கண்ட எடத்திலே சுத்திக் கிட்டுத் திரிஞ்சா பார்க்கிறவங்க கரிச்சுக் கொட்ட மாட்டாங்களா ? நான் ஒண்டிக்காரி என்ன செய்ய முடியும்? வேலை செய்யப் போவேணு. இந்தக் கழுதையைக் கட்டி மேச்சிக் கிட்டிருப்பேனு ! நீயாவது அவளுக்குப் புத்தி சொல்லக் கூடாதா, வள்ளி?'' என்று ஆயாசத்துடன் கூறிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்த வெள்ளாத்தாள் தலைசுற்றல் தாங்காமல் ஒரு மூலையில் படுத்து விட்டாள்.

''நீங்க படுத்திருங்க ஆத்தா, நான் போய் மங்கா எங்கு இருந்தாலும் தேடிக் கூட்டியாரேன்'' என்று கூறி வள்ளி அங்கிருந்து சென்றாள்.

ஆனால் வள்ளி அதிக தூரம் போக வேண்டியிருக்க வில்லை. அருவிக்கரைத் திருப்பத்திலிருந்து சிறிது தூரம் சென்றதும் மூங்கிற்புதருக்கு அப்பால் அருவியின் மேம்பாறைக் கசத்தருகே மங்கா உட்கார்ந்து தலையைக் கோதிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''மங்கா!'' என்று குரல் கொடுத் தாள் வள்ளி.

திரும்பிப் பார்த்ததுமே மங்காவின் முகம் குப்பென்று மலர்ந்தது. காய வைத்திருந்த சேலையின் மறு தலைப்பை அள்ளியெடுத்துச் சரியாக மேலே சுற்றிக் கொண்டு அவசரம் அவசரமாக எழுந்தாள்.

''அங்கேயே நில்லு அக்கா. நான் முள்ளுத் தெச்சுக்கிட்டது போதும், நீயும் தெச்சுக்க வேண்டாம்'' என்று கூறியவாறு அவள் பாறைகளில் தாவித் தாவிச் சமதரைக்கு வந்ததும் ஒரு காலை நொண்டியவாறே வந்தாள்.

''கால்லே எப்படி முள் தெச்சுது?'' என்று கேட்டாள் வள்ளி.

''கண்மண் தெரியாம முள்ளை மிதிச் சுக்கிட்டு ஓடினால் முள்ளு தெக்காம விடுமா? ஆனா அந்த முள்ளு மட்டும் தெக்காம இருந்திச்சு, உங்க காளி யண்ணன் என்னைப் புடிச்சே இருக்க முடியாது, தெரியுமில்லே?'' என்று கூறியவாறே காலைப் பிடித்து விட்டுக் கொண்டாள் மங்கா.

''ஆமாம், என்ன தகராறு உங்க ளுக்குள்ளே ?''

''தகராறுன்னு யாரு சொன்னது? நான்தான் வீணுக்காச்சும் வம்பு குடுத்தேன், உங்கண்ணன் கோவத் தைக் கிளப்பறதுக்காக. அது கோவப் படறதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புச் சிரிப்பா வருது வள்ளியக்கா. அதுங் கைக்கெடிகாரத்தை நான் எடுத்திட் டேன்னு எப்படித் தூரத்திக்கிட்டு வந்திச்சு தெரியுமில்லே? கால்லே முள்ளு தெச்ச நான் கீழே உக்காந் தேன் பாரு, சடார்னு பாஞ்சு என் கையைப் பிடிச்சுது. நான்தான் தோத் துப் போயிட்டேனே, கைக்கடிகாரத் தைப் பிடுங்கிக்கிட்டு ஓட வேண் டியதுதானே. கையைப் பிடிச்ச பிடி விடாமே அப்படியே உக்காந்திருக்கு, பேயறைஞ்ச மாதிரி. என் கை என்னமா ரத்தம் கட்டிப் போச்சு, தெரியுமில்லே?'' என்று இடது கை மணிக்கட்டைப் பிசைந்து விட்டுக் கொண்டாள் மங்கா. (தொடரும்)


COLGATE
All Purpose
TALCUM POWDER



கனவு

ஜன்னலுக்கு வெளியே கவிந்திருந்த தூங்குமூஞ்சி மரக் கிளைகளின் வழியாக நிலவு, கீற்றுக் கீற்றாக என் படுக்கை மீது விழுந்து கொண்டிருந்தது. உடம்பிலே ஆங்காங்கு தீப்பட்ட புண்கள். மனப் புண்ணைவிட இந்தப் புண்கள் ஒன்றும் அதிகமாக வலிக்கவில்லை. ஆனால், என்னிடம் இருக்கும் கெட்ட குணங்களில் இடம் மாறினால் தூக்கம் வராது என்கிற பெரிய கெட்ட குணம் ஒன்று இன்று விசுவரூபத்துடன் என்னை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

நான் படுத்திருந்த இடம் சர்க்கார் ஆஸ்பத்திரி. 'காஷுவாலிடி' வார்டு! தலையைச் சாய்த்து என் நேர் எதிராக இருந்த படுக்கையைப் பார்த்தேன். தன் நினைவின்றி, கருகிய மலராய்ப் படுத்திருந்தாள் காயத்ரி. உடல் முழுவதும் நீலமாக ஏதோ மருந்தை அப்பியிருந்தார்கள். கார்மேகம் போல் சுருண்டு நெளிந்து பிடிக்கப்படாமல் பறக்கும் கூந்தலில் ஓர் இழையைக்கூடக் காணோம். பிறை போன்ற நெற்றியைப் பாதி மறைத்த தோற்றத்தில் சுருண்டு விளையாடும் அந்தக் குழற் கற்றைகள்? அவை திரும்பவும் அதே மாதிரி வளர்ந்து அவளுக்கு அழகூட்டுமா? அவளோ இருக்கப் போகிறாளோ இல்லையோ! பைத்தியம் மாதிரி கூந்தலைப் பற்றி நான் நினைக்க ஆரம்பித்து விட்டேன்.

'டக் டக்'கென்று நர்ஸ் நடந்து வந்தாள். காயத்ரியின் நாடித் துடிப்பைப் பரிசோதித்தாள். கவலையின் ரேகைகள் முகம் எங்கும் பரவ என்னைத் தேடி வந்தாள்.

''நீங்கள் இன்னும் தூங்கவில்லையா? வீணாக மனத்தை அலட்டிக் கொண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். ஜுரம் கிரம் வந்தால் தொந்தரவு.... நானே

கல்கி வெள்ளி விழா சிறுகதைப் போட்டியில்



சரோஜா ராமமூர்த்தி

"என்னம்மா?" நானும், நர்ஸும் ஒரே சமயத்தில் காயத்ரியைத் திரும்பிப் பார்த்தோம். அவள் அசைவற்றுப் படுத்திருந்தாள். எப்பொழுதாவது இலேசான ஒரு முனகல்.



மறுநாள் உங்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்........"

நான் நர்ஸ் சொல்வதைக் கூர்ந்து கேட்டேன். நாளை மறுநாள் நான் மட்டும் வீட்டுக்குப் போகப் போகிறேன். அதோ, அவள் ? சின்ன வயசிலிருந்து வாழ்க்கையையே கனவாகக் கண்டு கொண்டிருந்தாளே அவள்? அவள் திரும்பவும் என்னுடன் வரமாட்டாளா? நானும், அவளும் அடுத்தடுத்த அறைகளில் குடித்தனம் நடத்தப் போவதில்லையா? மேஜையின் மீதிருந்த கோப்பையிலிருந்து நர்ஸ் 'ஹார்லிக்ஸை'ப் பரிவுடன் கரண்டியினால் என் வாயில் புகட்டினாள். "ஸிஸ்டர்!" என்றேன் நான். என் நெஞ்சிலே கல்லை ஏற்றினாற்போல் கனம்.

மூன்றாவது பரிசு பெற்ற கதை 3

''வலி தெரியாமல் இருக்க டாக்டர் ஊசி போட்டிருக்கிறார். இலேசாகவா உடம்பு வெந்திருக்கிறது? குணமாக ரொம்ப நாட்கள் ஆகும். நீங்கள் சமயத்தில் உதவி செய்யாமல் இருந்திருந்தால் இந்த நிலையில்கூட இருந்திருக்க மாட்டாள்.....'' போர்வையை மெதுவாக எடுத்து இடுப்புவரை போர்த்தி விட்டு ஸிஸ்டர் வராந்தா வழியாக வெளியே போக ஆரம்பித்தாள். மறுபடியும் அமைதி நிலவியது.

அமைதிக்கும், கனவுக்கும் மிக மிக வேற்றுமை உண்டு. எல்லாம் அமைந்த நிலையில், மன எழுச்சிகளுக்கு மனம் பணிந்து பதறாமல் ஒரே நிலையில், ஒருவித சுகத்தைத் தருவதுதான் அமைதி.

கனவு? இன்பத்தையும், துன்பத்தையும் ஆசையையும், நிராசையையும் எண்ணத்தில் தேக்கி வைத்துச் சுவைப்பதாக இருக்கலாம்.

சிலர் தூங்கும்போது கனவு காண்பார்கள். ஆனால், என் ஆருயிர்த் தோழி காயத்ரி விழித்துக் கொண்டே கனவு காணும் வர்க்கத்தைச் சேர்ந்தவள்.

நான் எதைப் பற்றியும் கனவு காணும் வர்க்கத்தைச் சேர்ந்தவளல்ல. சிலர் இருக்கிறார்கள். பத்தாவது வகுப்புப் படிக்கும் போதே, கலெக்டர் உத்தியோகத்தைப் பற்றிக் கனவு காண்பார்கள். அரசியலில் நுழைந்தவுடன் அயல்நாட்டுப் பிரயாணம் சிலருடைய கனவாகவே இருக்கும். காயத்ரி எப்பொழுதும் எதைப் பற்றியாவது யோசனை செய்து கொண்டேயிருப்பாள். கல்லூரி நாட்களில் சரக்கொன்றை மரத்தடிதான் அவளுடைய யோகத்துக்கு ஏற்ற இடமாக இருந்தது.

கண் விழிகள் சோர, தன்னைச் சுற்றிலும் சளசளவென்று பேசும் மாணவிகள் கூட்டத்தின் இடையே காயத்ரி எதைப் பற்றியாவது யோசனை செய்து கொண்டேயிருப்பாள்.

'காயத்ரியின் வாயிலிருந்து இரண்டு வார்த்தைகள் வருவதற்குள் நான் அதோ அந்த வாதாம் மரத்தை நாலு தடவைகள் சுற்றி வந்து காண்பிக்கிறேன்' என்பாள் எங்களுடன் படித்த மாலதி. அவள் ஓயாமல் பேசும் வர்க்கத்தைச் சேர்ந்தவள்.

அந்தச் சவாலைக் கேட்கும் காயத்ரி புன்முறுவல் ஒன்றை உதிர்த்துவிட்டு மறுபடியும் கனவு காண ஆரம்பித்து விடுவாள். வகுப்பிலும் இப்படித்தான். அவள் எப்படிப் படித்தாளோ, அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். தேர்வு வந்தது. 'பூ! காயத்ரியாவது பாஸ் பண்ணவாவது?' என்றாள் வாயாடி மாலதி.

எனக்கு ரோஷமாக இருந்தது. காயத்ரி என்ன மக்கா, மண்டுவா? ஓயாமல் சளசளவென்று பேசினால்தான் தேர்வில் வெற்றி காண முடியுமா ? ஒரு வேளை நாம் இப்போது அதிகம் பேசிக் கொண்டிருப்பதினால்தான் காரியத்தில் ஒன்றுமில்லாமல் இருக்கிறோமா என்கிற சந்தேகம் எனக்கு அடிக்கடி வருவதுண்டு. அவள் கண்டிப்பாகப் பாஸ் செய்து விடுவாள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

ரிசல்ட் வந்தது. மூன்றாவது வகுப்பில் தேறியிருந்தாள் காயத்ரி. எனக்கொரு 'பார்ட்' போய் விட்டது. நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எத்தனை மாணவ,மாணவியர் என்னுடன் எம். எஸ். எம். என்று வரத் தயாராக இருக்கிறார்கள்? ஒரு தினம் கடற்கரையில் நானும், அவளும் உட்கார்ந்திருந்தோம். அன்று பௌர்ணமி. நிலவு கடலிலிருந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். காயத்ரி முகத்தில் சலனம் ஏதுமில்லாமல், விழிகள்கூட அதிகம் சுழலாமல், கனவின் சாயை படிந்த தோற்றத்தில் நிலவுக்கும் அப்பால் எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன பார்க்கிறாய், காயத்ரி?' என்று கேட்டேன் நான். இரண்டு பொட்டலங்கள் பட்டாணிச் சுண்டல், நாலைந்து முறுக்குகள், இரண்டு மிளகு வடைகள் என்று துவம்சம் செய்து விட்டுப் பார்த்தால், இவள் அவற்றில் ஒன்றைக்கூடத் தொடாமல் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தால் எனக்கு எப்படி இருக்கும் ?

ஒரே வெட்கமாக இருந்தது. இப்படிச் சாப்பாட்டு ராமியாக இருப்பதால்தான் பரீட்சை 'புஸ்'ஸென்று போய் விட்டது போலும் !

''என்ன பார்க்கிறாய் அங்கே?''

''பார்க்கிறேனா? உம்.... எனக்கொரு சந்தேகம் சாரு. (அடியாள் பெயர் சாரதா) நிலவுக்கு வெகு அருகில் ரோஹிணி நட்சத்திரம் மட்டும் இருக்கிறதே. மற்றவை ஏன் தொலைவில் இருக்கின்றன?''

''எனக்கும் புராணப்படிதான் இதற்கு விளக்கம் சொல்லத் தெரியும். நாளும், நீயும் இலக்கியம்தானே பி. ஏ.யில் படித்தோம்? சொல்கிறேன் கேள். சந்திரனின் மனைவிகள் இருபத்தேழு நட்சத்திரங்கள். அவர்களில் சந்திரனுக்கு மிக மிகப் பிரியமானவள் ரோஹிணி. அவன் எல்லா ஆண்களையும் போல் இவளிடம் தனி ஆசை வைத்திருந்தான். (புராண காலத்து ஆண்கள்! இந்தக் காலத்தில் 'பைகாமி' அது இது என்று எத்தனையோ சட்டங்கள் ஆண்களின் ஆசைக்கு முட்டுக்கட்டை போட!) இதைப் பார்த்து மற்ற மனைவியர் கோபித்துக் கொண்டு தம் தந்தையிடம் கூற, அவர் சந்திரனைச் சபிக்க..... இப்படி அது ஒரு பெரிய சுவையான கதை. விவு விட்டும். அந்தக் கதைப் புத்தகத்தை என் பாட்டியைக் கேட்டு வாங்கி வந்து தருகிறேன். ஓ! நீ எம். ஏ. படிக்கப் போகிறாயா? சரி.... கல்யாணம் ஆனதும் புராண இதிகாசங்களைப் படிக்கலாம்......'' காயத்ரி மெதுவாக, கன்னங்கள் சிவப்பேற, ''போடி!'' என்றாள்.


''என்ன? என்ன?'' காயத்ரியும் தன் கனவு கலைந்து கல்யாணமென்றால் வெட்கப்படும் அளவுக்கு வந்திருக்கிறாள் என்றால், உண்மையிலேயே அவள் அம்மாவைப் பார்த்து என்ன தேதி என்று கேட்க வேண்டியதுதானே ?

ஆனால், முதலில் கல்யாண பந்தத்தில் நான் சிக்கிக் கொண்டேன். பரீட்சை தேற வேண்டும் என்று என் பெற்றோர் கருதவில்லை. நானும் தொடர்ந்து படிக்கவில்லை.



செப்டம்பர்
2 முதல்
சென்னை மற்றும்
தென்னாடெங்கும்
சித்ரா
புரொடக்ஷன்ஸ்
சின்னஞ்சிறு
உலகம்
திரைக்கதை, வசனம்
டைரக்ஷன் : K.S. கோபாலகிருஷ்ணன்
ELEGANT




மவுண்ட் ரோடு

பங்களூரில் தனிக் குடித்தனம் ஆரம்பித்தேன் நான். வீட்டுக்குத் தேவையான சாமான்களுடன் ஒரு கட்டு தபால் கவர்களை நான் வாங்கி வந்ததும் என் கணவர் திகைத்தார். பிறகுதான் அவருக்குப்புரிந்தது. எனக்கு ஓர் உயிரினுமினிய தோழி இருக்கிறாள் என்று. அவளைக் கனவுலகத்திலிருந்து நனவுலகுக்குக் கொண்டு வர வேண்டுமானால், குறைந்தது வாரத்துக்கு நான் இரண்டு கடிதங்களாவது எழுத வேண்டுமென்று.

அத்துடன் காயத்ரியின் தாயார் நான் ஊருக்குக் கிளம்பும் போது என்னிடம் ரகசியமாக ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

காயத்ரி ஒரு புதிராம். அவள் மனசிலே என்ன இருக்கிறதென்றே புரியவில்லையாம். எப்படியும் அவளுக்கு வரன் தேடும் பொறுப்பை நான் ஏற்றாக வேண்டுமாம்.

''ஓ! அதற்கென்ன? எத்தனையோ பிள்ளைகள் 'ஏர் கிராப்ட்'ல் வேலையாக இருக்கிறார்கள். பார்த்தால் போயிற்று......''

காயத்ரியிடம் நான் விடைபெற்றபோது அவள் கண்கள் இலேசாகக் கலங்கின. என்னென்னவோ எண்ணச் சூழலில் அவள் சிக்கித் தவிக்கிறாள் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

''காயத்ரி!'' என்றவாறு அவள் கரங்களை என் கைகளுக்குள் சேர்த்துப் பிடித்துக் கொண்டேன். ரோஜா இதழ்களின் மென்மையுடன் கூடிய அவை இலேசாக நடுங்குவதையும் உணர்ந்தேன்.

''சாரு! நீயும், நானும் என்றுமே பிரிய மாட்டோம் என்றிருந்தேன்.... அது பொய்த்து விட்டது....''

எனக்கும் வருத்தமாக இருந்தது. இருந்தாலும், அவள் பேச்சு முற்றிலும் சரியென்று தோன்றவில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பிரிவு ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. காலமெல்லாம் எப்படி இரு தோழிகள் சேர்ந்து வாழ முடியும்?

''காயத்ரி! அநாவசியமாக உன்னையே நீ குழப்பிக் கொள்கிறாய். உனக்கும் தகுந்த இடத்தில் மணமாகிக் கணவனுடன் இல்லறத்தை நடத்த ஆரம்பித்து விட்டால், நட்பெல்லாம் இரண்டாம் பக்ஷமாக ஆகிவிடும்...... இதைக் கேளடி. உனக்கும் பேஷான 'அவரை'ப் பிடிக்கப் போகிறேன். ஆமாம், பாரேன்.''

காயத்ரி பரக்கப் பரக்க விழித்தாள். பிறகு புன்முறுவல் பூத்தாள். என் அருகில் நெருங்கி மெதுவாக, ''திருமணம் என்றால் எனக்குப் பயமாகவும், அதே சமயத்தில் மகிழ்ச்சியாகவும் இருக்கிறதடி. என் மனசிலே என்னென்னவோ எண்ணங்கள். எத்தனையோ கவிதைகளையும், கதைகளையும் படித்திருக்கிறேன்..... ஆனால், காதல், திருமணம் பற்றி எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை, சாரு...... நீ எப்படி? உனக்குக் கல்யாணமாகி மூன்று மாதங்களாயிற்றே?'' என்றாள்.

காயத்ரியின் முகத்தை உற்றுப் பார்த்தேன் நான். கடற்கரையில் நிலவை வெறித்துப் பார்க்கும் அந்த நோக்கு. தன்னிலே தான் மூழ்கி, சுற்றுச் சூழ்நிலையை மறந்துவிட்ட தன்மை. பிறர் பார்த்து வாய்



குற்றாலத் தாய்மடியில்

''அலை மகன்''

குற்றாலத் தமிழன்னைக்
கோலமெழிற் குன்றுகளில்,
பெற்றாளே அருவியெனும்
பேரின்பக் குழந்தைகளை.

துள்ளிவரும் பிள்ளைகளாய்த்
தவழுகின்ற நீர் வீழ்ச்சி;
சொல்லுகின்ற கதை பலவும்,
சுந்தரத்தேன் கவிதையடி.


வேழ முகப் படாம்போல்
வீழ்கின்ற நீரருவி
வாழும் மலைமகளின்
வார்குழலோ? மேலாக்கோ?

தேன் சிந்தும் தேனருவித்
தித்திக்கு மெழிற் காட்சி;
வான் சிந்தும் நதியாகும்,
வண்ணமெழிற் கோலமடி.

அழகு மயில் தோகையிலே,
ஐங்கிளைகள் பிரிந்தது போல்;
ஒழுகிவிழும் ஐந்தருவி,
உள்ளமெலாம் பொங்குதடி.

சிற்றருவி பேரருவி
செண்பக நீரருவிக்
குற்றாலத் தாய் மடியில்,
குலவுமெழில் விந்தையடி.

மந்திகளின் களியாட்டம்,
மாந்தர்களின் குளியாட்டம்,
சிந்தையெலாம் இனிக்குதடி,
சீரார்ந்தக் குன்றுகளில்.



விட்டுச் சிரிக்கக் கூடிய நிகழ்ச்சிகளை 'என்ன பிரமாதம்!' என்று ஒதுக்கிவிடக் கூடிய அசமந்தத்தனம்! அவளை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமே.

''மூன்று மாதங்களில் என்ன சொல்லிவிட முடியும்? ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளச் சில வருஷங்களாவது வேண்டாமா? கல்யாணம் ஆன புதிதில் எல்லாரையும் போல் நானும், அவரும் சினிமா, அது இது என்று சுற்றிக் கொண்டிருக்கிறோம். ஓரளவுக்கு இதெல்லாம் கற்பனை வாழ்க்கைத்தரம். போகப் போகத்தான் சொல்ல வேண்டும். இருந்தாலும், பெண் நாணலைப் போன்றவள். எப்படியும் வளைந்து கொடுத்து இல்லறத்தை நடத்திக்கொண்டு போய் விடுவாள்.'

''நாணலாக இல்லாமல் இருந்தால்?''

காயத்ரியின் இந்தக் கேள்வி என்னைத் துணுக்குறச் செய்தது.

''கடினமான காட்டு மரங்களும் ரம்பத்துக்குப் பணிந்து போகக் கூடியவை. பெண்களாகிய நமக்கு ஒரு தர்மம் இருக்கிறது. கூடுமானவரையில் எதையும் அநுசரித்து வாழ்ந்து விட்டால் போதும். அதுதான் அந்தத் தர்மமும்கூட....''

அவர் என்னைத் தேடி வரவே, நான் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு, டாக்ஸியில் ஏறிக் கொண்டேன். இந்த நிகழ்ச்சியின் நெகிழ்வில் நான் உணர்ச்சி வசப்படுவதை அவர் என் அருகில் உட்கார்ந்திருந்தபோது கவனித்து விட்டார்.

''அழுகிறாயா, என்ன?''

''இல்லை! இல்லை! கண்ணில் தூசி விழுந்து விட்டது.''

''பொய் பொய் உன் தோழியைப் பிரிவது உனக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால், எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றி ஓர் உறுத்தல் இருந்து கொண்டேயிருக்கிறது. 'ஐ ஸே ஷி ஈஸ் நாட் அன் ஆவரேஜ் கேர்ள்'. புரிகிறதா உனக்கு?''

''ஆவரேஜ் இல்லாமல் என்னவாம்? நல்ல ரசிகை. கடல், வானம், ஆறு, மலை என்றால் தெவிட்டாமல் ரசிக்கும் தன்மை உடையவள். கவிதைகள் என்றால் உயிர். எப்பொழுதும் எதையோ தேடும் கண்கள். ஆஹா! காயத்ரியின் கண்களை நீங்கள் சரியாகப் பார்த்ததில்லை. இமை குவிந்து, விழிகள் சோர, அந்த நயனங்கள் சதா நீரில் மிதப்பவை போல் இருக்கும். கல்லூரி நாடகங்களில் அவளுக்குக் காவியநாயகிகளின் பாகம் கிடைத்துக் கொண்டிருந்தது!''

அவர் பேசவில்லை.

பிறகு நான் பெங்களூரிலிருந்து நீண்ட நீண்ட கடிதங்களை அவளுக்கு வரைந்து கொண்டிருந்தேன். கணவர் என்னுடன் காரியாலயத்திலிருந்து போனில் பேசியது; 'லால் பாக்' தாமரைக் குளத்தருகில் நான் மெதுவாகப் பாட அவர் ரசித்த விவரங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ?

பல மாதங்கள் அவர் காயத்ரியைப் பற்றி என்னுடன் பேசவில்லை. திடுமென்று ஒரு நாள் ''உன் சிநேகிதியை வரவழையேன்.....'' என்றார். கடிதம் எழுதினேன். அவளுக்கும் படிப்பு முடிந்து விட்டது.... சர்வகலாசாலையில் பி.எச்டி. படித்துக் கொண்டிருந்தாள். தற்சமயம் விடுமுறை வரவே, அவள் வருவதற்கு ஒப்புதல் தந்து கடிதம் போட்டிருந்தாள்.

இரண்டு வருஷ இடைவெளியில் நான் மாறியிருந்தேன். உடம்பில் சதை வைத்திருந்தது. எல்லாம் புரிந்துவிட்ட ஓர் அகம்பாவம் மிதக்கிறதாம் என் கண்களில்!

அவள்? அப்படியே இருந்தாள். சதா சிந்தனை, சிந்தனை. நெடிதுயர்ந்த சண்பக மரங்களின் கிளைகள் பூத்திருந்த சண்பக மலர்களைப் பார்த்தபடி நின்று விட்டாள். 'ஒரு வேளை கற்பனை ஏதாவது செய்கிறாயோ? சண்பக மலர்ச்செண்டை எடுத்துக் கருங் கூந்தலில் காதலன் சூட்ட, அதன் நறுமணத்தில் இவள் இரண்டறக் கலந்துவிடும் கற்பனையோ?' மெதுவாக நான் அவளிடம் கிசுகிசுத்தேன்.

கன்னங்களில் சிவப்பு நிறம் காணக் காயத்ரி 'போடி' என்றாள்.

அன்று சற்றும் எதிர்பாராதவிதமாக அவர் தம்முடன் விருந்து ஒன்றை அழைத்து வந்தார்.

மோதிர வளையங்கள் போன்ற கூந்தலுடைய கிராப்பு. நல்ல உயரம். அழுத்தமான உதடுகள். புகை பிடிப்பவராக இருக்க வேண்டும். உதடுகள் வெளுத்துத் திட்டுத் திட்டாகக் கறுத்திருந்தன. மேடான நெற்றி. கைகள் முழங்காலின் அருகே தொங்கின. வாயில் முகப்பில் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த நாங்கள் இவர்களுடைய வருகையால் எழுந்து நின்றோம்.

''மிஸ்டர், சங்கர்! எனது மனைவி இவள். அவள், அவளது உயிர்த்தோழி மிஸ். காயத்ரி'' என்று எங்களை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

சங்கர் என்னைப் பார்த்து வணங்கிவிட்டு, காயத்ரியின் பக்கமாகத் திரும்பி அவள் தோற்றத்தில் லயித்தபடி மெதுவாக, 'வணக்கம்' என்று தெரிவித்தார்.

அந்த அசட்டுப் பெண் பதிலேதும் சொல்லாமல் எங்கோ பார்த்தபடி, தன் நீர் விழிகளைச் சோரவிட்டு நின்றுகொண்டிருந்தாள்.

''காயத்ரி!'' என்று நான் மெதுவாக எழுப்பினேன். எதிரே தெரியும் நீலவானத்தின் ஒரு பக்கத்தில் பிறைநிலா சாய்ந்து தொங்குவதையும், சற்றுத் தள்ளி ரோஹிணி நட்சத்திரம் மினுக்குவதையும் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சாரு! சங்கருக்கு நம் வீட்டில்தான் இன்று சாப்பாடு. வீட்டுச் சமையலாகச் சாப்பிட்டு நாளாயிற்றாம். பத்தியமாக ஒரு துவையல், பொரித்த குழம்பு, சுட்ட அப்பளம் செய்.... ஓ! உன் சிநேகிதி வந்திருக்கிறாளா? அவளுக்கு வடை, பாயசத்துடன் சாப்பாடு போட வேண்டாமோ ?''

காயத்ரி தன் கனவைக் கலைத்தபடி இதைச் செவிமடுத்தாள். ''அதெல்லாம் வேண்டாம். சாதாரணச் சமையலே போதும் சாரு...''

''கல்யாணத்துக்கு அப்புறம் வடை, பாயசம் விருந்தெல்லாம் வைத்துக் கொள்ளலாம்....'' என்று சொன்னவள் திடுக்கிட்டு

பாலுஸேரி பெனிபிட் சிட்பண்ட் பிரைவேட் லிட்.

(நிறுவியது : 1947)

தலைமைக் காரியாலயம் & ரிஜிஸ்டர்டு ஆபீஸ் : பாலுஸேரி பில்டிங் 3, சிங்கராச்சாரி தெரு சென்னை - 5	கிளைகள் : புது டெல்லி -1, 3 & 5 பெங்களூர் - 9 கல்கத்தா - 29 பம்பாய் - 1 & 22

ஏலச் சீட்டுகள் – 1966 செப்டம்பர் ஸீரிஸ்

பம்பாய் கிளைகள்

கிங்ஸ் சர்க்கிள் கிளை

விஜய விஹார்
(ஷண்முகானந்தா சபா அருகில்)
17-A, பினாங் ரோடு, பம்பாய்-22 D. D.
போன் : 471455 - தந்தி : GROWRICH

ஏலத் தேதி : 11-9-66
(குறுகியகால சிட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 10-9-66

ஏலத் தேதி : 10-9-66
(நீண்டகால சிட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 8-9-66

வகுப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சிட்டுத்தொகை
குறுகியகால சிட்டுகள்			
A	200/-	25	5000/-
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சிட்டுகள்			
C	200/-	50	10000/-
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

கிங்ஸ் சர்க்கிள் கிளை :
வேலை நேரம் : காலை 8 முதல் 10-30 மணி வரை; மாலை 4 முதல் இரவு 8 மணி வரை
வார விடுமுறை நாள் - வெள்ளி

போர்ட் (Fort) கிளை

சத்னாம் மான்ஷன் முதல் மாடி
245, பி. டிமெல்லோ ரோடு
(G. P. O. அருகில்) பம்பாய் - 1 B. R.
தந்தி : EVERMANS

ஏலத் தேதி : 24-9-66
(குறுகிய&நீண்டகால சிட்டுகள்)
சேரக் கடைசி தேதி : 23-9-66
(குறுகிய&நீண்டகால சிட்டுகள்)

வகுப்பு	மாதச்சந்தா	மாதங்கள்	சிட்டுத்தொகை
குறுகியகால சிட்டுகள்			
B	100/-	25	2500/-
C	50/-	25	1250/-
F	25/-	25	625/-
G	20/-	25	500/-
நீண்டகால சிட்டுகள்			
A	100/-	50	5000/-
B	50/-	50	2500/-
D	20/-	50	1000/-

போர்ட் (Fort) கிளை :
வேலை நேரம் : காலை 11 முதல் மாலை 6 மணி வரை
வார விடுமுறை நாள் - ஞாயிறு

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சிட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

பாலுஸேரி மூலம் சேமிப்புகளைப் பெருக்கி பயனடையுங்கள்

இருவரையும் பார்த்தேன். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மளமளவென்று திருமண ஏற்பாடுகள் நடந்தன. காயத்ரியின் தாயார் என்னுடன் தான் சங்கர் — காயத்ரி திருமணம் நடந்ததாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

வெறும் பைத்தியக்காரத்தனம்! இதோ இப்படிக் கோரமாக உடல் வெந்து தன் நினைவின்றிக் கிடக்கும் தன் அருமை மகளை அந்த அம்மாள் பார்க்கும்போது என்ன சொல்வாளோ, எப்படித் துடிப்பாளோ?

விஷயத்தை விட்டு விட்டு எங்கோ போகிறேன். நான் இருந்த வீட்டில் ஒரு பகுதியை அவர்கள் குடித்தனம் நடத்துவதற்காக ஒழித்துக் கொடுத்தேன்.

புதுப் புனல் மாதிரி அவர்கள் வாழ்க்கையை வேகத்துடன் அநுபவித்தார்கள். அவர்கள் வாழ்ந்த விதம் எனக்கே அலுப்பூட்டியது. காயத்ரியின் சிந்தனை தோய்ந்த முகத்தைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்த சங்கர் இப்படிப் பட்டவர்த்தனமாக இருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. கதவு, தாழ் என்று பெரியவர்கள் கிழித்திருந்த கோட்டைத் தாண்டி அவர்கள் காட்டாறுபோல் சுழன்று கொண்டிருந்தார்கள்.

''சாரு! கொஞ்ச நாளைக்கு நாம் இருவரும் கேரளத்துப் பக்கம் யாத்திரை போய் விட்டு வரலாம்'' என்றார் என் கணவர்.

''போகலாமே. எனக்கும் இந்த அலுப்பூட்டும் 'சினிமாக் காட்சிகளை'ப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டது. உண்மையான ஒன்றை, மனத்துக்குத் தெம்பும், ஆனந்தமும் ஊட்டும் ஒன்றைப் பார்க்க ஆசையாக இருக்கிறது. குருவாயூர் போய் ஸ்ரீ கிருஷ்ணனைத் தரிசிக்கலாமே.....''

எங்கள் ஏற்பாடு ரகசியமாக இருந்தது. லீவு கிடைத்ததும் காயத்ரியிடம் கூறினேன்.

''சாரு! என்னைத் தனியாகவா விட்டு விட்டுப் போகிறாய்?, எனக்குப் பயமாக இருக்கிறதேடி.....'' என்றாள் அவள். நான் வியந்தேன். பயமா? கணவனுடன் வாழ்க்கை நடத்துவதற்குப் பயமா? எல்லாப் புது மணத் தம்பதிகளும் வரவேற்கக் கூடிய சூழ் நிலையல்லவா அது?

''சாரு! எனக்கு வாழ்க்கை அலுத்து விட்டது! இதற்கும் மேலாக ஒன்றை என் மனம் கனவு கண்டு கொண்டேயிருக்கிறது; பெரியதாக ஒன்றை!''

''சும்மா இருடி, காயத்ரி! எதையாவது பேசாதே. நீ இப்போது பழைய காயத்ரி இல்லை. எதையாவது கற்பனை, சிந்தனை பண்ணிக் கொண்டு நிற்காதே. உனக்கென்று கணவர், குடும்பம் என்றாகிவிட்டது. பொறுப்புடன், கடமையுடன் நடந்து கொள்ள வேண்டும். சங்கர் நல்ல பிள்ளை.''

''நல்ல பிள்ளைதான்! நல்ல பிள்ளை தான்! ஆனால் இந்த நல்லதைவிட இன்னும் நல்லதாக.....'' என்று ஆரம்பித்தாள் அவள். முன்னொரு சமயம் என் கணவர் அவளைப் பற்றி என்னிடம் 'அவள் சாதாரணப் பெண் அல்ல' என்று கூறியது என்னுடைய நினைவுக்கு வந்தது.

''சரிதான், போடி! கிடைத்ததைக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும். கைநிறையச் சம்பளம். ராஜா மாதிரி இருக்கிறார். உன்னைக் கண்ணில் வைத்து இமையால் மூடுகிறார். இன்னும் என்னவோ நல்ல பிள்ளையாமே?'' அவளுடன் எனக்குப் பேசப் பிடிக்கவில்லை. எல்லாம் சரியாகிவிடும் என்று நாங்கள் வெளியூருக்குப் போய்விட்டோம்.

எத்தனையோ ஆனந்தமாக இருந்தது ஸ்ரீ கிருஷ்ணனின் தரிசனம். ஊருக்குத் திரும்பும்போதுதான் காயத்ரியைப் பற்றி நினைவு வந்தது.

வீட்டினுள் நுழைந்ததும் ஒரே அதிர்ச்சி. சங்கர் ஒரு சோகப் புன்னகையை உதிர்த்து விட்டு வெளியே போய்விட்டார். காயத்ரி ஏதோ குடி முழுகினாற் போல் முகத்தை முழ உசரம் வைத்துக் கொண்டு, 'வந்து விட்டாயா சாரு' என்றவாறு உள்ளே போய்ப் படுக்கையில் படுத்து விட்டாள்.

பிரயாண அலுப்பு எனக்கு. ஆகவே, நாங்கள் என்ன ஏதுவென்று அவளைத் துருவிக் கேட்கவில்லை. கணவன், மனைவி தகராறுகள் சகஜமானவை. நாங்கள் தலையிடவும் விரும்பவில்லை.

ஒன்று மட்டும் புரிந்தது: காயத்ரி சங்கருக்கு அழகும், அமைதியும் அளிக்கக் கூடிய நல்ல இல்லறத்தை அமைக்கத் தவறிக் கொண்டிருக்கிறாள் என்று.


நாட்கள் நகர்ந்தன. அந்தப் பழைய காட்சிகள் அடியோடு மாறி விட்டன. வட துருவமும், தென் துருவமும் போல் அந்த வீட்டில் இருவரும் எதிர்த் திசைகளில் சென்று கொண்டிருந்தார்கள்.

சங்கர் ஹோட்டலில் சாப்பிட்டார். காயத்ரி நினைத்த போது படுக்கையிலிருந்து எழுந்தாள். தோன்றிய போது குளித்தாள்; சாப்பிட்டாள்.

எனக்கு இவையெல்லாம் ஒரே புதிர். 'சைகாலஜி' படித்த என் கணவருக்கு இரண்டும், இரண்டும் நாலு என்பது போல் இவை தெளிவாக இருந்தன. மனம் என்னும் அடக்கமான பேழைக்குள், அவசியமற்ற எண்ணங்கள், ஆசைகள் திணிக்கப் பட்டுவிட்டன. கற்பனையிலிருந்தும், கனவுலக எண்ணங்களிலிருந்தும் காயத்ரி விடுபட்டாலொழிய அவர்கள் போக்கு இவ்விதம்தான் இருக்கும் என்றார் அவர். நிலைமையை இப்படியே நீடிக்க விடுவதென்பது அசட்டுத்தனமாகப்பட்டது. எப்படியும் அன்று காயத்ரியின் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதிவிடலாமென்று நினைத்தேன்.

ஏற்கனவே சொல்லியிருந்தேனில்லையா, பிரயாணக் களைப்பென்று? பகல் உணவு சாப்பிட்ட பிறகு எழுதலாமென்று படுத்திருந்தேன். என்றுமில்லாத அதிசயமாகக் காயத்ரி அன்று காலையிலிருந்தே மிகுந்த சுறுசுறுப்புடன் காணப்பட்டாள்.

குளித்தாள். நெற்றியில் துலங்கும் குங்குமத்துடன் ஏதோ ஸ்தோத்திரங்களைக் கணீரென்று உச்சரித்தவாறு சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.



''என் ஜன்மத்திலே இன்னைக்குத் தான் முதல் முறையா சினிமா டிக்கட் 'பிளாக்' மார்க்கெட்லே வாங்கறேன்... இதுவரை வித்துண்டுதானிருந்தேன்!''

கணவனிடம் இரைந்து, ''இன்றைக்கு இங்கே சாப்பிடுங்கள். மாமியார் வீட்டைத் (ஹோட்டல்!) தேடி ஓட வேண்டாம்!'' என்று உத்தரவிட்டாள். ஒருக்களித்திருந்த எங்கள் வீட்டுக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தபடி, ''சாரு! தூங்குகிறாயா என்ன? உனக்குப் பிடிக்குமே அவியல் என்று எடுத்து வந்திருக்கிறேன்'' என்றாள்.

''அவியலா? கேரளத்து ஹோட்டல்களில் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்து விட்டதடி, காயத்ரி. மேடை மீது வைத்து விட்டுப் போ. நன்றாக மூடி வை. எங்கேயோ நினைவில் திறந்து போட்டு விடாதே....''

அரைத் தூக்கம் எனக்கு.

மேடை மீது 'ணங்'கென்று பாத்திரம் வைக்கும் ஓசை கேட்டது. தட்டு ஸ்டாண்டிலிருந்து தட்டை எடுக்கும் சத்தமும் வந்தது. 'டமா'ரென்று இரண்டு மூன்று தட்டுகள் கீழே விழுந்து எழுப்பும் ஓசையுடன், நான் தூங்கி விட்டேன்.

காயத்ரிக்கு ஏதோ வெறிதான் பிடித்திருக்க வேண்டும். ஆழ்ந்த தூக்கம் கலையும்படியாக அவளுடைய போர்ஷனிலிருந்து படங்கள் 'டமார் டமார்' என்று கீழே விழுந்து உடைந்து சிதறும் சத்தமும் ஒரே விசும்பல் ஒலியும் கேட்டன.

நான் நன்றாக விழித்துக் கொண்டு பார்க்கும்போது சங்கர் தம் எச்சிற் கையைக் கழுவாமல், மேல் துண்டுடன், நாடி, மீசையுடன் வெளியே போய்க் கொண்டிருந்தார்.

நன்றாக ஓர் அறை வைத்து அவளைக் கேட்க வேண்டியதுதான் என்ற தீர்மானத்தில் எழுந்தவள் திக்கித்து, வாயடைத்து நின்றேன்.

''தீ.....தீ...ஐயோ! நெருப்பு!'' என்று சம்பந்தமில்லாமல் கூறிக் கொண்டே, காயத்ரியின் போர்ஷனுக்குள் நுழைந்து உள்ளே சென்றால், அவள் அங்கே அருவி ஸ்நானம் செய்கிற மாதிரி தீக்கொழுந்துகளில் நனைந்து நின்று கொண்டிருந்தாள்.

'காயத்ரி! அடி நாசகாரி' என்றவாறு அருகில் கிடந்த கோணியை எடுத்து அவள் மீது வீசி, அவளைத் தள்ளி, என் கைகளால் தேய்த்து முடிப்பதற்குள் அனிச்ச மலர் போன்ற அவள் குழைந்தபடி தன் நினைவிழந்து கீழே கிடந்தாள். பிறகு என் கணவர் வந்தார். ஆஸ்பத்திரி வண்டி வந்தது. இருவரையும் ஒரே வார்டில் படுக்கவும் வைத்திருக்கிறார்கள்.

நோயாளிகளுக்கு இரவு நீண்டுகொண்டுதான் வருமா? 'எல்லோரும் தூங்கும்போது தன்னைக் கட்டிய முனி விழித்திருக்கிறான்' என்கிற ஏதோ வாக்கியம் என் நினைவுக்கு வந்தது. ஆனால், நான் என்னைக் கட்டவுமில்லை. எந்தப் பந்தங்களிலிருந்தும் விடுதலையும் பெறவில்லை. கேவலம் உயிருக்குயிராக நேசித்த தோழியின் மனச் சுமை என்ன, அதைக் குறைக்க என்ன செய்யலாம் என்றுகூட நான் யோசிக்கவில்லை. குறைந்தபட்சம் அவளை அவள் கனவுகளோடு கன்னியாகவே இருக்கட்டும் என்றாவது நான் விட்டிருக்கலாம்.

பாவம், சங்கர்! அவர் கனவுகளையும் அநியாயமாகச் சிதைக்கும் புண்ணியத்தையும் நான் கட்டிக் கொண்டேன். ஆஸ்பத்திரிக்கு எதிரே இருந்த பூங்காவின் மணிக்கூண்டுக் கடிகாரம் நான்கு அடித்தது. கிழக்கே விடிவெள்ளி வைரம் போல் சுடர் விட்டது. எண்ணக் குவியல்களுக்கிடையே தூங்கி விட்டேன்.

விழித்துப் பார்க்கும்போது என் கணவரும், சங்கரும் வந்திருந்தார்கள். காயத்ரிக்கு நினைவு வந்து வந்து மாறிக் கொண்டிருக்கிறதாம். இன்னும் ஒரு நாள் இதே நிலையில் இருந்தாலும் பாதகமில்லையாம். அவள் பிழைத்து விடுவாளாம்.

பகல் நேர நர்ஸ் புன்முறுவலுடன் என் உடல்நிலையைப் பரிசோதித்துவிட்டு 'சார்ட்டில்' எழுதியவாறு, ''அந்தப் பெண் ஒரு கிளி போல் இருக்கே அம்மா... இந்த மாதிரிப் பெண்களுக்குக் கல்யாணமே கட்டக் கூடாது. 'மன ஏக்கம்' கொண்டவர்கள் எந்த நிமிஷத்தில் எதைச் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. இத்தனை தீப் புண்களுடன் இடமாக வலியைப் பற்றி யோசனையே பண்ணவில்லையே அந்தப் பெண்... கட்டிக்கிட்ட ஆம்பிள்ளைக்கு ஒரு 'பிரச்னை அந்தப் பெண்...'' என்றவாறு காயத்ரியின் படுக்கைப் பக்கம் சென்றாள்.

காயத்ரி கண் விழித்திருந்தாள். நானும் மெதுவாக எழுந்து அவள் படுக்கையறையில் சென்று உட்கார்ந்தேன். இருவரும் ஒருவரையொருவர் மௌனமாகவே பார்த்துக் கொண்டிருந்தோம்.

பிறகு நான்தான் முதலில் பேசினேன்.

''காயத்ரி! என்னைத் தெரிகிறதா உனக்கு? இன்னும் அரை மணியில் உன் அம்மா வந்து விடுவார்கள். இதோ என்னைப் பார்...''

அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. தீக் காயங்களின் நடுவே அது வழிந்தது. 'சாரு' என்று அவள் உதட்டைக்

பெறுவீர் ஒரு

கேவார்ட் கேவாபாக்ஸ்

கச்சிதமான படங்களை எடுக்கலாம் 50% பெரிதாக!

நேர்த்திமிக்க நீள்சதுரப் படங்களை உங்களுக்கு அளிக்கிறது கேவாபாக்ஸ்... சாதாரணக் காமிராக்களில் கிடைப்பதை விட 50% பெரிதாகவே அமையும். நெகட்டிவ்களின் நிகரற்ற தரச் சிறப்பு ஏற்றமிகு என்லார்ஜ்மெண்டுகளுக்கு உறுதிதரும்.


உச்சநிலைக்கு உயர்த்தும் கேவாபாக்ஸ்

சிறப்பியல்புகள்

- உறுதியான, அழகுநவீன வடிவப் பெட்டி முழுதுமே அதி உன்னதமான எஃகிலானது.
- கணக்கான காம்பொஸிஷனோடு விருக்கென்று எளிதில் படமெடுக்க உதவும், பளிச்சென்ற தெளிவுள்ள விழி-மட்ட வியூஃபைண்டர்.
- 3 வேக நிலைகள் (பல்பு, விநாடியிலே 1/50 பங்கு, 1/100 பங்கு). அதிவேகச் செயல்களை நுட்பமுடன் படமெடுங்கள்.
- 2 அபெர்ச்சர்கள் (f11 மற்றும் f16) ஆழத்தை ஃபோகஸ் செய்யும் பொருட்டு.

தவிர, கேவாபாக்ஸ் இயக்க எளிதானதே. ஒரு கிளிக் அடித்தால் போதும்— மீதியை கேவாபாக்ஸ் செய்துமுடித்துவிடும். உங்கள் ஏஜெண்ட் விற்பனையாளரைக் கேட்பீர்களானால் இயக்கிக் காட்டுவார். விலை : ரூ.44.00.

கேவார்ட் கேவாபாக்ஸ் தனித் தேர்ச்சி வாய்ந்த புகைப் படங்களை எடுக்கும் நற்புகழ் பெற்ற காமிரா!



கேவார்ட் கேவாபாக்ஸ்

AGIL

ஆக்பா-கேவார்ட் இந்தியா லிட்., கஸ்தூரி பில்டிங், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1.

Benson/1-APL-1 TM

வைட்டமின் நிறைந்த மாட்டுத் தீவனம்


வைட்டமின்கள் A மற்றும் D மிகுந்தது. புரதச் சத்துக்களும், தாதுப் பொருள்களும் அதிக அளவில் கலந்தது. இதர தீவனங்களைவிட மலிவானது. OK தீவனம் உபயோகித்தால், புராதனத் தீனிகளான பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு போன்றவை உபயோகிக்கத் தேவையில்லை. OK தீவனம் உடனடியாக உபயோகிக்கக் கூடியது. அரைக்கவோ, கலக்கவோ வேண்டியதில்லை.

OK வைட்டமின் நிறைந்த மாட்டுத் தீவனம்
அதிகப் பாலுக்கு வகை செய்கிறது...

தயாரிப்பாளர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை-1

உங்கள் அருகாமையிலுள்ள டீலர் அல்லது
டிஸ்ட்ரிபியூட்டரிடமிருந்து வாங்குங்கள்



குவித்து அழைப்பதைப் புரிந்து கொண்டேன். அவள் முகத்தின் அருகில் குனிந்து மேலும் அவள் கூறுவதைக் கவனிக்க முயன்றேன்.

''அவர்?'' என்றாள் அவள் பரபரப்புடன். நான் சங்கரைத் திரும்பிப் பார்த்தேன். கற்சிலை போல் நின்றிருந்தார் அந்த மனிதர்.

''சங்கர்! காயத்ரி உங்களைக் கூப்பிடுகிறாள், பாருங்கள்'' ஏதோ ஓர் அலட்சியத்துடன் சங்கர் படுக்கையை நெருங்கினார். சற்றுத் தள்ளி நின்றபடியே அவளைக் கவனித்தார்.

''மிஸ்டர் சங்கர்! அருகில் சென்று உட்காருங்கள்'' என்றார் என் கணவர்.

அவர் உட்காரவில்லை. இரு துளிக் கண்ணீர் உருண்டு தாடி ரோமங்களினிடையே வழிந்து நனைந்தது. பளபளவென்று அவை மின்னின.

உஷ்ணமான கண்ணீர் அது. காயத்ரி உடலில் ஏற்பட்ட தீப் புண்களை விட, சங்கரின் மனப் புண்ணிலிருந்து வழிந்த அது கொதிப்புடன் இருந்திருக்க வேண்டும்.

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அப்போது 'வார்டு' டாக்டர் வந்துவிடவே அனைவரும் ஒதுங்கி நின்றனர். டாக்டர் அவளைப் பரிசோதித்தார்.

''மிஸ்டர் சங்கர்! உடல்நிலையில் தெளிவு ஏற்பட்டு வருகிறது. எந்தவிதமான அதிர்ச்சிக்கோ, உணர்ச்சிக்கோ இடம் கொடுக்கக் கூடாது. கூடுமானவரை நீங்கள் அதிகம் இங்கே வரவேண்டாம். இவர்கள் தாயார் இருந்து கவனித்துக்கொண்டால் போதும்...''

''ஆகட்டும், டாக்டர்! அவர்களும் காலை ரயிலில் வந்துவிடுவார்கள்...'' காயத்ரியின் தாயாரை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து விட்டுச் சென்ற சங்கர் காயத்ரியின் கண்களில் படாமல் ஒதுங்கியே இருந்தார். நான் வீடு திரும்பிவிட்டேன். எனக்கொன்றும் அதிகப் புண்கள் இல்லை. கைகளில், மணிக்கட்டில், சிறிது புண்கள். அவை ஆற ஆரம்பித்து விட்டன. தாயின் அரவணைப்பில் காயத்ரி தேறி வந்தாள். நாலைந்து நாட்களுக்கு ஒரு முறை சங்கர் சென்று பார்த்து வந்தார். அவள் முற்றிலும் குணமானவுடன் பழைய காயத்ரியாகவா இருந்தாள்?

சே...சே... அடியோடு மாறி விட்டாள். சுருண்ட அந்தக் குழற் கற்றைகள் இல்லை. எப்பொழுதும் நீரில் மிதப்பவை போன்ற கண்கள் வெளுத்து இடுங்கிவிட்டன. ஆனால், கற்பனை, கனவு இரண்டையும் மறந்து யதார்த்த உலகத்தில் வாழ்வதற்கு அவளின் இக்குளிப்புத் தேவையாக இருந்ததோ?

காயத்ரி பகல் உணவுக்கு அப்புறம் சோபாவில் சாய்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் அம்மா அலுப்புடன் என் அறைக்குள் வந்தவள், ''மாப்பிள்ளை நாலைந்து நாட்களாக வீட்டுக்கே வரவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், அம்மா? ஏதாவது அலுவலாக வெளியூர் போயிருக்கலாமல்லவா? பொறுத்துப் பார்ப்போம்...''

ஆனால், காரியாலயத்திலிருந்து திரும்பிய என் கணவர் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்தார். ரிஷிகேசத்திலிருந்த சங்கரிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

'அருமை நண்பருக்கும், சகோதரிக்கும்' என்று எங்கள் இருவருக்குமே அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

'இமயத்தின் தாழ்வரையில் அமைதியை நாடி நான் வந்திருக்கிறேன். தவறு என்னுடையது என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். வெளித் தோற்றத்தால் காயத்ரியைப் பற்றி நான் கட்டிய முடிவு தவறானது என்பதைப் புரிந்துகொண்டேன்.

அவளுக்கு ஏற்ற கணவன் நான் அல்ல. எங்களுடைய ஆரம்ப வாழ்க்கை காட்டாற்றின் நீர்ச் சுழல் போல் சுழன்று சென்று பள்ளத்தை நோக்கிப் பாய்ந்து தேங்கி விட்டது. அவளை எனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. மிகக் குறுகிய காலத்துக்குள் எங்களுக்குள் ஒருவிதக் கசப்பு வளர்ந்து விட்டது. என்னிடம் இல்லாத — அது என்ன என்று எனக்குப் புரியவில்லை — நான் சாதாரண சராசரி மனிதன். படித்தவன். வாழ்க்கை வளமாக நடக்கக் கைநிறையச் சம்பாதிக்கிறவன். இவையெல்லாம் உங்களுக்குத் தெரியும். மனைவியை உலக நியதிப்படி மகிழ்ச்சியாக வைத்திருக்க என்னால் முடியும். அவளைக் கண் போல் காக்கவும் முற்பட்டேன்.— தனிக் குணம் எதையோ அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட குணங்கள் அவளைத் திருப்திப்படுத்த முடியவில்லை. சண்டையும் பூசலுமாக நாங்கள் வாழ்ந்ததை ஊர் எப்படியோ அறிந்து கொண்டு விட்டது. நான் கடமை தவறியவன், மனைவிக்குத் துரோகம் செய்கிறவன் என்று அது இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து என்னைத் தெருவில் போகும்போதும் வரும்போதும் தூற்றிக் கொண்டேயிருந்தது. அதற்குச் சிகரமாக அமைந்துவிட்டது காயத்ரியின் அந்தச் செய்கை. சகோதரி! நீங்கள் மட்டும் போலீசார் கேட்ட கேள்விக்குக் காயத்ரியின் தலைப்பு யதேச்சையாகக் காஸ் போடும் 'ஸ்டவ்'வில் பிடித்துக் கொண்டு விட்டது என்று கூறாமல் இருந்திருந்தால், நான்? அதைப் பற்றி ஏன் கூற வேண்டும்?

அன்று இலையில் அவியலைப் பரிமாறியவள், சாதத்தைப் படைத்து விட்டு, என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

நான் சராசரி மனிதன் என்று சொல்லவில்லையா? உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, எதிரே சிற்பம் போல் நிற்கும் அவள் மலர்க் கரங்களை எட்டிப் பிடித்து, ''காயத்ரி! வாயேன். நீயும் நானும் சேர்ந்து சாப்பிடலாம்'' என்று அழைத்தேன். இந்தத் தவற்றை நான் செய்திருக்க வேண்டாம். விசுக்கென்று கையை உதறிக் கொண்டவள், என்னைப் பயங்கரமாக விழித்துப் பார்த்துவிட்டு, ''என்னைத் தொடாதீர்கள்'' என்று கத்தியவாறு உள்ளே சென்றுவிட்டாள். நான் கையை உதறிக் கொண்டு வெறுப்புடன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் சென்றுவிட்டேன்.

அப்புறம் அவள் ஏன் அந்த முடிவுக்கு வர வேண்டும்? மனோதத்துவ நிபுணர் சொல்கிறார்: 'நீங்கள் வெளியே சென்றபிறகு

அந்தப் பெண்ணின் மனத்தில் சோகத்தின் பாரம் அழுத்தி யிருக்க வேண்டும். எதிலிருந்தோ விடுதலை அடைந்து ஆனந்த வெள்ளத்தில் மிதக்க வேண்டும் என்கிற எண்ணம் தோன்றி யிருக்கவேண்டும். உடலே ஒரு சிறை போல் அவளுக்குத் தோன்றி யிருக்கக் கூடும். அதன் முடிவுதான் இது..'

மேலும் அவர் சொன்னார்: 'நீங்கள் கோபத்துடன் அவளை நாலு அறைகள் அறைந்திருந்தால் மனத்தில் குமுறித் தவிக்கும் எண்ணங்கள் கண்ணீராகப் பெருகி இந்த முடிவுக்கு வராமல் தவிர்த்திருக்கலாம். அவள் குரலுக்கு மேலாக நீங்கள் இரைந்து கத்தியிருந்தால் அவள் அடங்கியிருப்பாள்...'

அவர் படித்த விஷயத்தை அவர் ஒப்பித்துக்கொண்டு வந்தார்.

காயத்ரி நன்றாகக் குணமடைந்துவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டுதான் நான் ரயில் ஏறினேன். உங்களுக்குத் தெரியும், எனக்கு ஊரில் நிலபுலன்கள் உண்டென்று. நான் சம்பாதித்துச் சேமித்து வைத்ததில் பத்தாயிரம் போல் அவள் பெயருக்கு எழுதி வைத்திருக்கிறேன். பதினையாயிரம் பெறுமான இன்ஷூரன்ஸ் பாலிஸி அவள்பேரில் இருக்கிறது. அவள் சுகமாக, சுதந்திரமாக வாழ எல்லாச் சௌகரியங்களும் பணத்தினால் கிடைக்கும். இந்த ஏற்பாட்டை நான் பிச்சையிடுவது போல் இடவில்லை. என் தலையாய கடமை என்றும், என் உள்ளத்தில் அவளிடம் செழித்து வளர்ந்திருக்கும் அன்புக்காகவும், மனப்பூர்வமாக உணர்ந்து செய்திருக்கிறேன்.

நான் என் வேலையை ராஜிநாமாச் செய்து பல மாதங்கள் ஆயின. மனைவியைக் கொடுமைப்படுத்தி, அவளுக்குத் துரோகம் இழைத்ததால்தான் அவள் தற்கொலைக்குத் துணிந்தாள் என்கிற அவப் பெயர் சமூகத்தினிடையே எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

அந்தப் பெயர்? ஓ! அது ஆறாத மனத்துயரையும் புண்ணையும் அல்லவா எனக்குள் ஏற்படுத்தி விட்டது. காயத்ரி கடந்தவற்றை மறந்துவிட்டிருப்பாள். அவள் வாழ்க்கையைக் கனவாகவும் கனவை வாழ்க்கையாகவும் எண்ணிச் சுவைப்பதில் பழக்கப்பட்டவள். நான் அப்படி அல்ல.

வாழ்க்கை என்பது கனவே அல்ல; அது நிரந்தரமான உண்மை என்பதைப் புரிந்து கொண்டு வாழ்கிறேன். ஒருவனோ, ஒருத்தியோ இந்த உலகத்திலிருந்து போய் விட்டால் அவர்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கை கனவாகவும், மாயையாகவும் ஆகிவிடுகிறது. வாழ்கிறவர்களுக்கு வாழ்க்கை உண்மையாகத்தானே இருக்கிறது? இங்கே கனவும் கற்பனையும் சம்பந்தப்படாத யதார்த்த வாழ்க்கை ஒன்று இருக்கிறது.

நூற்றுக் கணக்கான குஷ்டரோகிகளின் நிவாரண சங்கத்துக்குள் நுழைந்து விட்டால் வாழ்க்கையைக் கனவாகக் காண முடியாது.

தன் உடலைத் தானே புசிக்கும் இந்த நோயில் அவதிப்படுகிறவர்களால் கனவே காண முடியாது. அவர்களுக்கு வேண்டியது உண்மையான தொண்டு. அதிலே நான் உண்மையாகக் கனவுக் கலப்பில்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

காயத்ரியும் நானும் ஒரு நாள் சந்திப்போம். அப்போது வெறும் கனவு அங்கே இருக்காது. உண்மைத் தோற்றத்தை, எங்கள் ஆத்மாவின் யதார்த்தத்தை உணர முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.''

கடிதத்தைப் படித்து முடித்த நான் கண்ணீருடன் அந்த அம்மாளைப் பார்த்தேன். கடிதம் எங்களுக்கு எழுதப்பட்டிருந்தாலும் அதன் உரிமையாளர் காயத்ரிதான். அவளிடமே அது சேர்க்கப்பட்டது.

தீயில் இட்ட செம்பொன் ஒளி பெறுவது போல், காயத்ரி மனம் மாறித்தான் இருந்தாள். ஆனால், கனவுகள் சிதைந்த நிலையில் உண்மையின் பிடிக்குள் அவள் சிக்கும்போது அந்த உண்மையையே வாழ்க்கையின் ஒளியாகக் காணச் சங்கர் இமயத்தின் தாளில் தொண்டு செய்துகொண்டிருந்தார்.

அன்று அடிவானம் செம்மை பூண்ட போது, காயத்ரியும் அவள் தாயாரும் ஊருக்குக் கிளம்பினர். வண்டி நெடுந்தூரம் சாலையில் செல்லும் வரையில் பார்த்துக் கொண்டே நின்றிருந்தேன்.

திசை மாறிய அவர்கள் வாழ்க்கை கனவாகவே முடிந்து விடுமா? இந்த வினாவுக்கு விடை தர யாரால் முடியும்?

காலம்தான் கூற வேண்டும்.



Zam-Buk
ஜாம்-பக் சிறந்த மூலிகைக் களிம்பு
Zam-Buk
SORE ACHING FEET
ஜாம்-பக், பாரதத்தின் உன்னதமான மூலிகைக் களிம்பு. விரைவாகவும், பத்திரமாயும் குணப்படுத்த உதவுகிறது.
காயங்களுக்கு
தீப்புண்களுக்கு
முகப் பருக்களுக்கு



18. மழு முனையில் மாதவம்

சரம் அசரம் என்ற இரண்டு இடங்களிலும் நிறைந்திருக்கிறார் சிவபெருமான். ஆயினும், சரம் எனப்படும் உயிர்களிடத்தில் சிறப்பாக நிற்கின்றார். அதிலும் அடியார்களிடத்திலே தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுகிறார். ஆதலின் அடியார் பக்தி சிறந்தது. அடியார் பக்தியினும் சிறந்தது, அடியவர்க்கு எய்தும் இடரினைக் களையும் திருத்தொண்டே. அத் திருத் தொண்டினை மேற்கொண்டவர் எறிபத்த நாயனார். அடியவர்களின் இடர்களை மழுவினால் எறிந்து நீக்கி வந்தவர் அவர். அது காரணமாகவே எறிபத்த நாயனார் என்னும் திருநாமத்தைப் பெற்றார்.

சோழமன்னர்களுக்கு ஐந்து நகரங்கள் ராஜதானியாக இருந்தன. அவைகளுள் ஒன்று கருவூர். திருச்சியிலிருந்து ஈரோடு செல்லும் வழியில் உள்ளது இத் திருத்தலம். கொங்கு நாட்டுத் தேவாரம் பெற்ற ஏழு தலங்களுள் இதுவும் ஒன்று. ஆழ்ந்த அகழிகளும், உயர்ந்த மதில்களும், சோலைகளும் சூழ்ந்த கருவூரில், மாட மாளிகைகளும், மணி மண்டபங்களும் நிறைந்து விளங்கின. முனிவர் பலர் மாமர வடிவாகி இரு கரைகளிலும் தவம் செய்த காரணத்தால் ஆம்ராவதி (இன்றைய அமராவதி) என்று பெயர் பெற்ற சிறந்த நதியின் கரையில் விளங்குவது கருவூர். இந்தத் தலத்தில் காமதேனு வழிபட்டபடியால் திருக் கோயிலுக்கு ஆனிலை என்று பேர் உண்டாயிற்று. திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமிக்குப் பசுபதீச்சுரர் என்பது திருநாமம். இத்துணைச் சிறப்புக்கள் பெற்ற கருவூருக்குச் சென்று தொழுது வந்தால் மீண்டும் கருவாகப் பிறக்கும் 'கருவூருக்கு'ப் போக வேண்டியிராது.

பொன்மலைப் புலிவென் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே யாக
அயல்வழி அடைத்த சோழன்
மன்னிய அனபா யன்சீர்
மரபின்மா நகர மாகும்
தொன்னெடுங் கருவூர் என்னும்
சுடர்மணி வீதி மூதூர்



திருமுருக கிருபானந்த வாரியார்

சோழ மன்னர் வடநாடு வென்று இமயத்தில் புலிக் கொடி நாட்டியவர். 'புலிக் கொடி' என்று பெருமையாகச் சொல்கிறோமே, புலிக்கு என்ன அத்துணைச் சிறப்பு?' என்று வினவலாம். வேட்டையாடும் புலி எந்தப் பிராணியை யாவது அடிக்கும். அடிபட்ட பிராணி இடது பக்கம் விழுந்தால் அதைத் தின்னாது புலி. வலது பக்கம் விழுந்தால் தான் தின்னும். அத்தகைய வீரம் இருந்ததால்தான் புலிக் கொடியைத் தங்கள் கொடியாக வைத்துக் கொண்டிருந்தனர் சோழர். அந்தப் புலிக் கொடியைப் பொன் மலையாக இருக்கின்ற இமயமலையில் நாட்டினார் சோழ மன்னர். வேற்று நாட்டவர் நம் பாரத நாட்டுக்கு வருவதற்கு இமயத்தில் பல வழிகள் இருந்தன. அதனால் பாரதம் தாக்குதல்களுக்கு உள்ளாகும் என்று அறிந்த சோழ மன்னர் அந்த வழிகளை யெல்லாம் அடைத்தார்; புதிய வழிகளை உண்டாக்கி வீரர்களைக் காவலுக்கு வைத்தார்.

அக் கருவூரில் உள்ள திருக் கோயிலில் கருணைக் கடலாக எழுந்தருளியுள்ள பசுபதீச்சுரரை எப்போதும் வழிபட்டு வந்த எறிபத்த நாயனார், சிவனடியார்களுக்கு எல்லையில்லாத அன்புடன் தொண்டு புரிந்து வந்தார். சிவனருட் செல்வர்களுக்கு அடுக்கத் தகாத இடர்கள் வந்த காலத்தில் குகையினின்றும் புறப்பட்ட சிங்கம் போல் தோன்றும் எறிபத்தர், அந்த இடர் நீங்க வேதங்கள் பரவும் பரசு ஆயுதத்தால் எறிந்து உதவி புரிவார்.

மழைவளர் உலகில் எங்கும்
  மன்னிய சைவம் ஓங்க
அழலவிர் சடையன் அன்பர்க்
  கடாதன அடுத்த போது
முழையரி என்னத் தோன்றி
  மூண்டெழ எறிந்து தீர்க்கும்
பழமறை பரசும் தூய
  பரசுமுன் எடுக்கப் பெற்றார்.

பரசு என்ற கோடரி போன்ற மழு ஆயுதம் இங்கு அடியவர் அல்லலை அகற்றுவதற்கே பயன்பட. அதனால் தான் சேக்கிழார் பெருமான், ''பழமறை பரசும் தூய பரசு'' என்றார்.

எறிபத்த நாயனார் கருவூரில் வாழ்ந்து வந்தபோது சிவகாமியாண்டார் என்னும் முனிவர் ஒருவர் அத்தலத்தில் இருந்தார். அவர் ஆனிலைக் கோயில் இறைவருக்கு விதிப்படி புஷ்பக் கைங்கரியம் புரிந்து வந்தார்.



வைகறை உணர்ந்து போந்து
புனல்மூழ்கி வாயும் கட்டி
மொய்ம்மலர் நெருங்கு வாச
நந்தன வனத்து முன்னிக்
கையினில் தெரிந்து நல்ல
கமழ்முகை அலரும் வேலைத்
தெய்வநா யகர்க்குச் — சாத்தும்
திருப்பள்ளித் தாமம் கொய்து.

சிவகாமியாண்டார் பிராதக் காலத்தில் எழுந்து நீராடி நெற்றியில் நீறு அணிந்து வாயை ஒரு துண்டினால் கட்டிக் கொண்டு, வாசனை மிக்க மலர்கள் உள்ள திருநந்தவனத்துக்குச் செல்வார். ஐந்தெழுத்தை நெஞ்சில் உச்சரித்துக் கொண்டே மலரும் தருணத்தில் உள்ள மலர்களைப் பறிப்பார். அவ்வாறு பறித்த மலர்களைச் சுத்தமான மேடையில் வைத்து, பஞ்சாக்ஷரம் சொல்லிக் கொண்டே மாலையாகத் தொடுப்பார். அந்த மாலையைக் கூடையில் வைத்து அப் பூங்கூடையை ஒரு தோளில் தாங்கி உயர்த்திக் கொண்டு சென்று, திருக்கோயிலில் காலந் தோறும் ஆலமுண்ட அரனுருக்குப் புனைவிப்பார்.

பூவும் நீருமே சிறந்த சிவ புண்ணியம். மனவாக்குக் கெட்டாத பரமனைப் பூவும் நீரும் கொண்டே வழிபடுதல் வேண்டும். பூவும் நீரும் என்ற இந்தப் படைகளைக் கொண்டே மறலியை வென்றார் மார்க்கண்டேயர். ''புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு'' என்பது தமிழ் மறை.

அன்றைய தினம் புரட்டாசித் திங்கள் அஷ்டமி திதி. மறுநாள் மகா நவமி விழா. அவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட ஊரெங்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. சிவகாமியாண்டார் வழக்கம்போல் அதிகாலையில் நீராடித் திருநீறும் கண்டிகையும் புனைந்து, திருநந்தவனம் சென்று மொட்டறு முன் மலர் பறித்தார். அவ்வாறு பறித்த மலர்களைக் கூடையில் வைத்தார். அம்மலர்களை இறைவருக்குத் தரும் பொருட்டு, பூங்கூடையைத் தண்டில் தொங்க விட்டுத் திருக்கோயிலை நோக்கி விரைந்தார்.

கருவூரை ஆளுகின்ற மன்னர் புகழ்ச் சோழர். பட்டவர்த்தனம் என்பது அவரது பட்டத்து யானை. புகழ்ச் சோழருக்கு அநேக போர்களில் இந்த யானை வெற்றியையும், வெற்றி மாலையையும் சூட்டியது. ஆதலால் இந்த யானைமீது மன்னருக்குப் பிரியம் அதிகம் உண்டு. நவமியன்று அந்த யானையை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். ஆம்ராவதியில் குளிப்பாட்டினார்கள். நீராடிய யானை மிகுந்த களிப்புடன் மதம் கொண்டு வந்து கொண்டிருந்தது. அதன்மீது பாகர் இருவர் இருந்தனர். அந்த யானைக்குப் பக்கங்களில் இருவரும் முன்னே ஒருவருமாகச் செலுத்து கின்ற பரிகோற்காரர் மூவர் வந்து கொண்டிருந்தனர். மலை போன்ற அந்த யானை மிகவும் வேகமாக வந்தது. அதனைக் கண்டோர் அஞ்சி ஓடினார்கள்.

வென்றிமால் யானை தன்னை
மேல்கொண்ட பாக ரோடும்
சென்றொரு தெருவின் முட்டிச்
சிவகாமி யார்முன் செல்ல



வன்தனிக் தண்டில் தூங்கும்
மலர்கொள்பூக் கூடை தன்னைப்
பின்தொடர்ந் தோடிச் சென்று
பிடித்துமுன் பறித்துச் சிந்த.

சிவகாமியாண்டார் மலர்க் கூடையுடன் சென்றுகொண்டிருந்தார். அந்தத் தெரு வழியாகச் சென்ற யானை, முன்னே செல்லுகிற சிவகாமியாண்டாரைப் பின்தொடர்ந்து ஓடிச் சென்றது. அவர் தமது திருத்தோள் மீது தண்டில் தொங்கவிட்டிருந்த பூக்கூடையைத் தும்பிக்கையால் பறித்து மண்ணில் சிந்தியது. அது கண்ட பாகர், சண்டமாருதம் போல் விரைந்து செல்லும் யானையை வேறொரு புறமாகச் செலுத்திக் கொண்டு சென்றனர்.

சிவகாமியாண்டார் தமது திருத்தொண்டுக்குத் தடை நேர்ந்தது குறித்துப் பதைபதைத்தார். யானை விரைந்து சென்றதால் அதை நெருங்க முடியாமல், தளர்ந்த வயதுடைய அவர் தவித்தார். மண்மிசை வீழ்ந்து நிலத்தைக் கையால் அறைந்தார்; துன்பக் கடலில் மூழ்கி, ''சிவதா, சிவதா'' என்று கூறிச் சிவபெருமானைத் துதித்தார். 'சிவதா' என்பது சிவபெருமானைக் குறித்து ஓலமிடும் ஒரு சொல்.

களியா னையின்ஈர் உரியாய் சிவதா !
எளியார் வலியாம் இறைவா ! சிவதா !
அளியார் அடியார் அறிவே ! சிவதா !
தெளிவார் அமுதே ! சிவதா ! சிவதா !

சிவகாமியாண்டார் இறைவனைக் குறித்து முறையிடும் போது எறிபத்த நாயனார் அங்கு வந்தார். சிவகாமியாண்டாரின் முறையைக் கேட்டுச் சினம் மூண்டு கொதிப்புற்றார். ''எம்பிரானடியார்க்கு என்றும் வழிப்பகை யானையே யன்றோ? அதனைக் கொன்று வீழ்த்துவேன்'' என்று கூறிக் கொலை மழுவை ஏந்தி வந்தார்.

நகரசபை ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் எழுதினால், அவருக்குக் கீழ் உள்ள அதிகாரி வந்து உதவி செய்வது போல, அடியவர் சிவபெருமானை வேண்டியபோது அவரது பக்தரான எறிபத்தர் உதவி செய்ய வந்தார்.

யானை சென்ற வழியைத் தொடர்ந்து எறிபத்தர் விரைவுடன் சென்றார். அவர் சென்ற வேகம் காற்றும் நெருப்பும் கலந்து பொங்கி எழுந்தது போன்றிருந்தது. அவர் தொடருவதை அறிந்த யானையும் துள்ளிக் குதித்து ஓடியது.

'' கண்டவர் இதுமுன்(பு) அண்ணல்
உரித்த அக்களிறே போலும் !
அண்டரும் மண்ணு ளோரும்
தடுக்கினும் அடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வேன்'' என்று
கடாமழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று
காலினாற் குலுங்கப் பாய்ந்தார்.


''இது முன்னர் சிவபெருமான் உரித்த யானையே போலும்'' என்று ஐயுற்றார் நாயனார். ''விண்ணவரும் மண்ணவரும் வந்து தடுத்தாலும், நான் அஞ்சாது எதிர்த்து இந்த யானையைக் கொல்வேன்'' என்று வீராவேசத்துடன் கூறினார்; கையில் ஏந்தியிருந்த மழுவாயுதத்தை வலமாகச் சுற்றி ஆர்த்தார்; ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்தார்.

யானையின் தன்மை என்ன? மனிதனின் தன்மை என்ன? உயிரைத் துரும்பாய் மதித்து யானையை எதிர்த்த நாயனாருடைய அஞ்சாமை அளவிடற்பாற்றோ? எறிபத்தநாயனார் அடியவர் மீது தாயின் தலையன்பு கொண்டிருந்ததால் அச்சம் அவர் முன்னால் நிற்கவில்லை.

மதங்கொண்ட யானை, கண்களில் நெருப்புப் பொறி பறக்க மிகுந்த கோபத்துடன் நாயனாரை எதிர்த்துப் பாய்ந்தது. மலை போன்ற யானையை மிகுந்த ஆற்றலுடன் எதிர்த்த எறிபத்தர், பூக்கூடையைச் சிந்திய அதன் தும்பிக்கையை மழுவினால் துண்டித்தார். யானை கதறித் தரையில் மல்லாந்து வீழ்ந்தது. யானை மீதிருந்த இரு பாகர்களையும், இரு பக்கங்களிலும், முன்னும் பின்னுமாக யானையைச் செலுத்தி வந்த குத்துக்கோற் பாகர் மூவரையும் ஆக ஐவரைக் கொன்று வீழ்த்தினார் நாயனார்.

கையினைத் துணித்த போது
கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை அனைய வேழம்
புரண்டிட மருங்கு வந்த
வெய்யகோல் பாகர் மூவர்
மிசைகொண்டார் இருவ ராக
ஐவரைக் கொன்று நின்றார்
அருவரை அனைய தோளார்

எறிபத்த நாயனார் குற்றம் புரிந்த உறுப்பாகிய யானையின் தும்பிக்கையைத் துண்டித்தார். யானை குற்றம் புரிந்தபோது அதனைத் தடுக்காதிருந்தமையால், மேலிருந்த பாகர் இருவரையும், இருபுறத்தும் முன்னும் நின்ற பாகர் மூவரையும் ஆக ஐவரைக் கொன்றார். அது ஆணவ மலமாகிய யானையையும், புலன்கள் ஐந்தையும் வென்றார் என்ற அருட்குறிப்பை உணர்த்துகிறது. (தொடரும்)



விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட
22 காரட் ஹேமா கோல்டு கவரிங் நகைகள்
டுவின் பிரதர்ஸ்
கதம்ப மாளிகை


ஆகஸ்ட் 26 முதல்
சென்னை : கெயிட்டி, பிராட்வே, கிருஷ்ணவேணி
ஸ்ரீ கமலாலயம்
சரஸ்வதி
மற்றும்
தென்னாடு
எங்கும்
தாயே உனக்காக!
டைரக்ஷன்: பி. புல்லையா B.A.,
தயாரிப்பு: ஆர். எம். கண்ணப்பன்
கதை
"BALLAD OF A SOLDIER"
திரைக்கதை-பாடல்
கவிஞர் கண்ணதாசன்
வசனம்
ஏ.எல்.நாராயணன்
இசை
கே.வி.மகாதேவன்
படப்பிடிப்பு
நமசிவாயம்
ஸ்டுடியோ
சாரதா
RIGHTS CONTROLLED BY J.L.COMBINES
STERLING RD., MADRAS-34
ELEGANT
G.H.RAO

எறும்பு உலகம்

இந்தப் பூவுலகத்தில் முதன் முதலில் தோன்றிய ஜீவராசி, எறும்புகள் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கிறது இல்லையா? அதிசயம் ஆனால் உண்மை. மனிதன் தோன்றுவதற்கு ஐம்பது கோடி ஆண்டுகளுக்கு முன்பே எறும்புகள் தோன்றி விட்டன. இன்றைய நாகரிகத்தில் தலை சிறந்தவனாக விளங்கும் மனிதன் தன் வாழ்க்கை முறையை வகுத்துக் கொண்டது எறும்புகளைப் பார்த்துத்தான். நிலத்தை உழுது பயிரிட்டு விவசாயம் செய்யக் கற்றுக் கொடுத்தவை எறும்புகள். களஞ்சியங்களில் தானியங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ளுதல், கறவை மாடுகளைப் பராமரித்துக் காப்பாற்றுதல், பயன் தரும் வளர்ப்புப் பிராணிகளை வளர்த்தல், அடிமைகளைக் கொண்டு வேலை வாங்குதல், பல மாடிக் கட்டிடங்களை அமைத்தல், போர்ப் படைகளை அணிவகுத்து நடத்திச் செல்லுதல், நதிகளைக் கடக்கப் பாலங்களை அமைத்தல்-இப்படி இன்னும் எத்தனையோ காரியங்களை மனிதன் எறும்புகளின் வாழ்க்கையிலிருந்து தான் அறிந்து கொண்டான் என்றால் அது இன்றைய வளர்ந்துவிட்ட மனிதனுக்கு வியப்பாக இருக்கும். ஆனால் உண்மை என்னவோ அதுதான்.

ஃ ஃ ஃ

எறும்புகள் பேசிக் கொள்ளுமா? இன்றைய தந்தி பாஷையான 'மோர்ஸ்' முறையை எறும்புகள் எத்தனையோ லட்சம் வருஷங்களுக்கு முன்பிருந்தே கையாண்டு வருகின்றன. எப்படி?

எறும்புகளின் தலைக்கு இரு பக்கங்களிலும் இரண்டு நீண்ட, சன்னமான மீசைகள் இருக்கின்றன. இந்த மீசைகள் எப்போதும் துடித்துக் கொண்டேயிருக்கும். எறும்புகளுக்கு மீசையின் முக்கியத்வம் கொஞ்ச நஞ்சமல்ல. மீசையாலேயே அவை பேசிக் கொள்ளுகின்றன; நண்பர்களையும், விரோதிகளையும் அறிந்து கொள்ளுகின்றன. மீசையைக் கொண்டே சொந்த இடம் வேற்றிடம் என்பதைத் தெரிந்து கொள்ளுகின்றன.

மீசை, மனிதர்களுக்கு ஆண்மை, பெருமைக்குரிய சின்னமானால், எறும்புகளுக்கு அதுவே உயிர்நாடி.

ஃ ஃ ஃ

வசதியாக வீடு கட்டிக் கொண்டு வாழ்வதில் எறும்புகளுக்கு ஈடு இணையான ஜந்து உலகில் வேறு எதுவும் இல்லை என்று கூறி விடலாம். பல மாடிகளையும், அறைகளையும் கொண்டு எறும்புகள் பூமிக்குள் மட்டும்தான் வீடு அமைத்துக் கொள்ளும் என்பதல்ல.

சிலவகை எறும்புகள், மரங்களில் கூடுகள் கட்டிக் கொள்ளுகின்றன. இந்த எறும்புகளின் வாயிலிருந்து ஒருவித பசை சுரக்கும். இந்தத் திரவம் வெளிப்பட்டவுடன் மிக மெல்லிய காகிதம் போல் இறுகி விடும். இந்தக் 'காகிதம்' சாதாரண காகிதத்தைப் போன்றதல்ல. வெயில் இழியாது; அடை மழைக்கும் நனையாது. இந்தக் காகிதக் கூடுகளுக்கு வெள்ள பயம் இல்லை. விரோதி பயமும் குறைவே. இளம் தென்றலில் குளுமையாக ஆடிக் கொண்டிருக்கும் ஊஞ்சல்களில் பயம் ஏதுமின்றி எறும்புகள் காலம் கழிக்கும்.

அமேஜான் காடுகளில் இன்றைக்கும் ஏராளமான ஒற்றைத் தூண் மாடிகள் இருக்கின்றன. இந்த மாடிகள் எல்லாம் ராணிகள் மயம். ஆனால் இவை எறும்பு ராணிகள். இந்த ராணிகளோடு ராஜாக்கள், பரிசாரகர்கள், குழந்தை குட்டிகள் இருக்கும்.

தரைமீது இடையறாத வெள்ளப் பெருக்குகளின் தொல்லை. ஆகவே இந்த வேதனைகளைப் படமுடியாமல், அமேஜான் எறும்புகள் உயரமான மரங்களில் ஒற்றைத் தூண் மாடிகளைக் கட்டிக் கொள்ளுகின்றன. இந்த மாடிகளில்தான் அழகுப் பூங்காக்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

களிமண்ணைக் குழைத்து அந்தச் சேற்றினால் ஓர் அடி அகலமுள்ள கூடுகளை அந்த மரங்களின் இலைக் கிளைகளில் கட்டிக்கொள்ளும். இந்தக் கூடுகளில் தானியக் களஞ்சியங்கள் இருக்கும். ஓய்வு அறைகள், குட்டிகளின் அறைகள் அவற்றுக்குரிய வசதிகளுடன் இருக்கும். உள்ளே குறுக்கும் நெடுக்குமாகப் பல பாதைகள் இருக்கும். அந்த மரத்தின் வழியாகவே போய் வர முடியும். வேறு வழியில்லை. அதனால்தான் இதை ஒற்றைத் தூண் மாடி என்கிறோம்.

இந்த மாடியின் வெளித் தோற்றம், அழகு அமைப்பு இல்லாத உருண்டை போல் இருக்கும். அழகு இருக்கட்டும். பலமாக இரண்டு அங்குல மழை பெய்தால் மண்ணெல்லாம் கரைந்து, அந்த மாடி தரையைக் கவ்வி விடும். பல நாள் எறும்புகள் பட்ட பாடெல்லாம் புழுதியில் தெளித்த பன்னீர் போல் ஆகிவிடும். பிறகு திக்குத் திசை தெரியாமல் தாய் ஒரு பக்கம், குட்டி ஒரு பக்கம், சிப்பாய் ஒருபக்கம், பாட்டாளி ஒரு பக்கமாகச் சிதறிச் சீரழிய வேண்டியதுதான். ஆனால் இந்த எறும்புகள் அவ்வளவு அறிவற்ற மரமண்டைகளல்ல. அப்பேர்ப்பட்ட துன்பங்களை யெல்லாம் தேடிக் கொள்ளா.

மாடி கட்டும்போதே இந்த எறும்புகள் பலவித பூ விதைகளை, அந்த மாடச் சுவர்



களில் நட்டுவிடும். அந்த விதைகள் முளைத்துக் கிளைத்து வளரும். சுவர் முழுதும் வேர்கள் அடர்த்தியாக ஊன்றிக் கொள்ளும். சிறுகண் வலைபோல அந்த வேர்கள் மண்ணுக்கு ஒரு பிடிப்பாக அமையும். பிறகு ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனை அங்குல மழை பொழிந்தாலும் அந்த மாடி அசையாதது மட்டுமல்ல; நாள்தோறும் அந்தப் பூஞ் செடிகளில் பூத்துக் குலுங்கும் மலர்களால் அந்தக் கூடே ஒரு புத்தழகுடன் திகழும். அவற்றில் பல நிற மலர்கள் மலரும். திருஷ்டிப் பொம்மை போலிருந்த அந்தக் கூட்டின் தோற்றமே மாறி, கண்கவரும் விண்வெளிப் பூங்காவாகக் காட்சியளிக்கும்.

'ஐகோபில்லா' சாதி எறும்புகள் நம் நாட்டுக் கட்டெறும்புகளைப்போல் இருக்கும். இவை மரங்களின் மீதே வசிக்கும். இவற்றுக்கு மண்ணுலோ, காகிதத்தாலோ கூடு கட்டிக்கொள்ளத் தெரியாது. மரங்களின் தூர்களைத் துளைத்துப் பொந்து செய்துகொள்ளவும் இயலாது. இவை இலைகளைக் கொண்டு கூடு கட்டிக் கொள்ளும். அருகருகே இருக்கும் பெரிய இலைகளை வளைத்துக் கொள்ளும். இந்த இலைகளின் ஓரங்கள் ஒன்றையொன்று ஒட்டியிருக்கும்படி சில எறும்புகள் இழுத்துப் பிடித்துக் கொள்ளும். கைதேர்ந்த தையற்காரர்களைப் போல வேறு சில எறும்புகள் அந்த இலைகளின் ஓரங்களை 'சில்க்' கயிற்றால் சேர்த்துத் தைத்துவிடும். அது ஒரு பைமாதிரி உருவாகும். அந்தப் பையில் எறும்புகள் குடியிருக்கும். இம்மாதிரிக் கூடுகள் திருப்பதி மலையில் ஏராளமாக இருப்பதைக் காணலாம்.

ஃ ஃ ஃ

இந்த எறும்புகளைத் தவிரப் பாலைவனங்களில் தனிப்பட்ட எறும்பு சாதி ஒன்று இருக்கிறது. இந்த எறும்புகளின் கூடுகளுக்கு மணலும், பொடி மணலும் தேவை. மணல் அள்ளக் கூடைகளுக்கும், பெட்டிகளுக்கும் அவை எங்கே போகும்? ஆகவே, பெரிய பெரிய மீசையையும், தாடிகளையும் வளர்த்துக்கொள்கின்றன. அவற்றில் பொடி–மணலையும், சின்னஞ் சிறு கல் துண்டுகளையும் திணித்து, தேவையான இடங்களுக்குக் கொண்டு செல்லும். இந்தத் தாடிக்கார எறும்புகளைப் பாலைவனங்களில் தவிர வேறு எங்கும் காண முடியாது.

ஃ ஃ ஃ

தென் அமெரிக்காவிலும், ஜமைக்காவிலும் உள்ள எறும்புகளுக்கு விநோதமான பழக்கங்கள் உண்டு. இந்த எறும்புகள் சருகுகளால் தம் புற்றுகளைப் போர்த்திக் கொள்ளும். புற்றுகளுக்கு வெளியே எப்போதும் காவல் வைக்கும். எதிரி எறும்புகள் சண்டைக்கு வருவதாக இந்தக் காவல் அறிந்தால், உடனே புற்றின் மேலிருக்கும் இலைச் சருகுகள் மீது ஏறும். "எதிரி சேனை வருகிறது! ஜாக்கிரதை, ஜாக்கிரதை!" என எச்சரிப்பதுபோல், அந்தச் சருகுகள் மீது படபடவென்று அடிக்கும். இதனால் எழும் சத்தம் நமக்குக்கூடத் தெளிவாகக் கேட்கும். இந்த எச்சரிக்கையின் மூலம் எறும்புகள் அபாயத்தை உணர்ந்து எதிர்த்துப் போராடத் தயாராகும். சில சமயம் இந்தச் சருகு சலசலப்புக்கே எதிரிகள் மிரண்டு விடலாம்.

உலகில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட எறும்பு வகைகள் உள்ளன. இவைகளின் பழக்க வழக்கம் வாழ்க்கை முறை இவைகளைப் படிப்பது சுவையானதொரு நாவலைப் போன்றிருக்கும். எறும்புகள் சுறுசுறுப்புக்குப் பெயர்பெற்ற ஜந்துக்கள். ஆனால் இவைகளில் சோம்பேறிகளும்கூட உண்டு. இவை தங்கள் காரியங்களைச் செய்வதற்கு அடிமைகளை அமர்த்திக் கொள்ளுகின்றன.

எப்படி? சந்தையில் விலைக்கு வாங்குமா?

அமேஜான் சோம்பேறி எறும்புகள் உழைத்து வாழும் எறும்புகளின் கூட்டைத் தாக்கி அடிமை எறும்புகளைக்கொன்று குவித்து அதன் கூட்டில் உள்ள குட்டிகளைக் கைப் பற்றிக் கொண்டு திரும்பும்.

இப்படிக் கொண்டு வரப்பட்ட குட்டிகள் வளர்ந்து பெரியவையாகி வாழ்நாள் முழுவதும் பணிவிடை செய்யும். அவை அடிமைகளாக இருப்பதால், தம் எஜமானருக்கும் தம் சொந்த ஜாதியினருக்கும் மூண்டெழும் போர்களில், வேறு விதியின்றி எஜமானர் தரப்பில் நின்று போரிடும்.

ஃ ஃ ஃ

செயற்கையான, விஞ்ஞான ரீதியான சாதனங்களின் உதவியால்தான், மனிதன், காலநிலை மாறுபாடுகளைச் சமாளித்துக் கொள்ள முடியும். ஆனால் எறும்புகளோ அவற்றின் உடல்களையே இயற்கை ரசாயன சாலைகளாக்கிக் கொண்டு சரிக்கட்டிக் கொள்கின்றன. குளிர்நாடுகளிலுள்ள எறும்புகளை எடுத்துக் கொண்டால், பருவகாலங்களையொட்டி அவற்றின் உடலிலுள்ள திரவங்கள் மாறுதல் அடைகின்றன. குளிர்நாட்டுஎறும்புகளின் உடம்பு மரத்துப் போகாமலும், ரத்த ஓட்டம் தடைப்படாமலும் இருக்க, அவை ஒருவித ரசாயன திரவத்தைப் பீச்சுகின்றன என அண்மையில் தெரியவந்துள்ளது. குளிர்காலம் போனதும், தனிப்பட்ட இந்த ரசாயனப் பொருளும் எறும்புகளின் உடலிலிருந்து மறைந்துவிடும்.

ஃ ஃ ஃ

இப்படி எறும்புகளைப் பற்றிப் பல ரசமான, சுவையான, அற்புதமான, ஆச்சரியமான, உண்மையான தகவல்களை 'சீமல லோகம்' என்ற புத்தகத்தில் திரு அ. வேங்கடராமையா அவர்கள் தந்திருக்கிறார்கள். தெலுங்கில் உள்ள அதைத் 'அ[illegible]' தமிழில், சரளமாகப் படிக்கும்படியாக மொழிபெயர்த்திருக்கிறார் திரு கொ. ராமதாசன் அவர்கள். 'எறும்பு உலகம்' என்ற பெயரில் தென்மொழி புத்தக டிரஸ்ட் ஆதரவில் சென்னை தியாகராய நகரிலுள்ள பாரதி பண்ணையார் ரூ. 1.75க்கு இதை வெளியிட்டுள்ளார்கள். குறைந்த விலை நிறைந்த, சிறந்த விஷயங்கள். புத்தகத்திலுள் ஏராளமான விளக்கப்படங்கள், படிப்பவர்களுக்குச் சௌகரியமாக உள்ளன. இந்தப் புத்தகத்தைப் படித்தபின், 'எறும்புகள்தானே?' என்று அலட்சியப்படுத்தும்மனோபாவமேஏற்படாது.



கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும் லட்சிய உணவு பானம்

ஒரே ஸ்பூன் அளவு உட்கொள்வதில் உங்களுக்கு வேண்டிய எல்லாச் சக்தியும் இடைக்கிறது...

முழு ஆடைப் பாலும், கோகோவும், சிறந்த தரமான பார்லி மால்ட்டும், குளுகோஸும் நிரம்படக் கலக்கப்பட்ட கோகோ மால்டீனில் வலுவான தசைகளும், திடமான எலும்புகளும் அடையவும், வலுவும் உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. உங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்புயர்ந்த A, B, B-2 மற்றும் D வைட்டமின்கள் கோகோ மால்டீனில் இருக்கின்றன. ஆரோக்கிய நிலையிலும் நோயுற்ற நிலையிலும் இளையவர்களும் முதியவர்களும் அருந்தக்கூடிய லட்சிய ஊட்டப்பொருள் இது. கோகோ மால்டீனை அருந்தினால் அது ஓய்ந்துபோன நரம்புகளுக்கு இதமளிக்கிறது. படுக்கும்போது சூடாக அருந்தினால், ஆழ்ந்த உறக்கத்துக்கு வகை செய்கிறது.

கோகோ மால்டீன் லாபரடரீஸ்

உரிமையாளர்கள்: டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 16, புஸா ரோடு, புது டில்லி-5. போன்: 52835

பிராந்திய விற்பனை ஆபீஸ்:

76, எல்லிஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை - 2 போன்: 85982 - தந்தி: SOUTHLAND

TL-NP-30

அத்தியாயம் இருபது

லட்சியமா? வாழ்க்கையா?



வெற்றித் திருநகர்

தஞ்சை மாளிகையில் அன்றைக்கு இரவு மூவருக்கு உறக்கமற்ற இரவாகக் கழிந்தது.

மேல் மாடத்தில் விசுவநாதனும் லட்சுமியும் பேசிக் கொண்டிருந்தவற்றை மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த சாளுவ நரசிம்மருக்கு லட்சுமியின் போக்கு அவ்வளவாக நம்பிக்கையைத் தரவில்லை. அவன் கீழே இறங்கி வந்து உறங்கச் சென்றவுடன் அவளுடைய அறைக்குள் நுழைந்தார். விசுவநாதனுக்குத் தெரியாமல் அவளை எச்சரிக்கை செய்யத் தொடங்கினார்.

''லட்சுமி! விசுவநாதனை நான் எதற்காக இங்கே அழைத்து வந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். அவன் இங்கிருந்து புறப்படுவதற்குள் எனக்கு இரண்டில் ஒன்று முடிவு தெரிந்தாக வேண்டும். அவன் என்னோடு ஒத்துழைப்பதாக இருந்தால், இந்தச் சாம்ராஜ்யத்துக்கு அவன் சக்கரவர்த்தியாகவும் உன்னுடைய கணவனாகவும் இருப்பான். இல்லாவிட்டால்?... இல்லாவிட்டால்....?''

''வேண்டாமப்பா! உங்கள் வாயால் எதையும் சொல்லி விடாதீர்கள்'' என்று அவரைத் தடுக்க முனைந்தாள் லட்சுமி.

''சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்'' என்று அவளை இடைமறித்துவிட்டு, ''இல்லாவிட்டால் நீ அவனை மணக்க முடியாது என்பது மட்டுமல்ல; அவனுடைய பாண்டிய நாட்டின் மீது போர் தொடுத்து, அவனையும் போர்க்களத்தில் வீழ்த்தவோ, அல்லது அங்கிருந்து அவனை விஜயநகரத்துக்கு விரட்டவோ வேண்டிய நிலை வரும்'' என்று உறுதிமிக்க குரலில் கூறினார் சாளுவர்.

லட்சுமியின் மெல்லுடல் நடுக்கமுற்றது. அவளால் வாய் திறந்து எதுவும் பேச முடியவில்லை.

''லட்சுமி! விசுவநாதனைவிடப் பெரிய வீரர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். அவனுடைய அப்பா நாகமநாயக்கரை அவன் தோல்வியடையச் செய்து விட்டதால், என்னிடமும் அவனுடைய வீரம் பலித்து விடும் என்று நினைக்காதே. போர்களின் வெற்றிக்கு நான் வெறும் வீரர்களையும் ஆயுதங்களையும் மட்டும் நம்பியிருப்பவனல்ல.



அவனை நான் ஆக்க விரும்புகிறேன்; அதற்கு அவன் இடம் கொடுக்கா விட்டால், உன் கண் முன்னாலேயே நான் அவனை அழித்துக் காட்டுவேன்! அவனை நான் ஆக்க வேண்டுமா, அல்லது அழிக்க வேண்டுமா என்பதை நீதான் எனக்குச் சொல்ல வேண்டும்.''

இப்படிக் கூறி விட்டுச் சரேலென்று அங்கிருந்து எழுந்து சென்றார் சாளுவநரசிம்மர். அவருக்கும் அன்றிரவு உறக்கமில்லை. நேரடியாக விசுவநாதனிடம் பேசினால் எங்கே பேச்சு வார்த்தை முறிந்துவிடுமோ என்ற அச்சம் அவருக்கும் இருந்தது. அவசியமானால் அதைக் கடைசி முயற்சியாக வைத்துக் கொள்ள நினைத்தார்.

லட்சுமிக்கு அன்றைக்குத்தான் அவள் தந்தையை முழுமையாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. சூழ்ச்சிகளில் வல்லவர் என்றும், பகைநாட்டுப் படைகளுடே பிளவு ஏற்படுத்தக்கூடியவர் என்றும், துரோகத்தால் பகைவரை வெல்லத் திட்டமிட்டுத் தருபவர் என்றும் அவரைப் பற்றிப் பலர் முன்பே கூறியிருக்கிறார்கள். அவருடைய பயங்கரமான இராஜ

தந்திர அறிவுக்காகத்தான் கிருஷ்ணதேவ ராயர் அவரை அமைச்சராக்கியிருந்தார் என்றும் சொல்லிக் கொண்டார்கள். அவ ரைப் பற்றிக் கேள்வியுற்றதெல்லாம் உண்மை யென்றே தோன்றியது லட்சுமிக்கு.

'நினைத்ததைச் சாதிக்கக்கூடியவர் அப்பா!' என்று தன்னையறியாமலே வாய்விட்டுப் புலம்பினாள் லட்சுமி. உறக்கமே வரவில்லை அவளுக்கு. களைத்துப் போய் இடையிடையே சிறு பொழுது கண்ணயர்ந்த போதும் பயங்கரமான கனவுகள் அவளை உருக் குலைத்தன. போர்க்களத்தில் விசுவநாதனும் அவள் அப்பாவும் எதிரெதிரே நின்று போரிடுவது போலவும், விசுவநாதனின் வீரர்களைக் கொண்டே அவள் அப்பா அவனைக் கொன்று விடுவது போலவும் கனவுகள் கண்டு அவள் வீரிட்டழுதாள்.

பொழுது புலர்ந்தவுடன் எப்படியாவது விசுவநாதனிடம் மன்றாடி அவனை உடன் படச் செய்ய வேண்டும் என்ற வைராக் கியம் பிறந்துவிட்டது அவளுக்கு. 'வேறு வழியே இல்லை' என்று திரும்பத் திரும்பத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

விசுவநாதனும் ஏனோ படுக்கையில் இனம் புரியாத வேதனையால் அப்போது தவித்துக் கொண்டிருந்தான். விஜய ந க ர த் து க் குத் தன்னால் துரோகம் செய்ய முடியாது என்று அவன் லட்சுமியிடம் கூறிய போது, ''அப்படி யானால் என்னை அப்பாவுக்குத் துரோகம் செய்யச் சொல்கிறீர்களா?'' என்று அவள் கேட்ட கேள்விக்கு அவன் தனக்குள்ளே விடை தேடிக் கொண்டிருந்தான்.

லட்சுமியைப் போன்ற நிலையில் உள்ள ஒரு பெண் அவள் தந்தையின் விருப்பத் துக்கு மாறாக ஒருவனை மணந்து கொள்ள முன்வந்தால் அது துரோகமாகுமா? என்றா வது ஒரு நாள் அவள் யாரையாவது ஒருவனை மணந்து கொண்டுதான் ஆகவேண்டும். கால மெல்லாம் தந்தையோடு எந்தப் பெண்ணும் வாழ்ந்துவிட முடியாது. 'அப்படியிருக்கும் போது, நேர்மைக்காகப் போராடுகிறவன் ஒருவனை மணக்கத் துணிவதை அவள் தந்தை தடுக்க முன்வந்தால், அதை அவள் மீறுவது துரோகமாகுமா? அன்பு வளர்ச்சி யுறுவதற்கு வழிகோலிவிட்டு, அது கனியும் தருணத்தில் அதை வெட்டிச் சாய்ப்பதற்கு அவர் முயன்றால், அவர் முயற்சியைத் தடுப் பது துரோகம் ஆகுமா?'

எப்படியாவது லட்சுமியின் வாயிலாக முயற்சி செய்து, அவள் தந்தையின் பிடிவா தத்தைக் கைவிடச் செய்ய வேண்டுமென்றும், அது முடியாவிட்டால் லட்சுமியை அவள் தந்தையின் விருப்பத்துக் கெதிராகவே மணந்து கொள்வதென்றும் முடிவுக்கு வந் தான் விசுவநாதன். ஆனால், அதற்கு லட்சுமி உடன்படுவாளா?

பொழுது எப்படியோ விடிந்தது.

காலை உணவு முடிந்தவுடன் மாளிகைத் தோட்டத்தின் பின்புறம் காடுபோல் அடர்ந்திருந்த மரக் கூட்டங்களிடையே நடந்தான் விசுவநாதன். லட்சுமியும் அவனைப் பின்பற்றலானாள். தென்னை,வாழை மா, பலா முதலிய மரங்கள் நிறைந்த நெடுந் தோட்டம் அது. அதன் ஒரு மூலையில் சின்னஞ்சிறு மண்டபம் ஒன்று தனித்திருந் தது. பொழுதுபோக்குவதற்காகவும் ஓய்வுக் காகவும் முன்னர் சாளுவர் தஞ்சையிலிருந்த போது அதைக் கட்டியிருந்தார்.

அந்த மண்டபத்துக்குச் சென்று அதன் மேற்படியில் அமர்ந்தவாறே தூணில் சாய்ந்து கொண்டான் விசுவநாதன். லட்சுமி யும் அவ்வாறே எதிர்த் தூணில் சாய்ந்து கொண்டாள். இருவருமே மற்றவர் இரவுப் பொழுதில் சரியாக உறங்கவில்லை என்பதைக் கண்டு கொண்டனர்.

லட்சுமியின் விழிகளில் பீதி குடிகொண் டிருந்தது. அளவுக்கு அதிகமாக அவள் பயந் திருந்தாள். அந்த உணர்ச்சியை அவளால் மறைக்க முடியவில்லை.

''லட்சுமி! ஏன் இப்படிப் பயந்து நடுங்கு கிறாய்?'' என்று கேட்டான் விசுவநாதன்.

அவள் தந்தை அவளிடம் கூறிய செய்தி களை அவனிடம் அப்படியே கொட்டித் தீர்த் தாள் லட்சுமி. கண்ணீரும் விக்கலும் விம்ம லும் அவளுடைய சொற்களைத் தடுக்க முனைந்தாலும் அவற்றையும் மீறிக் கொண்டு அவள் எல்லாவற்றையும் கூறினாள்.

கூறி விட்டு, ''எனக்கு உங்களையும் இழந்து விட முடியாது; அப்பாவையும் இழந்துவிட முடியாது'' என்றாள்.


மிகுந்த வருத்தத்தோடு சிரித்து விட்டுக் கூறினான் விசுவநாதன்:

''என்னை இழப்பதோ உன் அப்பாவை இழப்பதோ ஒருபுறம் இருக்கட்டும். நேர் மைத் துணிவையும் தர்ம நியாயத்தையும் நாம் எதற்காகவும் யாருக்காகவும் இழந்து விடக் கூடாது. நம்மைவிட வயதில் மூத்த வர்கள் நமக்கு வழிகாட்டிகளாக விளங்க வேண்டியவர்கள். அவர்களில் பலருடைய நினைவிலும் சொல்லிலும் செயலிலும் இப் போது தன்னலம் மிகுந்துவிட்டது. அதிகார ஆசை, மண்ணாசை, பொருளாசை முதலிய பேராசைப் பேய்களுக்கு அடிமைகளாகி அவர்கள் நாட்டையும் குடிமக்களையும் மறந்து, தங்களை மட்டிலுமே வளர்த்துக் கொள்ளத் துடிக்கிறார்கள். விஜயநகரத்து அமரநாயக்கர்களில் பலருக்கும் சரி, நாட் டின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண் டுமே என்ற கவலை சிறிதும் இல்லை. எதிர் காலம் நம்முடையது; அவர்களுடையதல்ல. வயதில் இளைஞர்களாகிய நமக்கு இப்போது வழிகாட்டுவோர் அருகி வருகிறார்கள். ஆகவே, நாம்தான் கிருஷ்ணதேவராயருடைய இலட்சியத்தையும், விஜயநகர சாம்ராஜ்யத் தைத் தோற்றுவித்தவர்களுடைய இலட்சியத் தையும் சிதறவிடாமல் வளர்த்து வர வேண்டும். அப்படி ஓர் ஒற்றுமையும், வலிமையும் கொண்ட விஜயநகரத்துக்காக, நாம் இருவரும் அதன் தென்பகுதியிலிருந்து உழைப்போம்! யாரையுமே நீ இழக்க வேண்டாம்; உன் அச்சத்தை இழந்துவிட் டால் போதும்!''

லட்சுமி பெண் பிள்ளையாக இருந்தாலும் அரசியல் வித்தகர் சாளுவரின் குமாரத்தி. அவளுக்கு விசுவநாதனின் பரந்த மனத்தை யும் சீரிய சிந்தனைகளையும் ஓரளவு புரிந்து

திருமணம்

கொச்சி - திருச்சூர் சீத்தாராம வேர்ஹவுஸ் பார்ட்னர் ஸ்ரீ T. B ராமஸ்வாமி அய்யர் அவர்கள் குமாரத்தி செள. **தனலக்ஷ்மிக்கும்**, டெலிகிராப்ஸ் டிவிஷனல் என்ஜினியர் **ஸ்ரீ N. அண்ணுஸ்வாமி அய்யர்** அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **A. நடராஜன்**, B. E.க்கும் திருச்சூர் புஷ்பகிரியிலுள்ள சீத்தாராம நிலையத்தில் திருமணம் பழங்கால வழக்கப்படி வெகு சிறப்பாக நான்கு நாட்கள் நடைபெற்றன. வாழ்க மணமக்கள்!




இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை:
பிளாசா
பிரபாத்
மேகலா
நூர்ஜஹான்
வரலட்சுமி பிக்சர்ஸ்
தாலி பாக்கியம்
டைரக்ஷன் · K.B.நாகபூஷணம்
NEGATIVE RIGHTS CONTROLLED BY · SRI RAM PICTURES, TIRUNELVELI.
ELEGANT

கொள்ள முடிந்தது. என்றாலும் அவற்றால் அவனுக்கு ஏற்படவிருந்த அபாயங்களையும் அவள் மறந்து விடவில்லை.

"உங்களுடைய இளமைத் துடிப்பு உங்களை இலட்சியம் பேச வைக்கிறது. ஆனால் உங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அடியோடு மறந்து விடுகிறீர்கள். உங்களையே பழி தீர்த்துக் கொள்வதற்குத் தயங்கமாட்டார் என் அப்பா. அவர் விருப்பப்படி நடந்தால் உங்களைச் சக்கரவர்த்தியாக்கி வைத்து என்னையும் மணம் செய்து கொடுத்து, உங்களுடைய ஊழியராக உழைக்கவும் அவர் தயங்க மாட்டார். விருப்பத்துக்கு எதிராக நீங்கள் நடந்து கொண்டால்..." லட்சுமியால் மேலே பேச முடியவில்லை

"நடந்து கொண்டால் ?...."

"நினைக்கவே என் நெஞ்சு நடுங்குகிறது. வடக்கே ரஜபுத்திர வீரர் பிருத்விராஜுக்கு என்ன நேர்ந்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கும்."

பிருத்விராஜைப் பழிவாங்கிய ஜயசந்திரனின் நினைவு வந்தவுடன் திடுக்கிட்டான் விசுவநாதன். அவ்வளவு கொடியவரா, சாளுவநரசிம்மர் ?

அத்தியாயம் இருபத்தொன்று

தென்றலும் புயலும்

"பிருத்விராஜின் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும்: இருந்தாலும் அதைச் சொல்கிறேன்" என்று தொடங்கினாள் லட்சுமி.

உற்றுக் கேட்டான் விசுவநாதன்.

"டில்லியை ஆட்சி செய்துவந்த பிருத்விராஜ் கானோஜ் அரசர் ஜயசந்திரரின் குமாரத்தி சம்யுக்தையிடம் அன்பு கொண்டிருந்தார். ஆனால் அவர் சம்யுக்தையின் தந்தை ஜயசந்திரரின் விருப்பப்படி நடக்காததால் அவர் மீது ஜயசந்திரருக்குக் கோபம் வந்து விட்டது. அந்தக் கோபம் வெறுப்பாக மாறி, சம்யுக்தையைப் பிருத்விராஜுக்கு மணம் செய்து கொடுக்க மறுத்து விட்டார்....."

"அப்படியானால் ஜயசந்திரரான உன் அப்பா சம்யுக்தையான உன்னை எனக்குக் கொடுக்க மறுத்து விடுவார் என்று சொல்கிறாயா?" என்று கேட்டவன், "அவர் மறுத்தாலும் சம்யுக்தை பிடிவாதத்தோடு, தந்தையின் சொல்லையும் மீறிப் பிருத்விராஜைத் தானே மணந்து கொண்டாள் !" என்றான்.

"முழுவதும் கேட்டுவிட்டுப் பேசுங்கள்" என்று மேலே தொடர்ந்தாள் லட்சுமி ; "ஜயசந்திரரின் விருப்பத்துக்கு எதிராக அவர்கள் மணந்து கொண்டதால் பிறகு அவர்களுக்கு என்ன பயங்கரமான முடிவு ஏற்பட்டதென்றும் நினைத்துப் பாருங்கள். ஜயசந்திரர் அந்நிய நாட்டிலிருந்த முகமது கோரியைப் பிருத்விராஜ் மீது படையெடுக்கும் படி தூண்டி விட்டார். முதற்படையெடுப்பில் பிருத்விராஜ் முகமதுகோரியை முறியடித்து உயிரோடு திருப்பியனுப்பினார். அதனால் ஜயசந்திரரின் வஞ்சம் அதிகமாகியதே தவிர குறையவில்லை. மீண்டும் முகமது கோரியைத் தூண்டி விட்டார். பிருத்விராஜ் போர்க்களத்தில் கோரியின் வாளுக்கு இரையானதோடு, சம்யுக்தையும் தீக்குளித்து உயிர் நீத்தாள்."

லட்சுமி மிகவும் கலக்கத்தோடும் தயக்கத்தோடும் கதையைக் கூறி முடித்தாள்.

"கதை அதோடு முடியவில்லை, லட்சுமி! பிருத்விராஜின் மீது கொண்ட வஞ்சத்தால் இந்த நாட்டையே அந்நியனுக்குக் காட்டிக் கொடுத்த அந்தத் துரோகி என்ன ஆனான்? அடுத்தாற்போல் முகமதுகோரி ஜயசந்திரனையும் கொன்று அவனுடைய நாட்டையும் கைப்பற்றிக் கொள்ளவில்லையா? இந்த நாடு முழுதுமே அந்தப் படுபாவி ஜயசந்திரனின் துரோகத்தால் அந்நியப் படையெடுப்புக்களுக்கு ஆளாகவில்லையா? பின்னர் இமயம் முதல் குமரி வரையிலும் ஊழிப்பெருக்காக இரத்தவெள்ளம் பாய்ந்தோடுவதற்கு மூல காரணமாக இருந்தவன் இந்த ஜயசந்திரன் தானே ?"

விசுவநாதனின் ஆவேசத்தைக் கண்ட லட்சுமி, "இவ்வளவு தெரிந்த நீங்கள் பிருத்விராஜைப் போல் துடிப்பு மிக்கவராக இருக்கிறீர்களே?" என்று கலக்கத்தோடு கேட்டாள்.

"ஒரு விஷயத்தில் நான் பிருத்விராஜைப் போல் இருக்க மாட்டேன்: பிருத்விராஜ் செய்த தவறுகளை நான் செய்யமாட்டேன் ; வரலாற்றின் படிப்பினைகளிலிருந்து நான் விழிப்புப் பெற்று வருகிறேன்."

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?"

"பிருத்விராஜ் நல்லவனாக இருந்தாலும், வல்லவனாக இருந்தாலும் மாபெரும் தவறு செய்து விட்டான். யாரிடம் கருணையும் இரக்கமும் காட்டக் கூடாதோ, அவர்களிடம் காட்டி விட்டான். முதல் முறை முகமது கோரி படையெடுத்து வந்த போதே அவனைப் போரில் முறியடித்தவன் உயிருடன் திருப்பி அனுப்பியிருக்கக் கூடாது. அதோடு வஞ்சகத் துரோகி ஜயசந்திரனையும் கொன்று தீர்த்திருக்க வேண்டும். இப்படி அவன் செய்திருந்தால் பிருத்விராஜ் தன்னையும் சம்யுக்தையையும் மட்டுமல்ல, இந்த நாட்டையே காத்திருக்க முடியும்! பண்பற்ற பகைவர்களிடம் இரக்கப்படுவதும் அதர்மந்தான் !"

லட்சுமி நடுநடுங்கிப் போனாள். நீறு பூத்த நெருப்பாக இருந்த விசுவநாதன் இப்போது கொழுந்து விட்டெரியும் தீப் பந்தமாக அவளுக்குக் காட்சியளித்தான்.

"இளவரசே, நீங்கள் மிகவும் கொடியவர்! உங்கள் தந்தைக்கு எதிராக நீங்கள் படை நடத்திச் சென்ற போதே, நான்

உங்கள் கொடுமையை உணரத் தவறிவிட்டேன்! இப்போதோ மறைமுகமாக அவசியம் நேர்ந்தால் என் தந்தையையே கொல்வதாகச் சொல்கிறீர்கள்!

"லட்சுமி! என்னுடைய தொழில் ஆட்சி நடத்தும் தொழில். இந்தத் தொழிலுக்குள்ள தர்மத்தை நான் மறந்துவிடக் கூடாது. நாட்டையும் மக்களையும் நான் காக்க வேண்டும்; நாட்டுக்கும் மக்களுக்கும் தங்கள் பேராசையால் வஞ்சனை செய்யும் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். குற்றவாளிகள் உற்றார் உறவினர் என்பதற்காகவோ, நண்பர்கள் என்பதற்காகவோ, அவர்களிடம் இரக்கம் காட்டினால் அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். தர்மம் குலைந்தால் அரசும் குலைந்து விடும்."

"அப்படியானால் அப்பாவைத் தண்டிக்க நினைக்கிறீர்களா?"

அவளுடைய அச்சம் கண்டு சிரித்தான் விசுவநாதன். "அந்த நிலைக்கு அவர் வருவதற்கு முன்பே அவரைத் தடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த வகையில் நீயும் என்னோடு மனப்பூர்வமாக ஒன்றி உழைத்தால், அவரை நம்மால் மாற்றிவிட முடியும்."

"நான் என்ன செய்ய வேண்டும் ?"

லட்சுமி அவன் சொல்லுக்காகத் துடிப்போடு காத்திருந்தாள்.

"லட்சுமி! அவசியம் நேர்ந்தால், வேறு வழியில்லையென்றால், சம்யுக்தையைப் போல் நீயும் நான் அழைக்கும்போது என்னோடு புறப்படுவதற்குச் சித்தமாக இருக்க வேண்டும். அதனால் உன் அப்பாவுக்கு ஏற்படக் கூடிய கோபத்தைப் பிறகு நாம் இருவரும் சேர்ந்தே தணித்து விடலாம். அவருடைய திட்டங்கள் நிறைவேறாமலும் அதே சமயம் அவருக்குத் துன்பம் நேராமலும் என்னால் பார்த்துக் கொள்ள முடியும். என் அப்பாவும் முன்பு உன் அப்பாவைப் போலத்தானே தனி ஆட்சி நடத்த நினைத்தார்? அவர் மன்னிக்கப்படவில்லையா?"

"என் அப்பாவை என்னைவிட உங்களுக்குத் தெரியாது!" என்றாள் லட்சுமி.

"அதனால்தான் நீ என்னோடு இருக்க வேண்டுமென்கிறேன். உன்னிடம் அவர் அன்பு கொண்டவர். அந்த அன்பைக் கொண்டே அவரை நம்மால் மாற்றிவிட முடியும். நீ என்ன சொல்கிறாய்?"

லட்சுமி எதையுமே சொல்ல அஞ்சினாள்.

"தயவுசெய்து என்னிடம் எதையுமே கேட்காதீர்கள்" என்று தேம்பித் தேம்பி அழுதாள் லட்சுமி.

இரவுப் பொழுதில் அவள் அப்பா விடுத்த எச்சரிக்கைகளும் அவற்றையடுத்து அவள் கண்ட பயங்கரக் கனவுகளும் அவளை நிலைகுலையச் செய்திருந்தன.

விசுவநாதன் அவளிடம் கெஞ்சினான் ; மன்றாடினான்; சினந்து கொண்டான்.

"சரி, நீ ஆலோசனை செய்; நான் உன் தந்தையிடம் பேசிவிட்டு வருகிறேன். இன்று மாலையே நான் மதுரைக்குக் கிளம்ப வேண்டும் !"

"இதோ, நானும் வருகிறேன் அப்பாவுடன் பேசுவதற்கு" என்று அவனைப் பின் தொடர்ந்தாள் லட்சுமி.

சாளுவ நரசிம்மர் இருவரிடமும் ஏதேதோ பேசிய பிறகு, விசுவநாதனிடம் தம் திட்டங்களை வெளியிட்டார் :

"லட்சுமி உன்னிடம் எல்லா விவரங்களையுமே கூறியிருப்பாள். தஞ்சையில் உங்களுடைய திருமணத்தை நிச்சயம் செய்வதற்காக விஜயநகரத்துக்கு ஓலை அனுப்பி நாகமரையும் கமலாதேவியையும் இங்கு வரவழைத்து விடுகிறேன். நிச்சயம் செய்யும் விழாவின் போது நாம் மற்றொரு முடிவும் செய்து விடுவோம். சோழ, பாண்டிய, சேர நாடுகள் மூன்றுமே விஜயநகரத்தின் மேலாட்சியிலிருந்து ஒரே நாளில் விடுதலை பெற்று விட்டதாக அறிவித்துவிடுவோம். உதயமார்த்தாண்டனும் இதற்கு உடன்படக் கூடியவன். விஜயநகரத்திலிருந்து அவர்கள் நம்மை எதிர்த்து வாரமுடியாதபடி செய்து விடுவோம். நம்மை நோக்கி அவர்கள் தெற்கே வந்தால் அங்கே பாமினி சுல்தான்கள் விஜயநகரத்தைக் கைப்பற்றி அழித்துவிடுவார்கள். ஆகவே, நாம் இங்கே உன் தலைமையில் புதிய சாம்ராஜ்யத்தை நிலை நாட்டி விடுவோம் !"

"முதலில் விஜயநகரத்தை அழித்துவிட்டு அடுத்தாற்போல் தெற்கில் நம்மையும் வந்து அழிப்பார்களல்லவா?" என்று அமைதியோடு கேட்டான் விசுவநாதன். அவன் உள்ளத்தில் வீசிய பெரும் புயலை அவன் வெளியில் காட்டவில்லை.

"நாம் மூன்று நாடுகளும் சேர்ந்த சாம்ராஜ்யம் இது. அவ்வளவு எளிதாகப் பகைவர்களால் நம்மை வெல்ல முடியாது."

"முப்பது நாடுகளும் சேர்ந்த சாம்ராஜ்யத்தோடு இணைந்திருப்பது நமக்கும் வலிமை, சாம்ராஜ்யத்துக்கும் வலிமை ஆயிற்றே ?"

"விசுவநாதா!" என்று வெகுண்டெழுந்தார் சாளுவநரசிம்மர்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இப்போதே உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளுகிறேன்!" என்று அங்கிருந்து புயலெனக் கிளம்பினான் விசுவநாதன்.

சாளுவர் அதிர்ச்சியுற்றுக் கல்லாகச் சமைந்து விட்டார்.

விசுவநாதனைப் பின்பற்றி வாயிலுக்கு ஓடி வந்து அவனை வழிமறித்தாள் லட்சுமி.

"சொல்! இப்போதே உன் முடிவைச் சொல்! நான் எப்போது அழைத்தாலும் நீ என்னுடன் வருவாயா? சொல், லட்சுமி!"

அவள் தேம்பினாள்; விம்மினாள்; அவன் கெஞ்சினான்.

"சொல், லட்சுமி!"

அவளுக்குச் சொல்லத் துணிவில்லை.

"பிறகு நீ இதற்காக வருந்துவாய் !" என்று நாத் தழுதழுக்கக் கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினான் விசுவநாதன். அடுத்து அவனோடு வந்திருந்த வீரர்களும் அவனைப் பின்பற்றினார்கள். லட்சுமி கதவருகே மயங்கி விழுந்தாள்.

(தொடரும்)

கால் அரிப்பு சரும அரிப்பு

அரிப்பு, எரிச்சல் முதலிய உபாதைகளை உங்களால் தாங்க முடியாமல் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதா? உங்கள் சருமத்தில் வெடிப்புகள் தோன்றி தோல் உரிந்து ரத்தம் கசிகிறதா? பாதங்களிலும் கால் விரல்களுக்கிடையிலும் புண்கள் தோன்றி உபத்திரவம் செய்கின்றனவா? இவைகள் வெடித்துக்கசிந்து மேலும் புண்களை உண்டாக்குகின்றனவா? இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சிங்கப்பூர் சொறி, வண்ணாரப்படை, என்று பல பெயர்களில் வழங்கப்படும் ஒருவகைக் கிருமி. மூல காரணமான இந்தக் கிருமிகளை அழிக்கும்வரை இவ்வுபாதைகளிலிருந்து நிவாரணமடையமுடியாது. விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நிக்ஸோடேர்ம் (Nixoderm) முதல் தடவை போட்டவுடனேயே அரிப்பை நிறுத்தி கிருமிகளைக் கொன்று சருமத்தின் புண்ணை ஆற்றி மிருதுவாக்கி சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) அரிப்பை நிறுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. மேலும் பாதத்தின் மேலிருக்கும் புண்கள் மேலாகப் பரவும் படை, முகப் பருக்கள் கட்டிகள் முகத்திலோ அல்லது தேகத்திலோ பரவிய படர் தாமரை முதலிய உபாதைகளைக் குணமாக்குகிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். பூரண திருப்தியை அது நிச்சயமாக அளிக்கும்.

---

777 BRAND (Registered)

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

Dhideerex

(FOR INSTANT PREPARATION)

திடீரெக்ஸ்

திடீர்

இட்லி–சாம்பார் (2 தனி பகுடாக்கள்)

3 நிமிஷங்களில் தயார்!

'மால்டைன்' (Maltine)

தண்ணீரில் கலந்தவுடன் பருகக்கூடிய உணவு பானம் சர்க்கரையோ, பாலோ தேவையில்லை

ஊறுகாய்கள் - 14 தினுசுகள்

வத்தல், வடாம் - 14 ரகங்கள்

பப்படம், அப்பளாம் முதலியன


எமது தயாரிப்புகள் இந்த குறிப்பிட்ட லேபிள்களிலும் விற்பனையாகிறது

3-7

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.

(போன்: 23666)

46, தம்பு செட்டித் தெரு, சென்னை-1



ARYAN

ஆரியன்

டீ-லக்ஸ் மற்றும் ஸ்டாண்டார்ட்

இவையிரண்டும் தம்ப் கிரிப்புடன் கிடைக்கின்றன.

சைஸ்கள்: அடல்ட், ஜூனியர் மற்றும் பேபி

அமைப்புகள்: ஹார்ட், மீடியம் மற்றும் ஸாப்ட்

இப்படிப் பிரிவுகளுடனும் கிடைக்கின்றன

மிகவும் சிறப்பாகக் கழுவலாம்

நீண்ட காலம் உழைக்கும்


இந்தியாவின் தலைசிறந்த பிரஷ்கள்

Aryan

ஆரியன் ஷேவிங் பிரஷ்

அபரிமிதமான நுரைக்கும், சுத்தமான முகக்ஷவரத்திற்கும்.


தேர்ந்தெடுக்கப்பட்ட ரகங்கள் உள்ளவை




திறமைக்கும் கீர்த்திக்கும் சின்னம்!

உடம்பை வளைத்து நீட்டி, நெளித்து மடக்கிச் செய்த உடல் பயிற்சியும், விரைத்து நின்று ஆடம்பர நடை போட்டுச் செய்த 'பரேட்' பயிற்சியும், யமன்களின் உடலுக்கு இதத்தையும், வலுவையும் தந்திருந்தன. மழையும் இளம் வெயிலும், மூடு பனியும் குளிர்ந்த காற்றும் அவர்களுக்கு ரத்த ஓட்டத்தை அதிகமாக்கிச் சுறுசுறுப்பூட்டத் தான் செய்தன. இவை இல்லையென்று கூற முடியாது. ஆனாலும்கூட யமன்கள் சோர்ந்து போய் அமர்ந்திருந்தார்கள்.







யமன்களும், மணிபர்ஸ் மர்மமும்!

ராஜேந்திரகுமார்

காரணம்? கொடைக்கானலுக்கு வந்த முதல் நான்கு நாட்கள் அவர்களுக்கு நகர்ந்து போகவில்லை; பறந்தேபோயின. அதன் பிறகு ஒரே 'போர்' தான். ஏற்றமும், இறக்கமுமான பாதையில் போட்டி போட்டு ஏறி இறங்குவதும் 'போட் ஹவுஸி'ல் வாடகைக்குப் படகு எடுத்துக் கொண்டு மணிக்கணக்கில் மிதப்பதும் சலித்துப்போயின. 'பில்லர் ராக்ஸ்'களும், வானவெளி ஆராய்ச்சிக்கூடமும் யமன்களுக்கு அலுத்துப் போயின. எவ்வளவு தரம்தான் அவர்கள் பார்த்ததையே பார்த்துப் பார்த்துத் தொலைப்பது? போதாததற்கு இரண்டு நாட்களாகச் சரியாக மத்தியானம் இரண்டு மணிக்கு மழை வேறு கொட்டத் தொடங்கி விட்டது.

'பொட்டானிகல் கார்டனி'ல் அமர்ந்திருந்த யமன்கள் கவலையுடன், சற்றுத் தொலைவில் உட்கார்ந்திருக்கும் பெரியவரையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏற்கனவே, பொக்கையாயிருந்த பிரம்மாண்டமான வாயை அகலமாகத் திறந்து நீண்ட கொட்டாவியை வெளியேற்றியவர் இவர்களது இடைவிடாத பார்வையை உணர்ந்து வெட்கிச் சட்டென்று தம் வாயை மூடிக் கொண்டு விட்டார். 'சத்' என்ற அலுப்புடன் அவர் அங்கிருந்து எழுந்து நடந்தார்.

'என்ன அதிசயப் பிரகிருதி! என்னதான் கொட்டாவி வந்தாலும்கூட மனுஷன் இப்படியா வாயைப் பிளந்து வைப்பான்? பயங்கரம்!' என்று கூறிய சுரேஷுக்குக் கொட்டாவி வந்துவிட்டது. புறங் கையால் வாயைப் பொத்தியவாறு அவன் நாசூக்காகக் கொட்டாவியை வெளியேற்றப் போக, அந்தத் தொத்துவியாதி அனைவரையுமே பற்றிக் கொண்டு விட்டது. ஒருவர் மாற்றி ஒருவர் வாயைப் பிளந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருந்தார்கள்.

''சே...ய்...! எதுவுமே சுவாரசியமில்லே. சென்னையிலிருந்தாலாவது நீச்சல், சினிமா என்று பொழுதை 'ஜம்'மென்று கழிக்கலாம். இங்கே என்ன வாழுகிறது? ஏரியின் சில்லிட்ட குளிர் நீரைத் தொடவே முடியவில்லே. அதில் எப்படி நீச்சலடிப்பது? இருப்பதோ ஒரு சினிமா தியேட்டர். அதிலும் நாம் ஏற்கனவே பார்த்துவிட்ட படம் ஓடுகிறது'' என்று சேது அலுத்துக் கொண்டான்.

''ஆமாம்டா'' என்று மல்லாந்து படுத்திருந்த மனோகரன் சொன்னான். ''கொஞ்சம் குஜாலாக ஏதாவது விளையாடலாமென்றாலோ இந்த என். ஸி. ஸி. அதிகாரிகளின் கழுகுக் கண் கெடுபிடி அதற்கு நம்மை அனுமதிக்காது போலிருக்கே!''

''ஒரேயடியாய்ச் சோம்பலடிக்கிறது'' என்று கூறி எழுந்து நின்று சோம்பல் முறித்த தினேஷ் சொன்னான்: ''டேய்! இவன்களே! பில்லர் ராக்ஸ் வரை நடந்தே போய் விட்டு வரலாம்டா! கொஞ்சம் சுறுசுறுப்பாய் இருக்கும்!''


''முடியாது!'' என்று மறுத்தான் சுரேஷ்குமார். ''மழை வந்து விடும். அப்புறம் நமக்கு ஜலதோஷம் பிடிக்கும். நாளைக்கு மந்திரி வருகிறார். தும்மலும் இருமலுமாக இருந்தால் 'பரேட்' எடுபடாது. நம் தலை பலமாக உருளும்!''

மீண்டும் உட்கார்ந்த தினேஷ் ஆவலுடன் எதையோ கவனித்தான். அவனைத் தொடர்ந்து அனைவரும் கவனித்தார்கள். சற்றுத் தொலைவில் புதிதாகக் கட்டப்பட்ட நேருஜி நினைவு ஸ்தூபிக்கு அருகே புகைப்

படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள் சில மாணவிகள்.

''மைதிலியின் தோழிகளா அவங்க ?'' என்று கேட்டான் தினன்.

''ஆமாம்!'' என்று பதிலளித்தான் சேது. ''அதோ, காமிராவும் கையுமாய் நிற்கிறாளே, அவள்தான் பவானி. மைதிலியோடு அவளைப் பலதரம் பார்த்திருக்



கேன். அவன் ஒன்றும் நம்பர் பயந்தாங்கொள்ளி. சிகரெட் உதறும் சத்தம் கேட்டாலும் கூட அவன் நடுங்கிப் போய், மைதிலியையோ, பாமாவையோ கட்டிக் கொண்டு விடுவான்.''

எதற்கோ அப்பால் நடந்த பாபு என்ற யமனின் கண்களிலே பட்டது அந்தப் பொருள். உடனே 'ஆவ்' என்ற அலறலுடன் திரும்பி ஓடிவந்து அமர்ந்து நடுங்கினான். 'என்னடா, என்ன?' என்று மற்றவர்கள் கேட்க, நடுங்கும் சுட்டு விரலால் அந்தப் பொருளைச் சுட்டிக்காட்டினான். எல்லோரும் கும்பலாகப் போய்க் குனிந்து பார்த்தார்கள். 'பே' என்று அலறிக் கொண்டே திரும்பி ஓடிவந்து விட்டார்கள். தைரியசாலியான மனோகரன் மட்டும் திரும்பிப் போய்க் கைக்குட்டையால் அதை மூடித் தூக்கி வந்தான்.

''இருங்க, ஒரு தமாஷ் பண்ணலாம்'' என்ற மனோகரன் பதுங்கிப் பதுங்கி நடந்து அடர்ந்த செடி ஒன்றின் பின்னாலிருந்தவாறு எக்கி, ஒரு கருப்பு நிற டம்பப் பையை எடுத்தான். பையினுள்ளே கைக்குட்டையிலிருந்ததைப் போட்டுச் சட்டென்று மூடினான். டம்பப் பையை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு ஓடி வந்தவன் சொன்னான்: ''அந்தப் பர்ஸின் சொந்தக்காரி அதைத் திறந்து பார்த்ததும் அலறுவாளே — வேடிக்கை பார்க்கலாம்!'' — இதைக் கேட்டதும், எல்லோருடைய சோம்பலும் சட்டென்று இருந்த இடம் தெரியாமல் பறந்து போய் விட்டது. அருமையான வேடிக்கை ஒன்றைப் பார்க்க அவர்கள் தயாரானார்கள்.

புகைப்படம் எடுத்து முடிந்ததும் டம்பப் பை அதன் உரிமையாளரிடம் போய்ச் சேர்ந்தது. ஆனால் பர்ஸைக் கையிலே எடுத்துக் கொண்ட பவானி அதைத் திறந்துகூடப் பார்க்காமல் தன் சிநேகிதிகளுடன் நடந்து போய் விட்டாள். ஏமாற்றம் தாங்காத யமன்கள், வழியிலே அவள் எதையாவது

வாங்குவாள், பர்ஸைத் திறப்பாள் என்று நினைத்துக் கொண்டு மெள்ளப் பின்தொடர்ந்தார்கள்.

சிநேகிதிகளுடன் சென்றவள் வழியில் பொரித்த வேர்க்கடலையும், நேந்திரங்காய் வறுவலும் வாங்கினாள். பணம் எடுக்கப் பர்ஸைத் திறக்கப் போனாள். அதற்குள் அனிலா, "பவானி! உனக்கும் சேர்த்து நானே பணம் கொடுத்து விட்டேன்" என்று கூறவே, பவானி திறந்த பர்ஸை மூடிக் கொண்டு நடந்தாள். தங்குமிடத்துக்குப் போகும் வரையில் அவள் அந்தப் பர்ஸைத் திறக்கவே யில்லை.

முகத்தில், ஒரு படி ஏமாற்றம் வழிய யமன்கள் திரும்பினார்கள். ஆயினும் ஒரு திருப்தி. 'எப்படியும் அவள் பர்ஸைத் திறந்துதானே ஆக வேண்டும்? அப்போது 'பே' என்று அலறுவாள் அல்லவா?' இந்த நினைப்பே அவர்களுக்குள் ஒரு கலகலப்பைத் தோற்றுவித்தது.

கண்ணாடிக்குப் பின்னால் அமர்ந்து தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்த பாமா கேட்டாள்: "ஆயிரம்தான் சொல்லுடி, ஊட்டி அழகே அழகு இல்லையா?"

கட்டிலில் சாய்ந்து 'பெமினா' பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த பவானி நிமிர்ந்து பார்த்துச் சிரித்தது அவ்வளவு இயற்கையாக இல்லை. 'ஏன் கொடைக்கானலுக்கு என்ன குறைச்சலாம்?' என்று மனத்துக்குள் கேட்டுக்கொண்டாள்.

'இந்தப் பாமாவுக்கு எப்போதுமே இக்கரைக்கு அக்கரைதான் பச்சை" என்று நினைத்துக் கொண்டவள், மல்லாந்து படுத்துப் பத்திரிகையில் ஆழ்ந்து போனாள். உதகமண்டல ஸ்தல புராண மகாத்மியம் பாடியவாறு போய் முகம் கழுவிக்கொண்டு வந்த பாமா கேட்டாள்: "ஏய், பவானி! உன் பவுடர் பஃப்பைக் கொஞ்சம் இரவல் கொடேன். என்னுடையதைக் காணோம்."

அப்போதுகூடப் பத்திரிகையை விட்டுக் கண்ணை எடுக்காத பவானி, "என் டம்பப் பையிலிருக்கிறது எடுத்துக் கொள்" என்றாள். அதை யடுத்து அந்தப் பாமா அப்படியோர் அலறல் அலறுவாள் என்று பவானி எதிர் பார்க்கவில்லை. புத்தகமும், போர்வையும் பக்கத்துக்கொன்றாகப் பறக்க, பதறி நடுங்கியவாறு எழுந்து உட்கார்ந்தாள் பவானி. அவள் கண்கள் ஒரு சுற்றுச் சுற்றித் தரையைப் பார்த்தன.

பாமா மயங்கிப் போய் விழுந்து கிடந்தாள். அடுத்த விநாடி என். ஸி. ஸி. பெண்கள் பட்டாளமே அந்தச் சின்ன அறைக்குள் நுழைந்து விட்டது. ஒரே ரகளைதான். அத்தனை அமர்க்களத்தில் பாமா உதறிய உதறலில் ஜன்னல் வழியே வெளியே வந்து விழுந்து கிடந்த அந்தக் கறுப்பு டம்பப் பையை யாரும் கவனிக்கவில்லை.

தோட்டத்துத் தரையில் அநாதையாகக் கிடந்த அந்தக் கறுப்பு டம்பப் பையைக் கண்டெடுத்தவன் வேலைக்காரக் கிழவன். தான் எடுப்பதை யாரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொண்ட பின், சட்டென்று அதைத் தனது அழுக்குத் துண்டினால் மறைத்துக்கொண்டு மேலே ரோட்டுக்குச் சென்று விரைவாக நடந்தான்.

உள்ளேயிருந்து மயக்கம் தெளிந்து எழுந்த பாமா "பேய்... பேயைப் பார்த்தேன்டி... நான்... நான் பேயைப் பார்த்தேனே..." என்று அழுவதும், புலம்புவதுமாக இருந்தாள்.

ரோட்டுக்குப் போய்ச் சேர்ந்த கிழவன் ஆவலுடன் பர்ஸைத் திறந்து பார்த்தான். சட்டென்று மூடிவிட்டுக் கொஞ்ச நேரம் 'பே' என்று பயங்கரமாக விழித்தான். பிறகு அதை மெல்ல மீண்டும் திறந்து பார்த்தவன் 'ஆ....' என்று அலறியபடி அதைப் பாதையிலேயே போட்டுவிட்டு, சரிவில் இறங்கிக் கண்மண் தெரியாமல் ஓட ஆரம்பித்தான். அவனது அலறலும், ஓட்டமும் ரோட்டில் வந்து கொண்டிருந்த இரண்டு போலீஸ்காரர்களுக்குச் சந்தேகத்தைக் கிளப்பி விட்டன. அவனைப் பின்தொடர்ந்து சரிவில் இறங்கி ஓடலானார்கள். அவர்களில் ஒருவன் ரொம்ப ஒல்லி; மற்றவன் ரொம்பக் குண்டு.

"மானத்தை வாங்குகிறாயா?" என்று மனைவியை முறைத்துப் பார்த்துக் கேட்டான் கணவன். அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. ஏளனமாகப் பேசினாள்: "கடைக் கண் காட்சியில் அழகான மணிபர்ஸ் இருந்தது. அதை வாங்கித் தரச் சொன்னாலும் காசு இல்லை என்கிறீர்கள். பழம் வாங்கச் சொன்னால் பணமில்லை என்கிறீர்கள். இப்ப மட்டும் உங்களுக்கு என்ன திடீர்ப் பிரியம் வந்து விட்டதாம், மானத்தை வாங்குகிறாயா? மரியாதையை வாங்குகிறாயா என்று கேட்க?"

'பட் பட்'டென்று தன் தலையில் அடித்துக் கொண்டான் அவள் கணவன். "ஐயோ, ஐயோ... உன்னைப் போல் ஓர் அப்பாவியைக் கட்டிக் கொண்டு நான் படுகிற அவஸ்தை இருக்கிறதே, ஆண்டவா! சொல்லி முடியாது. தெருவில் கிடந்ததை யெல்லாம் பொறுக்கி எடுத்துக் கொண்டு..."

"தெருவிலே கிடந்தாலும் இது எவ்வளவு அழகாயிருக்கு!" என்று அந்தக் கறுப்பு டம்பப் பையைக் கொஞ்சினாள். "இந்தாங்கோ! இது என்கிட்டேயே இருக்கட்டுமே! நானே வைத்துக் கொள்ளுகிறேனே!" என்று கூறினாள்.

"சீ...சீ... தூர எறி, அந்தச் சனியனை! யாருடையதோ என்ன இழவோ! இதனால் வம்பு வரும்" என்று அவள் கணவன் சீறினான்.

"மாட்டேன். எனக்கு இந்த டம்பப் பைதான் வேணும்" என்ற அந்த வெகுளிப் பெண்ணின் உதடுகள் பிதுங்கின. இன்னும் கொஞ்ச நேரம் போனால் அவள் அழவே ஆரம்பித்து விடுவாள் போலிருந்தது.

"சரி... சரி... நீயே வைத்துக் கொண்டு தொலை" என்றான் அவன். "எதற்கும் முதலில் பையைப் பிரித்து உள்ளே பார். நகை நட்டு என்று ஏதாவது இருந்து தொலைக்கப் போகிறது!"

இவ்வாறு சொன்னானே தவிர, அவள் டம்பப் பையைப் பிரித்தபோது பாய்ந்து சட்

டென்று மூடி விட்டான். விஷயம் புரியாமல் விழிக்கும் மனைவிக்கு ஜாடையாகப் பின்னால் கட்டிக் காட்டினான். திரும்பிப் பார்த்த அந்தப் பெண்ணுக்குக் கையும் காலும் தந்தியடிக்கலாயின. அங்கே 'திருடனை'த் தூக்கிப் போன போலீஸ்காரர்கள் இரண்டு பேரும் களைப்பும் ஏமாற்றமுமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

''புதுசு புதுசாப் பார்ப்பது போல் காட்டிக் கொள்ளாதே! அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிடும்!'' என்று அவன் எச்சரித்தான். ''சகஜமாக நடப்பது போல் கையிலே பையை மாட்டிக் கொண்டு வா.''

இதைப் புரிந்துகொண்ட அந்தப் பெண்ணும் கறுப்புப் பையை முழங்கையிலே தொங்கவிட்டவாறு அன்ன நடை பயின்றாள்.

ரோட்டுக்கு ஏறி வந்துவிட்ட போலீஸ்காரர்கள் அகஸ்மாத்தாக இவர்கள் போகும் வழியிலேயே நடக்கத் தொடங்கினார்கள். சங்கடத்துடன் நெளிந்தார்கள் தம்பதிகள். ''அப்பவே சொன்னேனே கேட்டாயா? அதான் அதான்'' என்று அவன் முணுமுணுப்புக் குரலில் பொரிந்து தள்ளினான்.

''தப்புத்தான்... தப்புத்தான்.... உங்களோடு புறப்பட்டு வந்தேனே, என்னைத்தான் சொல்லணும்'' என்று அவள் உதட்டைப் பிதுக்கினாள். மெலிந்த குரலில் சண்டை போட்டுக் கொண்டே அவர்கள் நடந்து போனார்கள். தங்கியிருக்கும் ஹோட்டலை அடையும்வரை மெல்ல ஓரக் கண்ணால் திரும்பிப் பார்ப்பதும், போலீஸ்காரர்களைக் கண்டு நடுங்குவதுமாக இருந்தார்கள்.

ஹோட்டலுக்கு வந்து சேர்ந்து, அறையில் நுழைந்ததும், நுழையாததுமாக, கதவைக்கூடச் சாத்தத் தோன்றாமல், பர்ஸைப் பிரித்துக் கையை விட்டுத் துழாவியவள் நடுங்கிப் போய்விட்டாள். பர்ஸைக்கும் கண்ணுக்குமுள்ள இடைவெளியைக் குறைத்துக் கொண்டு பார்த்தவள், 'டப்'பென்று பர்ஸை மூடித் தரையில் போட்டுவிட்டுக் கதிகலங்கினாள். நடுக்கம் சற்று ஓய்ந்ததும், ஒரு முடிவுக்கு வந்தவளாகத் துணைப்பம் கொண்டு வந்தாள். அறைக்குள் நுழைந்த கணவன், தரையில் கிடந்த பர்ஸைத் தொட முயலுவதற்குள் ''தொடாதீங்க அதை!'' என்றவள், நெருங்கி வந்து துணைப்பத்தாலேயே அந்தப் பர்ஸைக் கெந்தி எடுத்து ஜன்னல் வழியாகத் தூர வீசி எறிந்து விட்டாள். விஷயம் புரியாமல் விழிக்கும் கணவனிடம், ''யாரோ பில்லி சூனியம் வைக்க முயற்சி பண்ணியிருக்காங்க போலிருக்கு. நல்ல வேளை! பிழைச்சேன்!'' என்றாள்.

''**எ**ன்ன ஊரோ? என்ன இதுவோ?'' என்று சலித்துக்கொண்டார் 'ஒல்லி' போலீஸ்காரர். ''தப்புத் தண்டாவுக்குப் போகாத நல்ல ஜனங்களே யிருக்கிற இந்த ஊருக்குப் போலீஸ் ஸ்டேஷன் எதுக்கு? போலீஸ்காரன் தான் எதுக்கு? சொல்லுங்க அண்ணே!''

''ஹூம்!'' – பெருமூச்சு விட்டார் குண்டு போலீஸ்காரர். ''இருந்திருந்து கிடைச்சது ஒரு கேஸ். அவனுமில்லே தப்பிவிட்டான்.

டைரக்டருக்கு இலக்கணம்



அந்த டைரக்டர் மிகப் பிரசித்தி பெற்றவர். டைரக்டர் என்ற சொல்லுக்கு அவரே பொருளானவர். ஒரு படத்தில் ஒரு நடிகையை மிக விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணியச் செய்து படம் பிடித்தார். இதைக் கண்ணுற்ற அவரது நண்பர் ''இவ்வளவு விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை எதற்கு அணிவிக்க வேண்டும்? படத்தில் இதன் மதிப்பு தெரியவா போகிறது?'' என்று கேட்டார். அதற்கு அந்த டைரக்டர் ''நண்பரே! படம் பார்ப்பவருக்கு இதன் மதிப்புத் தெரியப்போவதில்லைதான். ஆனால் இதை அணிந்துகொள்ளும் நடிகைக்குத் தெரியும் அல்லவா? இவ்வளவு விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருக்கிறோம். அப்படியானால் நமது நடிப்பு எவ்வளவு உயர்வாக இருக்க வேண்டும் என்று கருதி நடிப்பாள். நடிப்பும் சிறப்பாக அமைந்து விடும்'' என்றார். இப்படிக் கூறியவர் ஸெஸில் பி. டெமில்.

நகவல்: அ. பாண்டியராசன்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

தம்பி கவனிச்சியா, கிழவனாயிருந்தாலும் என்ன ஓட்டம் ஓடினான்னு பார்த்தியா? இருக்கட்டும்...இருக்கட்டும்...என்னிக்காவது அவன் மாட்டிக்கிட்டால் அவனை இலேசில் விடப் போவதில்லே.''

''அண்ணே!'' என்று கூவியவாறு கட்டிக் காட்டினார் ஒல்லி போலீஸ்காரர். ''அதோ ஒரு கேஸ்!''

சற்றுத் தொலைவில் அநாதையாகக் கிடந்தது கறுப்பு பர்ஸ். போட்டி போட்டு ஓடிப் போய் ஒல்லிப் போலீஸ்காரர் எடுத்த அந்தப் பர்ஸைச் சண்டை போட்டுப் பிடுங்கிக்கொண்டார் குண்டு போலீஸ்காரர். ''யாருடையது இது?'' என்று அவர் அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் 'போலீஸ் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?' என்ற குரல் கேட்டது. திறக்கவிருந்த பர்ஸை மூடி முதுகுப் பக்கமாக மறைத்துக் கொண்ட குண்டு போலீஸ்காரர் திரும்பிப் பார்த்தார்.

ஒரு புதுத் தம்பதியினர் அங்கே நின்று கொண்டிருந்தார்கள்.

''நேரே போய் வலது பக்கம் மேடு ஏறிச் செல்ல வேணும்!'' என்று விளக்க ஆரம்பித்த ஒல்லிப் போலீஸ்காரரை அடக்கிவிட்டு, குண்டு போலீஸ்காரர் கேட்டார்: ''என்ன

விஷயம்! எதற்காகப் போலீஸ் ஸ்டேஷனைத் தேடுகிறீர்கள்?''

''இவள் பர்ஸைத் தொலைத்து விட்டேன். அப்போதிருந்து என்னை வறுத்தெடுக்கிறாள்'' என்று சோகத்துடன் பதிலளித்தான் கணவன். ''போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்யப் போகிறோம்!''

''பர்ஸா?'' என்ற குண்டு, ஒல்லியைப் பார்க்க, அவரும் இவரைப் பார்க்க, இரண்டு பேரும் அவர்களைப் பார்த்தார்கள். ''அடையாளம் என்ன?''

''கறுப்புப் பிளாஸ்டிக் உறையில், ஸ்டீல் பிடி போட்டது!''

''இதுவா?'' என்று குண்டு எடுத்துக்காட்ட, பூரித்துப் போய்விட்டார்கள் அவர்கள். ''இதேதான்!'' என்று பெற்றுக் கொண்டவர்கள் ஆயிரம் தரம் போலீஸ்காரர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு ஹோட்டலுக்குள்ளே போய்விட்டார்கள். பெண்களின் டம்ப்பப் பைகளுள் ஒரே மாதிரியானவை இரண்டு இருக்கக் கூடும் என்றும், இது தங்களுடையது அல்ல என்றும் ஏனோ அவர்களுக்கு அப்போது தோன்றவில்லை.

கேஸ் கண்டுபிடித்து, மர்மத்தையும் விடுவித்து, நல்ல முடிவுக்கு வந்த திருப்தியுடன் அப்பால் நடந்தார்கள் அவ்விரு போலீஸ்காரர்களும்.

''நீ அறைக்குப் போ! நான் கடிதாக ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன்'' என்ற அவள் கணவன் பின் தங்கிவிட, மனைவி, பவானியுடைய பர்ஸைத் தன்னுடையதென்றே கருதித் தோளில் உல்லாசமாகத் தொங்க விட்டுக் கொண்டு நடந்தாள்.

அறையில் நுழைந்தவளுக்குக் குளித்தால் தேவலாம் போலிருக்கவே, பர்ஸை மேஜையின் மேல் வீசி விட்டுக் குளியலறைக்குள் நுழைந்து கொண்டாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஷவர் பாத்தின் 'கர்....கர்' என்ற சிறல் கேட்க ஆரம்பித்தது.

கடிதம் ஒன்றைப் படித்துக் கொண்டே வந்த கணவன் அறைக்குள் நுழைந்து கட்டிலில் அமரப் போனான். அப்போது வாசலில் ஏதோ நிழலாடுவதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தான்.

சலவைத் தொழிலாளி வெளுத்த உருப்படிகளுடன் நின்று கொண்டிருந்தான். அவற்றை வாங்கி வைத்துக் கணக்குப் பார்த்துவிட்டுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்டினான். ''சில்லறை இல்லையே!'' என்பதுபோல் சலவைத் தொழிலாளி கையை விரித்தான். தன் மனைவியின் கறுப்புப் பர்ஸ் மேஜை மீது இருப்பதைக் கவனித்தான் கணவன். அதைப் பிரித்துக் கைவிட்டவன் திடுக்கிட்டு விட்டான். இரண்டொரு நிமிஷங்கள் பிரமை பிடித்தாற்போல் நின்றிருந்தவன், சலவைத் தொழிலாளியின் கனைப்புக் குரல் கேட்டதும், பணம் எடுத்து வந்து கொடுத்தனுப்பினான். கொஞ்சநேரம் ஏதோ யோசித்த படி நின்றவன், சந்தேகக் குரலில் கேட்டான்: ''இந்தா! இந்தப் பர்ஸ் உன்னுடையதுதானா? உள்ளே இருப்பது எல்லாம் உன்னுடையவை தானா?''

''ஆமாம்! ஏன்?'' என்ற குளறல் பதிலாக வந்ததும், இனி சந்தேகத்துக்கே இடமில்லை என்று தோன்றிவிட்டது அவனுக்கு. நெற்றி நரம்பு புடைக்க ஆத்திரத்துடன் குளியலறைக் கதவையே முறைத்துப் பார்த்தவன், சட்டென்று ஒரு காகிதத்தை எடுத்து எழுதலானான். ''துரோகி! நீ இவ்வளவு பெரிய மோசக்காரியாயிருப்பாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நான் போகிறேன். என்னை ஏமாற்றி என் தலையில் உன்னைக் கட்டிய உன் அப்பனிடமே நீ போ!'' இப்படி எழுதிக் கையெழுத்தைப் போட்டவன், பெட்டியைத் தூக்கிக் கொண்டு, வாசலுக்கு வந்தான். அதிலும் ஆத்திரம் தீராதென்று தோன்றியது அவனுக்கு. திரும்பிச் சென்று, அந்தக் கறுப்பு டம்ப்பப் பையைக் கையில் எடுத்துக் கொண்டான். ''நாசமாய்ப் போனவளே! நன்றாகத் தவித்துப் போ!'' என்று கறுவியவாறு, அந்த டம்ப்பப் பையையும் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான்.

குளியலறைக்கு வெளியே நடக்கும் விபரீதத்தைக் கொஞ்சமும் அறியாத அந்தப் பெண், ஷவர் தண்ணீரை வாயால் நிரப்பிக் கொள்ளுவதும், 'புர்'ரென்று உமிழுவதுமாகவே இருந்தாள். மீண்டும் வாய் நிறைய நீருடன், ''சில்லறை கிடைஷ்ஷ்தா?'' என்று கேட்டாள். பதில் கூறக் கணவன் அங்கிருந்தால்தானே?

ஹோட்டலுக்கு வெளியே வந்த அவன் புறப்படத் தயாராக இருந்த மதுரை பஸ்ஸில் ஏறிக்கொண்டான். கொஞ்ச தூரம் வரை போனபிறகுதான் கவனித்தான், தன் மடியில் டம்ப்பப் பை ஒன்று கொலு வீற்றிருப்பதை. பெண்களுக்குரிய டம்ப்பப் பை அவன் மடியில் இருப்பதை எல்லோரும் கேலியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் கூச்சத்துடன் சிணுங்கியவன் டம்ப்பப் பையை ஜன்னல் வழியே கோபத்துடன் வீசி எறிந்தான்.

'சீ! இந்த டம்ப்பப் பையால்தானே நிம்மதியே போய்விட்டது?' என்று நினைத்தது அவன் மனம். டம்ப்பப் பை மேலே மேலே பறந்து போய்க் கீழே கீழே இறங்கி என். ஸி. ஸி. கொடிக் கம்பத்துக்கு அருகில் கும்பல் கூடிப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த எமன்களின் நடுவிலே விழுந்து அவர்களையே மிரள வைத்தது.

காலை நிகழ்ச்சியைப் பேச்சு சுவாரஸ்யத்தில் அதற்குள் மறந்து போயிருந்தவர்கள் தங்கள் மத்தியில் வந்து விழுந்த பர்ஸைக் கண்டதும் கும்மாளத்துடன் பிரித்துப் பார்த்தார்கள். மறுவினாடி 'பே' என்று அலறினார்கள். உள்ளே பேய் ஒன்று பல்லிளித்துக் கொண்டிருந்தது! பர்ஸைத் தூக்கித் தூர எறிந்துவிட்டு ஓடோடித் தங்கள் கூடாரத்தினுள்ளே நுழைந்து கொண்டார்கள், மகேந்திரன் உள்பட அனைவரும்.

பர்ஸிலிருந்து வெளிப்பட்டு, புல் தரையில் வந்து விழுந்துவிட்ட அந்தப் பொய்ப் பல் 'செட்' அனாதையாகி, பயங்கரமாக 'ஈ' என்று இளித்துக் கொண்டே யிருந்தது!


LIPTON'S
FINEST
GOLDEN DUST TEA
தரத் தேயிலைத் தூள்களிலே
தனிப்பெருமை வாய்ந்தது
லிப்டன்ஸ்
ஹிமாலயன் கோல்டன்
டஸ்ட் டீ
குணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள். இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள்—உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள். நிச்சயமாக இதை ரசித்து நீங்கள் மகிழ்வீர்கள்—ஆம்!—அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத் தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தனிப்பெருமை வாய்ந்தது. தன்னிகரற்றது என்பது உண்மை.
LIPTON
லிப்டன்
என்றாலே
நல்ல டீ

இரு பெரும் வைரங்கள்

'ராகம்'

கோஹினூர், நீல வைரம் போன்றவைகளை அளித்த பெருமை இந்தியாவுக்கு உண்டென்றால், மிகப் பெரிய வைரங்களான குல்லினன், எக்ஸெல்ஸியோ ஆகியவற்றை அளித்த பெருமை தென் ஆப்பிரிக்காவைச் சேருகிறது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள பிரிமியர் வைரச் சுரங்கத்தில் 1905ம் ஆண்டில், மனிதனுக்குக் கிடைத்துள்ள வைரங்களிலேயே மிகப் பெரிதான குல்லினன் வைரம் கேப்டன் வெல்ஸ் என்கிற சுரங்க இன்ஸ்பெக்டரால் கண்டெடுக்கப்பட்டது. சுரங்கச் சுவரொன்றில் இவ்வைரத்தின் ஒரு முனை வெளியே நீட்டிக் கொண்டு ஜொலித்துக் கொண்டிருப்பதை அவர் கவனித்தார். அதைச் சுவரிலிருந்து பெயர்த்தெடுத்துப் பார்த்தபொழுது அவரால் தம் கண்களையே நம்ப முடியவில்லை! அவ்வளவு பெரிய வைரமாக அது விளங்கியது. அப்பொழுது அதன் எடை 3025 காரட்டுகள்; அதாவது ஒன்றரை பவுண்டு! இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட வைரங்களில் மிகப் பெரிதான பிட் வைரத்தின் எடை 410 காரட்டுகள் தானே! அப்பழுக்கில்லாமல், விரிசல் ஏதும் இல்லாமல் அவ்வளவு பெரும் வைரம் விளங்கியது அற்புதத்திலும் அற்புதம்! அவ்விலை மதிப்பற்ற வைரத்துக்கு அப்பொழுது பிரிமியர் சுரங்கத்துக்குத் தலைவராயிருந்த குல்லினன் என்பவரின் பெயர் சூட்டப்பட்டது.

அவ்வைரம் கண்டெடுக்கப்பட்ட செய்தி எட்டியபொழுது அந்தச் சுரங்க முதலாளிகள் பெரிதும் ஆனந்தமடைந்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு சஞ்சலமும் ஏற்பட்டது. அதற்கு முன்பு இரண்டு வருடகால அளவில் அதே சுரங்கத்திலிருந்து இருபத்திரண்டு பெரிய அளவு வைரங்கள் கிடைத்திருந்தன. அத்துடன் குல்லினனும் சேரப் போக உலக வர்த்தகத்தில் பெரும் வைரங்களின் விலை சரிந்துவிடுமோ என்கிற பயம் அவர்களுக்கு வந்து விட்டது. மற்றொரு கவலையும் அவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கு என்ன விலை நிர்ணயிப்பது? அதன் மதிப்புக்கேற்ற விலையைக் கொடுத்து யாராவது வாங்க முன்வருவார்களா, மாட்டார்களா? கடைசியில் இந்தப் பிரச்னைகளுக்கு முடிவு காண டிரான்ஸ்வால் அரசாங்கம் உதவி செய்தது. அது இவ் வைரத்தை 800,000 பவுண்ட் விலை கொடுத்து வாங்கி அதைப் பிரிட்டிஷ் மன்னர் ஏழாம் எட்வர்டுக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுக்க முன்வந்தது.

அது திருடர்கள் கையில் விழாமல் லண்டன் செல்ல வேண்டுமே! அதற்கு டிரான்ஸ்வால் அரசாங்கம் ஒரு யுக்தியைக் கையாண்டது. ரிஜிஸ்தர் செய்யப்படாத சாதாரண பார்சலில் அதை லண்டனுக்கு அனுப்பி வைத்தது. அவ்வளவு விலைமதிப்புள்ள வைரம் சாதாரண பார்சலில் செல்லக் கூடுமென்று எந்தத் திருடன் எதிர்பார்த்திருக்க முடியும்? அது பத்திரமாக லண்டன் சென்று சேர்ந்தது! அது 1907ம் ஆண்டில் மன்னருக்குப் பரிசாக அளிக்கப்பட்டு அரசாங்கப் பொக்கிஷ சாலையை அடைந்தது.

அவ்வைரத்தை வெட்டிப் பட்டை தீட்ட வேண்டுமல்லவா? அரசர் நிபுணர்களைக் கலந்தாலோசித்து அதை ஹாலந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற ஆஷ்ஷெர் கம்பெனிக்கு அதற்காக அனுப்பி வைப்பது என்று தீர்மானித்தார். அது பத்திரமாக அங்கே போய்ச் சேர வேண்டுமே. மறுபடி மற்றொரு யுக்தி கையாளப்பட்டது.

ஆஷ்ஷெர் கம்பெனியின் தலைவர் லண்டனுக்கு வரவழைக்கப்பட்டார். வைரத்தைப் பரிசோதிப்பதற்காக அவர் லண்டன் வந்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. ஒரு சில நாட்களில் பத்திரிகைகளில் மற்றொரு செய்தியும்



வெளியாயிற்று — திருடர்களை ஏமாற்ற மறுபடியும் அவ்வைரம் சாதாரண பார்சலில் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதாக. அந்தச் செய்தி வெளி வந்த அடுத்த நாளே ஆஷ்வெர் கம்பெனியின் தலைவர் அவ்வைரத்தைத் தமது சட்டைப் பையில் வைத்துக் கொண்டு கப்பலேறி லண்டனுக்குப் பயணமானார்! அவரிடம் வைரம் இருக்கிறது என்பதை யார்தான் சந்தேகித்திருக்க முடியும்?

வைரத்தைக் கண்டெடுப்பது எத்தனை சிரமசாத்தியமான காரியமோ அதைவிட மிகவும் சிரமசாத்தியமான காரியமாயிருந்தது அதைப் பாதுகாப்பது. அரும்பாடுபட்டுக் கண்டுபிடித்த வைரத்தைத் துளிக் கூடச் சிரமப்படாமல் தட்டிக்கொண்டு போக எத்தனையோ தந்திரசாலிகள் காத்திருந்தனர். பட்டை தீட்ட வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் வைரங்களின் விஷயத்தில் மிக மிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டியிருந்தது. பல மதியூகிகளின் தீர்க்காலோசனையின்மேல் வைரத் திருடர்களின் கைகளில் வைரம் சிக்காமலிருக்கப் பலவிதமான தந்திரங்கள் கையாளப்பட்டன. அதே சமயத்தில் வைரத் திருடர்களும் புதுப் புது யோசனைகள் செய்தவண்ணமாயிருந்தனர்.


குல்லினன் வைரத்தை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்த ஹாலந்து வைர நிபுணர்கள், அதனுள்ளே சிறு பிளவொன்று காணப்பட்ட காரணத்தால், அதை அப்படியே பட்டை தீட்டாமல், அதை இரு பெருங் கட்டிகளாகவும் மற்றும் சில சிறு கட்டிகளாகவும் பிளந்து அவற்றுக்குப் பட்டை தீட்டுவது என்று தீர்மானித்தார்கள். அதன்படி செய்த பொழுது, 530 காரட், 317 காரட் எடையுள்ள இரு பெரும் வைரங்களும், 4 காரட்டிலிருந்து 92 காரட் வரை எடையுள்ள ஏழு சிறு வைரங்களும் கிடைத்தன. 530 காரட் வைரம் குல்லினன் ஒன்று என்றும், 317 காரட் வைரம் குல்லினன் இரண்டு என்றும் பெயர் பெற்றன. குல்லினன் ஒன்று பிரிட்டனின் செங்கோலிலும், குல்லினன் இரண்டு மகுடத்திலும் பொதிக்கப்பட்டன. மற்றவை பல ஆபரணங்களில் பொதிக்கப்பட்டன.

ஐந்தாம் ஜார்ஜ் தாம் மன்னராகப் பதவி பெற்ற போது, குல்லினன் ஒன்று என்கிற பெயரை 'ஸ்டார் ஆப் ஆப்பிரிக்கா' என்று மாற்றி அமைத்தார். அப்பொழுது அவர் கூறியது: ''பிரிட்டிஷ் பேரரசின் மக்களுக்குச் சொந்தமான இப்பெரும் வைரம் எந்தக் குறிப்பிட்ட குடிமகனின் பெயரையும் தாங்குவது சரியல்ல; பேரரசின் ஒரு பகுதியின் பெயரைத் தாங்குவதே சிறந்தது.''

ஃ ஃ ஃ

அளவில் குல்லினனுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படும் எக்செல்சியோ என்கிற பெரும் வைரம் தென்னாப்பிரிக்காவில் 1893ம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டது. கண்டெடுக்கப்பட்ட பொழுது அதன் எடை 970 காரட்டுகள். இதை வாங்குவதற்கு யாரும் முன்வராத காரணத்தால் பத்து ஆண்டுகள் கழித்து விலை குறைக்கப்பட்டு இது விற்கப்பட்டது. இது ஹாலந்தில் இருபது கற்களாகப் பிளக்கப்பட்டு, அவை பட்டை தீட்டப்பட்டன. அவை அனைத்தும் 100 காரட் எடைக்குக் குறைவான வைரங்களே!

முதலின் மதிப்பு!





வீட்டில் வெள்ளி விழா

'ப்ரொட்யூஸர்' தியாகராஜன் செட்டியார் ரொம்ப ரொம்ப வேகமாக நடந்து கொண்டிருந்தார், அந்த ஹாலைச் சுற்றிச் சுற்றி! தன் படத்தில் தானே கதாநாயகன் வேஷம் போட்டுக் கொள்ளும் எண்ணத்தால் ஏற்பட்ட பயிற்சி அல்ல இது. இப்படி அதிஅதி வேகமாக நடந்தால் அவர் அதிக சிந்தனை வயப்பட்டிருக்கிறார் என்று பொருள்.

அது என்ன அதிகச் சிந்தனை, அதிசயச் சிந்தனை என்கிறீர்களா? அடுத்த படத்தின் 'பைனான்ஸ்'க்கு யாரைப் போய்ப் பிடிப்பது என்ற யோசனையும் அல்ல.

இதோ விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். என்னைத் திட்டாதீர்கள்.

செட்டியாருக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு தினம் விரைவில் வர விருக்கிறது. இதை நினைத்தவுடன் செட்டியாருக்கே சினிமா 'டிரிக் ஷாட்' மாதிரி தூக்கிவாரிப் போட்டது! தமக்கு அறுபது வயதாகிறதா?

செட்டியாரால் நம்பவே முடியவில்லை!

இன்னும் வாலிபத்தின் முறுக்கு அவரிடமிருந்து விடைபெறவில்லை! சினிமா நடிகர்களிடமும், நடிகைகளிடமும் 'இளமையின் இரகசியம், இளமையின் இரகசியம்' என்று அடித்துக் கொள்கிறார்களே, அவர்கள் எல்லோரும் செட்டியாரிடமும் நிறையக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட செட்டியாருக்கா அறுபது வயது?

இந்த விழாவைக் கொண்டாடுவதா, வேண்டாமா என்ற குழப்பம்தான் அவரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது! இப்போது மணி விழா என்று அறுபதாம் ஆண்டைக் கொண்டாடிக் கொள்வதும் ஒரு வகை 'பாஷனா'கி விட்டது. மேலும், செட்டியாருக்கு இப்போது 'சினி பீல்டி'ல் ஸ்டார் கொஞ்சம் நன்றாக இருந்தது. இந்தச் சமயத்தில் இந்த விழாவை வைத்துக் கொண்டால் பரிசுகளும் நிறைய வரும். நாளைக்கு நிலைமை எப்படியோ? அதெல்லாம் சரி, இந்த மணி விழாவைக் கொண்டாடினால் அவருக்கு வயது அறுபது என்பது திட்ட வட்டமாகத் தெரிந்து விடுமே! அதற்கென்ன செய்வது? பெரிய பெரிய நடிகைகளை 'புக்' பண்ணப் போகும் சமயத்தில் —

'என்ன செட்டியார் தாத்தா?' — என்று அவர்கள் கேலியுடன் குறும்பு பண்ண ஆரம்பித்து விட்டால்....?

யோசனையில் மூழ்கியிருந்த செட்டியாருக்கு யாரோ தம் மீது மோதியது... தவறு ...தான் யார் மீதோ மோதியது தெரிந்தது! திடீர் விபத்து! செட்டியார் சுய உணர்வு பெற்றார். வந்தது.....?

''அட.... நீர் இன்னும் சாகவில்லை?''

செட்டியாரின் கேள்வி கேட்டு வந்தவர் விழுந்து விழுந்து சிரித்தார். வந்தவர் பழம் பெரும் நடிகரான முத்துசாமி. அவர் சினிமாவில் சேர்ந்ததே நாற்பதாவது வயதில். ஏதோ ஓர் படத்தில் ஒரு கிழட்டுத் தகப்பனாராக நடித்து இருமி இருமிச் செத்து உயிர் விட்டார். அதோடு கதை முடிந்ததா? அடுத்தது ஒவ்வொரு படத்திலும் அவர் இருமி இருமிச் சாக வேண்டிய நிலைமைதான்! எனவேதான், இந்த நடிகரைக் கண்டதும் செட்டியாருக்கே சந்தேகம் வந்து விட்டது, மனுஷன் செத்தானா அல்லது வாழ்கிறானா என்று!

''ஸார்.... சரியான கேள்வி கேட்டீங்க. நானும் இருபத்தி அஞ்சு வருஷமா படங்களிலே நடிக்கிறேன். அத்தனை படங்களிலும் இதே வேஷம்தான். சின்ன வயசிலே எல்லோரையும் பாடாய்ப்படுத்துவேனும் சார். அதாவது விடுகதை நிறையப் போடுவேனும்.

'' கிகி மகன்
மிமி செத்தான் ''

— இப்படி எழுதி எல்லோரையும் படிக்கச் சொல்லுவேனும். அவங்க திகைக்கறப்போ— 'இருமி மகன் இருமிச் செத்தான்.' அப்படின்னு புதிரை விடுவிப்பேனும். இந்தப் பாவம்தான் ஸார் என்னை இன்னும் துரத்துது. இருபத்தி ஐந்து வருஷங்களாக சினிமாவிலே நடிக்க வெள்ளிவிழாக்கூடக் கொண்டாடியாச்சு......''

இதைக் கேட்டவுடன் திடீரென டப்பா டான்ஸுக்கு டைரக்டர் சொல்லும்படி குதிப்பவர் போல் சடாரெனக் குதித்தார் செட்டியார்!

''என்ன சொன்னீங்க....? வெள்ளி விழா.... வெள்ளி விழா.... ஆஹா.... வெள்ளி விழா....''

இருமல் தாத்தாவுக்கு நிஜமாகவே இருமல் வந்துவிட்டது. செட்டியார் பதறினார்.

''ஓய்.... நீர் இருமாதிரும். நீர் இருமினால் எனக்குப் பயமாய் இருக்கு. நீர்



இப்போதைக்குப் போய் வாரும். என் அடுத்த படத்தில் உமக்கு நிச்சயம் இருமல் சாவு சீன் இல்லே.....'' என்று அவரைப் பலவந்தமாக அனுப்பி வைத்த செட்டியார் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார்.

இப்போது அவர் சனிசேரில் அமர்ந்து கொண்டு யோசித்தார். ஆஹா.... வெள்ளி விழா... அதுதான் நல்ல ஐடியா. ஒரு கல்லில் இரண்டு மாங்காய். செட்டியாருக்கு மணமாகி இருபத்தி ஐந்து வருடங்கள் ஆகின்றன. ஆம், அவரது முப்பத்தி ஐந்தாவது வயதில்தான் அவருக்குத் திருமணம். எப்படியானால் என்ன, ஆறும் நாலும் பத்து தான்; ஐந்தும் ஐந்தும் பத்துதான்! கல்யாண தினத்தின் வெள்ளிவிழாவைக் கொண்டாடுவது போல் பத்திரிகை அச்சடித்து சஷ்டிஅப்தபூர்த்தியையும் கொண்டாடி விட்டால் போச்சு!

காரியத்துக்குக் காரியம், பரிசுக்குப் பரிசு. அவர் வயதின் இரகசியமும் காப்பாற்றப் படும். செட்டியாருக்குக் குஷி காதல் சீன் வேகத்தில் (இங்கிலீஷ் படத்தின் காதல் சீன் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம்; தமிழ்ப் படத்திலும் இப்போது அதைவிட நெருக்கமாகவே காட்சிகள் இருக்கின்றனவே!) கட்டுக்கடங்காமல் தவறு....தவறு கட்டிப் புரண்டு உருண்டு ஓடியது.

ஃ ஃ ஃ

செட்டியாருக்கு வெள்ளிவிழா என்... கேட்டாலேன். 'செட்டியார் என்ன பத்திரிகையா வெள்ளிவிழாக் கொண்டாட' என்று முதலில் ஒரு சிலர் நினைத்தனர். பிறகு இதுவும் ஒரு புதுமை என்று அவர் கருத்தை ஆமோதித்தனர். செட்டியாரின் புகைப்படங்களுடன் வாழ்க்கை வர்ணனை பத்தி பத்தியாகப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. பிறந்த தேதி மட்டும் எதிலும் வரவில்லே. அதுதானே சஸ்பென்ஸ்! செட்டியார் எடுக்கும் படங்களில் மட்டும் 'சஸ்பென்ஸ்' இருந்தால் போதுமா, என்ன?

அதோ சினிமா நடிகை சியாமளாதேவி, கலாவதி, காயத்திரி, ராதிகா இதோ நடிகர்கள் ஊரங்கசிப் மணியன், ஆர்.ஆர். ஹாஸ்ய நடிகர்கள் க. ரமேஷ், ஆஹா... ஒவ்வொருவரும் வந்ததே கண்கொள்ளாக் காட்சி. அவர்கள் தந்த பரிசுகள்தான் செட்டியாருக்கு மனம் கொள்ளாக் காட்சி.

எத்தனை வாழ்த்துக்கள் எத்தனை பவுன்கள்! செட்டியாருக்குப் பெருமை பிடிபடவில்லே.

ஆயிற்று.... முகூர்த்தத்துக்கு நேரமாகி விட்டது. செட்டியாரும் தர்மபத்தினியும் (ஸ்.... இரகசியம்.... செட்டியாரின் தர்ம பத்தினி வெள்ளிவிழாக் கொண்டாட வேண்டியவள், அதாவது அவளுக்கும் செட்டியாருக்கும் கல்யாணம் நடந்துதான் இருபத்தி ஐந்து வருடமாகிறது. அந்தப் புனிதவதி எங்கோ ஒரு கிராமத்தில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறாள். இதோ செட்டியாரின் அருகில் அமர்ந்திருப்பவள் அதர்மபத்தினி. அதாவது அந்தத் தர்ம பத்தினிக்கு 'அலையஸ்' ஸாக வந்தவள் — பத்து வருடங்களுக்குமுன் இவளைச் செட்டியார் அழைத்து வந்ததாகக் கேள்வி. அல்லது இவள் அவரை அழைத்து வந்தாலும் வந்திருக்கலாம்.) மேடையில் அமர்ந்தனர்.

என்ன என்னமோ மந்திரஉச்சாரணங்கள். ஏதோ மந்திர ஜபம் ஜபித்த நீராம்! செட்டியாரின் தலையில்தான் கொட்டினார்களே.... சரியாகக் கொட்டக் கூடாது!

நீர் கொட்டிய வேகத்தில் செட்டியாரின் தலையின் வீபாரின் டோபா பிய்த்துக் கொண்டு வெளிப்பட்டதே, பார்க்க வேண்டும்!

டோபாவை வெளியேற்றிய மண்டை ஓரிரு வெள்ளி மயிர்களுடன் பளபளவெனப் பளபளத்து நிற்க, கூடி இருந்த கூட்டம் அழகின் இரகசியத்தைக் கண்டு சிரிப்பதும், வியப்பதும் இடையில் இனைறி நிற்க, கையில் காமிரா இருந்தும் சரியான நேரத்தில் இந்தக் காட்சியைக் 'கிளிக்' பண்ணிக் கொட்டை எழுத்தில் – 'வெள்ளி விழாவில்— வெள்ளி மண்டை வெளிப்பட்டது!' என்று பரபரப்பான செய்தியை அல்லது கடர்கட — தவறு — பளப்பள செய்தியை வெளியிடும் அரிய வாய்ப்பினை இழந்து விட்டோமே என்று பிரபல ''பணத் தொந்தி''யின் பத்திரிகை நிருபர் தவித்து நிற்க, இதற் கிடையில் செட்டியார் பரிதாபமாக எழுந்து நின்று தம் இழந்த டோபாவைப் பரிதாப மாகப் பார்த்தார்.

ஐயனே! அது காற்றிலும் கடுவேகமாகத் தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டுச் சாக்கடையில் விழுந்து விட்டதே!

இந்த அவசரத்திலும் குழப்பத்திலும் அவர் வாழைப்பழத் தோலின் மீது கால் வைக்க வேண்டும், பாவம்! வைத்தவுடன்...?

கீழே விழுந்த அதிர்ச்சியில் அவர் பல் செட்டும் சொல்லிக் கொள்ளாமல் விடை பெறவே, ஒரே நொடியில் அழகின் அத்தனை இரகசியங்களும் வெளிப்பட்டன.

''ஐயையோ அம்மம்மா... எனக்கு வெள்ளி விழா வேண்டாம்....வேண்டாம்...''


செட்டியார் இரைந்து அலறினார்.

''இதென்னங்க இப்படிப் பட்டப் பகல்லே சொப்பனம் கண்டு பேத்தறீங்க?''

செட்டியார் கண் விழித்தார். கனவு... கனவு! அத்தனையும் கனவு! வெள்ளி விழாவைப் பற்றித் திட்டம் போட்ட வண்ணம் சனிசேரில் சாய்ந்தவர் கனவா கண்டார்!

ஆனாலும் எவ்வளவு உண்மை! தம்மையு மறியாமல் தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார் செட்டியார். தலை தலையில் இருந்தது. பல் வாயில் இருந்தது. அப்பாடா! ஒரு நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது அவ ரிடத்தில். 'எதற்கு இந்தப் போலி வேடம்! சஷ்டியப்த பூர்த்திதான் கொண்டாடவேண் டும். அதற்குரியவளைத்தான் அதனிடத்தில் அமர்த்த வேண்டும்.'

செட்டியார் தீர்மானத்துடன் எழுந்தார். ஒரு 'ப்ரட்யூஸ'ரின் தீர்மானம் எவ்வளவு தூரம் செயலாக்கப்படும் என்ற உண்மை எனக்குத் தெரியாது!


சுளுக்குகள்
வீக்கங்கள்
பிடிப்பு மற்றும்
தசை வலிகள்
IODEX
METHYL SALICYL
தேய்த்து - வலியைப்போக்கி இதமளியுங்கள்
அயொடெக்ஸ் ®
IODEX
தேகாரோக்கியத்திற்கு மருந்து தயாரிப்பில் முன்னோடிகள்
ஸ்மித் கிளைன் & பிரெஞ்சு (இந்தியா) லிட்., பம்பாய் - 1
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இங்கிலாந்தில் இணைப்பு)



* கல்கி வாழ்க!
* பெங்களூரில் கல்கி வெள்ளி விழா
* மன்றத்தின் பாராட்டு
* திண்டாடுகிறோம்!

கோவில் வரலாறு குன்று இலக்கியங்கள்
மேவும்வை நிக விளக்கங்கள் — பூவினிடைக்
கட்டுரையாய் மக்கள் களிகூறச் செய் 'கல்கி'
எட்டியது வெள்ளிவிழா வே.

இருபத்தைந் தாண்டாய் இலங்கும் சமயம்
மருவும் இலக்கியமும் வாழ — அருந்தொண்டு
செய்யும் அனிக் கல்கி எனும் செய்யதமிழ்
வையமெலாம் ஓங்க மகிழ்ந்து. [வாரஇதழ்

திருமூலர் செய்த திருமந் திரமும்
திருமுருகன் காதைத் திறமும் — அருஞ்செயல்
செய்

தொண்டர் புராணத் தொடரும் வெளியிடு
கொண்டகல்கி வாழ்க குளிர்ந்து

கோயமுத்தூர் வித்துவான் சுந்தரசுவாமிகள்
9–8–66 ஸ்ரீ கௌமார மடாலயம்

பெங்களூர் சாம்ராஜ்பெட் திராவிடக் கழகத்தினர் கல்கி வெள்ளி விழா விலை விக்டோரியன் கழகத்தில் 4–8–66 மாலை கொண்டாடினர்.

திரு நரசிம்மன் எல்லாரையும் வரவேற்று, கல்கி பொதுச் சொத்தாகவே கருதப்படுகிறது என்றும், கல்கி இந்தியாவின் தலைமாய பத்திரிகையாவதற்குக் காரணம், அது உண்மைக் காரணங்களுக்கு — அவை அதிக மக்களால் ஆதரிக்கப்படாத போதும்கூட — பாடுபட என்றும் தயங்காததே என்றும் கூறினார். அடிமை இந்தியாவில் கல்கி மக்களுக்குச் சுதந்திர தாகத்தை ஊட்டியது; இப்போது தனிமனிதரின் சுதந்திரம் பறிக்கப்படுவதை எடுத்துரைத்து வருகிறது என்றார். தனிமனிதனின் உரிமைகள் அரசாங்கத்தால் அளிக்கப்படும் இறாம் அல்ல; கடவுள் ஈந்த அன்பளிப்பு என்றார்.

ஸ்ரீ சீதாராமய்யா, பிரபல கன்னட எழுத்தாளரும், சர்வோதயத் தலைவருமான ஸ்ரீ சித்தவனஹள்ளிகிருஷ்ண சர்மா, ஜி. வேதமூர்த்தி ஆகியோர் பேசிய பின்னர், இனிய பானமும் சிறு குழந்தைகளுக்கு இனிப்பும் அளிக்கப்பட்டன. கல்கியைப் பாராட்டியும் அதற்குப் பல்லாண்டு கூறியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பங்களூர் காரியதரிசி,
4-8-66 சாம்ராஜ்பெட் திராவிடக் கழகம்

ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று கூடிய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம்:

''கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தேச விடுதலைக்கும், தமிழர் சமூக நல்வாழ்வுக்கும், தமிழ் மறுமலர்ச்சிக்கும், அரசியல் விழிப்புணர்ச்சிக்கும் தரமான, வளமான தொண்டாற்றி வரும் கல்கி இதழுக்கும் 'கல்கி' நிறுவனத்தாருக்கும் இம்மன்றம் தம் பாராட்டைத் தெரிவித்துக் கொள்வதுடன் கல்கி ஸ்தாபனம் நீடுவாழத் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை — 4 முல்லைவண்ணன், ஜடாதரன்,
15–8–66 காரியதரிசிகள், பாரதிமன்றம்

இருபத்து ஐந்தாண்டு எழில் நிரம்பி
இனியதமிழ்க் குடிதோறும் மணம்பரப்பி
நறுந்தமிழின் பெட்டகமாய் நாட்டில்நல்ல
நற்கருத்தைத் தாங்கிவரும் நல்லேடு
குறுமுனிவர் ராஜாஜி எனும் பெரியோர்
குறைவற்ற நல்லாசி பெற்று இன்று
பெருந்தொண்டு நாட்டினுக்குப் பெய்து வரும்
பெயருடைய கல்கிபல் லாண்டு வாழ்க!

புலியங்குடி
19–8–66 சி. நடராஜன்

ராஜாஜி முதல் அமைச்சராக இருந்த பொழுது கைத்தறிக்கே கரை போட்ட சேலையும் கரைபோட்ட வேட்டியும் ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தியுடன் ரூபாய்க்கு இவ்வளவு என்று தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்றைய காங்கிரஸ் சர்க்கார் கைத்தறியாளர்களாகிய எங்களைப் புறக்கணித்துக் காந்தியக் கொள்கையைக் கைகழுவி விட்டார்கள். விசைத்தறியை விருத்தி செய்து கைத்தறியை அழித்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது தமிழகத்தில் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் துணித் தேக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக கூட்டுறவுச் சங்கங்களில் போதுமான பொருளாதாரம் இல்லாமையால் என் போன்ற நெசவுத் தொழிலாளர்கள் கூலியில்லாமலேயே நெய்தும் வேலையின்றித் திண்டாடியும் இந்த நாட்டிலே நடைப்பிணங்களாக நடமாடிக் கொண்டிருக்கிறோம்.

கொமாரபாளையம்
17–8–66 எம். கருணாகரன்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை, நூதனமாகவும் முக்கியமாக லௌகீகத் துறையில் உள்ள ஆஸ்திகர்களுக்குப் பிரயோசனப்படும்படி நல்ல படங்களுடனும் பிரசுரம் செய்யப் பிரயத்தனங்கள் செய்து வருகிறோம்.

இதை 108 மகான்களது ஆசீர்வாதத்துடன் வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை எங்கட்குப் பகவான் தந்திருக்கிறார். பல ஸாதுக்கள் இதுவரையில் இம்மாதிரி ஆதரவு தந்துள்ளார்கள்.

இதைக் கண்ணுறும் மகான்கள் தங்களது சௌகர்யமான ஆசிகளையும், சௌகரியப்படி மானால் இந்த் கிரந்தம் சம்பந்தமாக இதர கிரந்தங்கள், மந்திர சாஸ்திரங்கள் இவற்றிலிருந்து சில குறிப்புகளையும் எங்களுக்குத் தந்து எங்களை அனுக்ரஹிக்க வேணும்.

சென்னை—17
6–8–66 'விப்கோ' பிரசுரகர்த்தர்கள்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10




புது அழகுடன் விளங்க

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

சருமத்தைப் பட்டுப்போல் மிருதுவாக வைத்துக்கொள்ளுங்கள்

வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உபயோகித்து உங்கள் சருமத்துக்கு புதுப் பொலிவை அளியுங்கள். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் கரும்புள்ளிகள் தோன்றுவதைத் தடுத்து, எண்ணெய் வழியும் தோற்றத்தை மாற்றி சருமத்தில் வெயிலினாலும் காற்றினாலும் வறட்சியேற்படாமல் பாதுகாப்பளிக்கும். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மட்டுமே உபயோகித்தால்கூட முகம் பட்டுப்போல் விளங்கும். அதன் மீது பவுடரும் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து மணிக்கணக்கில் அப்படியே கலையாமல் இருக்கும்.



சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon